கல்கி

KALKI 19.1.92 ரூ. 3.00

பொன்விழா ஆண்டு

ஆரோக்கியமான குழந்தைகள்-
அழகான சமையலறை!

இப்போது இலை
இரண்டையுமே அளிக்கிறது
"காம்ப்ளான்"
புதிய "ஜார்" பேக்கிலே!

உங்களது வளரும் குழந்தைக்கு இன்றியமையாத ஊட்டத்தை அளிக்கும் நம்பகமான காம்ப்ளான் இப்பொழுது, புதிய, அழகான உபயோகம் மிகுந்த கண்ணாடி ஜாரிலே வருகிறது. அரிசி, பருப்பு, சர்க்கரை, ஊறுகாய் முதலியவைகளை காம்ப்ளான் ஜாரில் நிரப்பி வைத்து சமையலறைக்கு எழில் கூட்டுங்கள்.

இன்றே காம்ப்ளான் வாங்கி, ஜார்களை சேகரிக்கத் தொடங்குங்கள்.

காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு.

தற்போது தேர்ந்தெடுத்த இடங்களில் — 500 கிராம் ஜாரில், சாக்லேட் ருசியிலே கிடைக்கிறது.

GX/60-202 TAM

கர்நாடகத் தமிழர்களின் கண்ணீரைத் துடையுங்கள்!

கோவையைச் சேர்ந்தவர் ராஜு. முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக மைசூர் அருகே உள்ள ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவர். கட்டிட வேலை, கல் உடைக்கும் வேலை என்று தினக் கூலி பெற்று வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்த குடும்பம். கடந்த டிசம்பர் 30-ம் தேதி ஒரு கும்பல் ராஜு வசித்துக் கொண்டிருந்த குடியிருப்புப் பகுதிக்கு வந்தது. ''எல்லாம் ஓடிப் போங்கடா தமிழ் நாட்டுக்கு'' என்றபடி அந்த கும்பல், குடிசைகளுக்குத் தீ வைத்தது. எதிர்ப்பட்ட தமிழர்களையெல்லாம் ஆயுதங்களால் தாக்கி அச்சுறுத்தியது. பெண்களைச் சீண்டி யது. இன்னும் எழுதத் தரமற்ற பல அவ மானங்களைத் தந்தது. தப்பித்தோம், பிழைத்தோம் என ராஜுவின் குடும்பம், கட்டிய துணியுடன் காடு மலைகள் கடந்து தமிழ் நாட்டை அடைந்தது.

''நாங்கள் செய்த பாவம் என்ன?'' என்று குமுறுகிறார் ராஜு. ராஜுவின் குடும்பம் போல் ஒரு லட்சம் குடும்பங்கள் சொந்த நாட்டில் அகதிகளாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.

காலங் காலமாக நல்லிணக்கத்தில் வாழ்ந்தவர்கள். ஒரே நாளில் பிரிந்து நிற் கின்ற இந்த அவல நிலை நிரந்தரமானது தானா? அல்லது ஓடும் மேகங்களைப் (passing clouds) போன்றதா? என்ற கேள் விகள் மனத்தில் எழுகின்றன. இத்தனை வருடங்களாக இரு மாநிலங்களுக்கிடையே நிலவி வந்த கலாசார பரிமாற்றத்தையும் மனித வளப் பரிமாற்றத்தையும் பார்க்கும் போது அந்த பலமான அஸ்திவாரம் அர சியல்வாதிகள் உருவாக்கும் சுயநல மூகம் பங்களால் ஆட்டம் கண்டு விடாது என்றே எதிர்பார்க்க வைக்கிறது.

''கர்நாடகத்தில் காடு மேடுகளைத்

☛ விட்டல்ராவ்

☛ ஜான்டே

☛ பெங்களூரில் தீக்கிரையான பள்ளிக்கூடம்

யில் பிளவு என்பது வரவே முடியாது. காலம் மாறும்; கசப்பு மறையும்'' என்கிறார் சென்னையில் முப்பது ஆண்டுகளாக வசித்து வரும் கர்நாடகத்தைச் சேர்ந்த தொழில் அதிபர் ஏ. ராம்தாஸ்.

காலையில் இரண்டு இட்டிலி, சாம்பாருடன் உடுப்பி ஓட்டலில் நாளைத் துவங்குபவன் தமிழன். இது தவிர தற்போது தமிழ்நாட்டு நகரங்களில் பிரபலமாகிக் கொண்டு வருவது பெங்களூர் அய்யங்கார் பேக்கரிகள். 'தாஸப்பிரகாஷ்'ம் 'உட்லண்ட்ஸ்'ம் இல்லாத சென்னை நகரத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா....!

இவ்வாறு தமிழ்நாட்டுக்குச் சிறப்பு சேர்த்த கன்னடப் பிரமுகர்கள் ஏராளம்.

மாஸ்தி

தேச விடுதலையின் போது சைமன் கமிஷனை எதிர்த்துச் சிறை சென்ற யு. ராம ராவ். அவரது மகன்கள் கிருஷ்ணாராவ், மோகன் ராவ்.

தமிழகச் சட்டமன்ற சபாநாயகராக இருந்து அரும்பணி ஆற்றியவர் கிருஷ்ணா ராவ். ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவப் பணி செய்து அவர்கள் நெஞ்சில் இடம் பெற்றவர் மோகன் ராவ்.

மோகன் ராவ்

உட்லண்ட்ஸ் கிருஷ்ணாராவ்

இருந்திக் கழனி ஆக்கியதிலும் கோலார் தங்கவயலில் உயிரைப் பணயம் வைத்துத் தங்கத்தை வெட்டியெடுத்துச் சாதனைகள் புரிந்ததிலும் தமிழனுக்குப் பெரும் பங்கு உண்டு. கர்நாடக காப்பித் தோட்டங்களில் கடும் உழைப்பை மேற்கொண்டு அந்த மாநிலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் தமிழன்தான். ஏன், பெங்களூரில் இன்றுள்ள சிறு கட்டிடம் முதல், அடுக்கு மாடிக் கட்டிடங்கள் வரை பலப்பல தமிழன் கைபட்டு எழுந்தவைதான். 'விஸ்வ கர்மாக்கள்' என்ற சிறப்பைப் பெற்றவர்கள் தமிழர்கள்.

''தமிழர்களை எதிர்த்து வன்முறையில் இறங்கியிருக்கிறாரே வாட்டாள் நாகராஜ். அவரது கார் ஓட்டுநர் ஒரு தமிழர்தான்.

''பெங்களூரில் உள்ள பொதுத் துறை நிறுவனங்கள், விண்வெளி ஆய்வுக் கூடங்கள் போன்றவற்றில் முக்கியப் பொறுப்பில் இருப்பவர்கள் தமிழர்களே. இலக்கியத் துறையை எடுத்துக் கொண்டால், மாஸ்தி வெங்கடேச அய்யங்கார், ஆர். கே. நாராயணன் போன்றோர் தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்கள் தானே! இன்று இந்த எழுத்தாளர்களால் கர்நாடகம் பெருமைப்பட்டுக் கொள்கிறதே!

'' 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' என்ற கனகதாஸர் பாடலுக்கு ஆடாத தமிழ் நடன மணிகள் கிடையாதே! புரந்தரதாஸரின் கீர்த்தனைகளைப் பாடிப் பிரபலப்படுத்துவதைத் தன் உயிர் மூச்சாகக் கொண்ட எம்.எல். வசந்தகுமாரியை மறக்க முடியுமா? சங்க இலக்கியங்களைக் கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சாதனை செய்தவர் ஏ.கே. ராமானுஜம்.

''இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். அரசியல், சமூகம், கலை, பண்பாடு, இலக்கியம், பொருளாதாரம் என்று சகல துறைகளிலும் கர்நாடகத்தை மேம்படுத்தும் பணியில் தமிழர்கள் நிறைந்திருக்கிறார்கள். இவர்களுக்கிடை

'ஸர்ஜன்களின் தந்தை' என்று போற்றப் படுகிறவர்.

பகுத்தறிவுப் பகலவன் என்று தமிழர் களால் போற்றப்படும் தந்தை பெரியாரின் குடும்பம் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட குடும்பம்தான். ஸ்ரீரங்கத்தில் இருந்து மைசூர் சென்று செட்டிலான குடும் பங்கள் நூற்றுக்கணக்கில் உண்டு. அப்படிப் பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் முதல்வர் ஜெயலலிதாவின் அன்னை சந்தியா. புகைப்பட நிபுணர் நாகராஜராவ், இரிக்கெட் காமெண்ட்ரி புகழ் ஆனந்தராவ், சங்கர நேத்ராலயா மூலம் லட்சோப லட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்கி வரும் டாக்டர் பத்ரிநாத், சங்கீதா காஸெட்ஸ் வெளியிட்டு இசை மயமான சூழலுக்கு உதவும் மகேஷ் என்று கன்னடியர் பட்டி யல் நீள்கிறது. டாக்டர். சாந்தப்பா, டாக்டர். எஸ். வி. ஆர். ஸ்வாமி போன்று கல்விப் பணியில் ஈடுபட்டுப் பிரபலமான கர்நாடகப் பெருமக்களும் தமிழகத்தில் உண்டு. திரையுலகில் தனி இடம் பிடித்த வர்கள் 'சரோஜாதேவி, ரஜினிகாந்த் போன் றோர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இவர்களெல்லாம் தமிழர்களல்ல என்ற சிந்தனையே நமக்கு இதுநாள்வரை எழுந்தது இடையாது. இன்றைக்கு இப்படி யெல்லாம் வேறுபடுத்தி நோக்கி, ஆராய வேண்டிய கட்டாயத்திற்கு நம்மை ஆளாக்கியிருப்பவர்கள் அரசியல்வாதிகள்!

"பங்காரப்பா விஷயம் புரியாமல் விபரீதமாக விளையாடுகிறார்!" என்கிறார் சென்னையில் உள்ள கர்நாடக சங்கத்தின் தலைவர் விட்டல்ராவ். "நாம் அனைவரும் வெளிநாட்டுக்குச் சென்றால் இந்தியன் என்றுதானே சொல்லிக் கொள்கிறோம்.

எம். எஸ். வி.

கன்னடன், தமிழன் என்று பிரித்துப் பார்ப்ப தில்லையே. ஏன், பம்பாய், கல்கத்தா, டில்லி சென்றால் தென் இந்தியர் சங்கம் என்றுதானே வைத்துக் கொண்டிருக்கி றோம். அங்கு நாமெல்லோரும் சேர்ந்து நல்ல பணிகள் பல செய்வதில்லையா? நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. எங்கள் சங்கம் நடத்தி வரும் மேல்நிலைப் பள்ளியில் 90 சதவீதம் பேர் தமிழ் மாண வர்கள்தான். ஆசிரிய, ஆசிரியைகளும் பெரும்பாலும் தமிழர்கள்தான். இந்த பள்ளிக்குக் கர்நாடக அரசு பல காலமாக நிதி உதவி வருகிறது. எந்தவித குழப்பமும் இன்றித் தெளிந்த குளம் போல இருந்த நமது உறவைக் கலக்கிச் சேறாக்கச் சிலர் கல்வீசிப் பார்க்கிறார்கள். இதைச் சராசரி கன்னடக்காரன் புரிந்து கொண்டிருக்கி றான்; தமிழனும் புரிந்து கொண்டிருக்

சரோஜாதேவி

புரந்தரதாஸர்

நாகராஜ ராவ்

ரஜினி

சத்தியாவை 'மனெகெ பாரு' என்று தங்கள் வீட்டுக்கு அழைத்து, கன்னட முறைப்படி தாம்பூலம் கொடுப்பவர்கள் ராம்தாஸ் மற்றும் நிர்மலா ராம்தாஸ். பின்னணியில் மைசூர் சாமுண்டேஸ்வரி. படம் : உத்ரா

இறான். சகிகாரர்கள் சரிந்து போவார்கள். இது நிச்சயம்'' என்று சொல்லி உணர்ச்சி வசப்பட்டார் விட்டல்ராவ்.

விட்டல்ராவ் சொன்னதற்கு நேர் மாறாக பெங்களூர் ராஜாஜி நகரில் நடந்திருக்கிறது. பெரும்பாலும் கன்னடக் குழந்தைகளே படிக்கும் தேசிய ஆங்கிலப் பள்ளிக்கூடம் தீக்கிரையாகி உள்ளது. காரணம் அதன் தலைமை ஆசிரியர் ஒரு தமிழர் என்பதே! ஐம்பது லட்சம் நஷ்டம். ''காவிரிப் பிரச்னைக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் எங்கே போய் படிப்பது?'' என்று 1800 குழந்தைகள் கேட்கின்றன. போலீஸார் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

''காவிரிப் பிரச்னைக்கும், அங்கே தமிழர் தாக்கப்பட்டதற்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அரசியல் லாபத்துக்காகச் சிலர் இந்தப் பிரச்னையைப் பயன்படுத்துகிறார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டிய தில்லை'' என்று சொல்கிறார் சென்னையில் கன்னட பாலிகா என்ற அமைப்பின் செயலாளராக இருக்கும் பிரபா மஞ்சுநாத்.

''ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மற்றொரு மாநிலத்தைச் சேர்ந்தவர்களை அடித்தால், வெளிநாட்டில் உள்ளவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள், மூட்டை முடிச்சுகளுடன் தமிழகம் வருவதை நினைத்தால் கண்ணீர் வருகிறது. தமிழகத்தில் உள்ள கன்னட மக்கள் பெரிய அளவு ஆபத்தில்லாமல் இருப்பதற்குக் காரணம் முதலமைச்சர்தான். அந்த அளவுக்குச் சட்டம், ஒழுங்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அரசியல்வாதிகள் சகோதர மக்களைப் பிரித்து வைத்து, மூளும் உஷ்ணத்தில் சிறிது காலம் குளிர் காயலாமே தவிர, நிரந்தரமாகப் பிரிவை உண்டாக்க முடியாது'' என்று சிரிஞர், கோலாரைச் சேர்ந்த விஜயலட்சுமி.

''பெரியார் மாவட்டம், முதற் கொண்டு மதுரை மாவட்டம் வரை உள்ள கர்நாடகா எல்லையோரத் தொகுதிகளிலிருந்து தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பெரும்பாலும் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தான். அதே போல், பெங்களூர் சாந்தி நகர் தொகுதி, கோலார் தங்க வயல் ஆகியவற்றிலிருந்து கர்நாடகா சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தமிழர்கள்தான்'' என்று ஆரம்பித்தார் எச். வி. ஹண்டே.

''நமக்குள் எந்த பிளவும் இடையாது. பங்காரப்பா என்ற தனிமனிதன் தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நடத்திய மோசமான நாடகம்தான் இது. என் கவலையெல்லாம் பிரதமர் நரசிம்மராவ் இன்னமும் பங்காரப்பாவைப் பதவியை விட்டு அகற்றாமல் வைத்துக் கொண்டிருப்பதுதான். பிரதமருக்கு ஏன் தயக்கம்? இத்தனைக்கும் கர்நாடகத்தின் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்காரப்பாவைப் பதவி விலக்க வேண்டும் என்று கரடியாய்க் கத்திக் கொண்டிருக்கிறார்கள்.

''இனியும் பங்காரப்பா, நீடித்தால் தமிழர்களுக்குப் பிரதமர் மீதுதான் சந்தேகம் வரும். சொத்து, சுகங்களை இழந்த தமிழர்கள் மீண்டும் கர்நாடகாவிற்குச் சென்று தங்கள் வாழ்க்கையை அமைதியான முறையில் துவங்க அவர்களுக்குத் தேவை நம்பிக்கை. எவ்விதத் தொல்லையும் இராது என்று உறுதிமொழி. பங்காரப்பா பதவியில் நீடித்து இருக்கும் வரை, இந்த நம்பிக்கையும், உறுதிமொழியும் தமிழர்களுக்குக் கிட்டாது என்பதைப் பிரதமர் புரிந்து கொள்ள வேண்டும்'' என்றார், நாம் தமிழராகவே ஏற்றுக் கொண்டு விட்ட டாக்டர் ஹண்டே.

- ப்ரியன்

ESTD 1983

ROYAPETTAH BENEFIT FUND LIMITED

RBF

(Central Govt. approved NIDHI Company)
GOKHALE BHAVAN, 8, WEST COTT ROAD,
ROYAPETTAH, MADRAS-600 014. P.O. Box : 5555.
PHONE : 831180, 846445, 831755

FIXED DEPOSIT SCHEME

Period	45 Days	3 Months	6 Months	1 Year	2 Years	4 Years	5 Year RAJA YOGAM
Rate of Interest p.a.	12%	13%	15%	17%	18%	19%	20%

DEPOSIT DOUBLES IN 45 MONTHS - TRIPLES IN 68 MONTHS

பேரனை குபேரனாக்குங்கள் முதலீடு திட்டம்

KUBER DEPOSIT SCHEME

(Title originally created by *RBF*)

Rs. 9,000 - invested for 15 years becomes Rs. 1,40,400 -
Rs. 100 - per month in R.D. scheme becomes Rs. 6,460/-
in 45 Months.

PENSIONERS' PARADISE SCHEME

(Title Originally created by *RBF*)

Interest at 19% will be paid on deposits of Rs. 13,000 and above and one year deposits also (includes Widows & Physically Handicapped) Post dated Interest cheque issued in advance.

RAJAYOGAM DEPOSIT SCHEME

★ 20% Monthly interest payable with post dated interest cheques.
★ Minimum Deposit Rs. 20,000 - Minimum Period Five years.

• தங்க நகைகளின் பேரில் ஒரு கிராமுக்கு ரூ. 300/- வரை கடன் வழங்கப்படும். கல் வைத்த நகைகளுக்கும் கடன் வழங்கப்படும். புதிதாக சேரும் பங்குதாரர்களும் மேற்படி நகைக்கடன் பெறலாம். நகைக்கடன் வாங்கும் போது R.D. கட்ட தேவையில்லை.

சுயமான சேமிப்பு திட்டங்களை உருவாக்கவும், அதற்கு பெயரிடவும் கூட திறமையற்ற சிலர், பிறரை பார்த்து காப்பி அடித்து நிதி நிறுவனங்கள் நடத்த முற்படுகிறார்கள். இதன் காரணமாய் பொதுமக்கள், அவைகள் *RBF*-ன் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் என்று நினைத்துவிடுகிறார்கள். *RBF*-க்கு எங்குமே தற்சமயம் கிளைகள் கிடையாது. எங்களை காப்பி அடிக்கும் நிதி நிறுவனங்கள் விஷயத்தில் பொதுமக்கள் கவனமாய் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

மக்களை ஏமாற்றும் நோக்கில் ∴பண்டு நடத்த முற்படுபவர்களை பொது மக்கள் அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

100 கோடி லட்சியம் - தேடிவரும் நிச்சயம்

ELEGANT

'அஞ்சலி' திரைப்படத்தில் வரும் குழந்தைகள் பெரும்பாலும் பிஞ்சில் பழுத்தது போல் நடந்து கொண்டாலும் அந்தப் படத்தை நம்மால் ரசிக்க முடிந்தது. இதற்குக் காரணம் அந்தக் குழந்தைகளின் மூலமாக, பெரியவர்களின் அசட்டுப் பிடிவாதங்களையும் வரட்டு ஜம்பத்தையும் வெளிப்படுத்தியிருந்தார் இயக்குனர் மணிரத்னம்.

இதே படத்தில் அஞ்சலி பாப்பாவின் அண்ணா அர்ஜுனும் இன்னொரு பையனும் அடித்துப் புரண்டு சண்டை போடுவதையும் - ஒரு போலீஸ்காரர் அவர்களை மிரட்டும் போது இருவருமே ஒருவரை யொருவர் விட்டுக் கொடுக்காமல் நண்பர்களாகி விடுவதையும் காட்டியிருந்தார்கள்.

குழந்தைகளின் இயல்பே அப்படித் தான்.... அவர்கள் எவ்வளவுதான் சண்டை போட்டாலும் மிகச் சுலபமாக மனஸ்தாபத்தை மறந்து மீண்டும் ஒன்று சேர்ந்து விடுவார்கள். வன்மத்தை மனத்தில் தேக்கி வைத்துக் கொண்டிருப்பதுமில்லை... குழந்தைகளின் உலகம் சிறியது. அவர்கள் ஒவ்வொரு நாளையும் புதிதாக வாழ்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய அழுத்தும் கவலைகளோ; கடந்த காலத்தில் நடந்து முடிந்ததைப் பற்றிய அரித்தெடுக்கும் சிந்தனைகளோ அவர்களுக்குக் கிடையாது.

''ஆனால் பெரியவர்கள் இதற்கு நேர் மாறான இயல்புடையவர்கள். சமூகத்தில் அந்தஸ்தும் வாழ்க்கையில் வெற்றியும் பெற வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு மனிதனுக்கும் குறிக்கோளாக இருக்கிறது. இதனால் அவன் இலக்கில் குறுக்கீடுகள் வருவதை அவனால் சகித்துக் கொள்ள முடிவதில்லை.

குறுக்கீடு என்பது பிரமோஷன் கொடுக்காமல் வதைக்கும் மேலதிகாரியின் வடிவத்தில் இருக்கலாம். இந்த மேலதிகாரி ஒய்வு பெறும் போது தரப்படும் பிரிவுபசார விருந்துக்குப் போய் வழியனுப்பும் பெருந்தன்மை பிரமோஷன் மறுக்கப்பட்டவருக்கு இருக்காது.

சரியான சில்லறை தராததால் மிகக் கடுமையாகப் பேசி அவமானப்படுத்தும் 'பஸ் கண்டக்டர்' வடிவத்திலும் குறுக்கீடு வரலாம். கௌரவமான நபர் என்று பெயரெடுக்க வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் முயன்று கொண்டிருக்கும் போது ஜார் சிரிக்கும்படி ஏசும் கண்டக்டர் ஜன்மப் பகையாகி விடுகிறார். ஏசப்பட்ட நபர், அதற்குப் பிறகு அந்த கண்டக்டர் வரும் பஸ்ஸில் ஏறுவதில்லை என்றே கூட தீர்மானித்துவிடக் கூடும்.

குழந்தைப் பருவத்தில் பனிக்கட்டியாய்க் கரைந்து உருகிவிடும் 'ஈகோ' (ego)

குழந்தை உள்ளம் வளர்ந்தபின் வன்மம்!

கவர் ஸ்டோரி :

பாறையாக இறுக ஆரம்பிப்பது எப்போது...? மன முதிர்ச்சியின் ஓர் அங்கம் தான் 'சகோ' வளர்ச்சியும். குழந்தைப் பருவம் மாறி, பொறுப்புணர்ச்சியும் கூட சிந்தனையும் எப்போது தோன்ற ஆரம்பிக் கிறதோ அப்போதே விட்டுக் கொடுக்காத பிடிவாத குணமும் தோன்ற ஆரம்பித்து விடுகிறது.

உண்மையில் இந்தப் போராடும் குணங்கள் ஒரு மனிதனின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு அவசியமானவையே. ஓரள வுக்குச் சிலிர்த்தெழும் குணம் இல்லா தவன், வாழ்க்கையில் எதையுமே சாதிக்க முடியாது. அதனால்தான் இயற்கையே அக் குணத்தை வளர்ச்சியின் ஓர் அங்கமாக்கி யிருக்கிறது. ஆனால், இக் குணம் அவசிய எல்லைகளைத் தாண்டும் போது கௌரவப் பிரச்னைகளை உருவாக்கி வன்மம் வளர்க் கிறது.

பாதுகாப்பும் பராமரிப்பும் குறைந்த

சூழலில் வளரும் குழந்தைகளிடம் (உதா ரணமாக - குடிசைப் பகுதிவாழ் குழந் தைகள்) தற்காப்பு உணர்வும் இயல்புகளும் சீக்கிரமே வேர்பிடித்து விடுவதால் அவர் கள் விரைவாகக் கடினப்பட்டுப் போகி றார்கள்.

பொதுவாக, சராசரியான பாதுகாப்புச் சூழலில் வளரும் குழந்தைகள் மன முதிர்ச்சி பருவத்தை எட்டும் பொழுது அவர்களுக்கு நல்ல வழிகாட்டல் இருக்க வேண்டும். எப்போதும் சண்டை பிடித்துக் கொள்ளும் பெற்றோர் அல்லது வேறு உறவினர் வாழும் வீட்டில் குழந்தைகளும் விட்டுக் கொடுக்காத குணம் படைத்தவர் களாக வளர்கிறார்கள்.

சராசரி சூழலில் வாழும் குழந்தை களிடையே கூட தற்காலத்தில் 'frustration tolerance' எனப்படும் சகிப்புத் தன்மை குறைந்து கொண்டுதான் வருகிறது. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த நாட்களில் எல்லா குழந்தைகளுக்கும் எப்போதும் எல்லாம் கிடைக்காது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் ஓரளவு மனக்கிலேசம் உண்டா கவே செய்யும். ஆனால் அந்த மனக்கிலே சத்தைப் பெரிதாகப் பாராட்டாமல், பொறுத்துக் கொண்டு போகும் சகிப்புத் தன்மை இயல்பாக வளரும். நாளாவட் டத்தில் கிலேசம் குறைந்து சகிப்புத்தன்மை பெருகும்.

ஆனால் கூட்டுக் குடும்ப அமைப்பு மாறி தனிக் குடித்தனங்கள் பெருகி விட்ட தோடு, குடும்பத்துக்கு ஒரிரு குழந்தைகளே உள்ள இந் நாட்களில், குழந்தைகளிடையே frustration tolerance குறைவாகவே உள்ளது.

இந்தச் சூழ்நிலைக்குச் சிறந்த மாற்று, பல மாடிக் குடியிருப்புகளில் குழந்தைகள் வளர்வது. இங்கே பலதரப்பட்டக் குழந் தைகள் சேர்ந்து பொழுதைக் கழிக்க வாய்ப்புக் கிடைப்பதால் கூட்டுக் குடும்பத் தால் பெருகியிருக்கக்கூடிய சகிப்புத் தன்மை வளர்வதற்கு நல்ல சூழ்நிலை கிடைக்கிறது.

ஆனால் பல பெற்றோர்கள் தலை யிட்டு இந்தச் சூழ்நிலையைக் கெடுக்கி றார்கள். தங்கள் குழந்தையின் அழுகுரல் கேட்டால் உடனே ஓடி வந்து சண்டை சச்ச ரவை விசாரித்துத் தீர்ப்பு வழங்க முற்படு கிறார்கள். சிலர் இன்னும் ஒரு படி மேலே சென்று தன் குழந்தையுடன் சண்டை போட்ட சிறுவன் அல்லது சிறுமியின் பெற் றோர்களைத் தேடிச் சென்று சண்டை பிடிக் கிறார்கள். நன்கு யோசித்து, ரொம்ப அவ சியமாய் இருந்தாலொழிய பெரியவர்கள் இதிலெல்லாம் தலையிடாமல் இருப்பதே நல்லது. ஏனெனில், குழந்தைகள் உலகில் மிகச் சுலபமாக, நீதி வழங்கப்படு கிறது. ஒரு சூயிங்கம் அல்லது ஸ்டிக்கர் பரி மாற்றம் சண்டையை மறக்கடித்து விடும். 'டேய் ஸாரிடா! இன்னைக்கு உனக்கு ஃபர்ஸ்ட் பாட்டிங் சான்ஸ் தர்றேன்' என்ற சொற்கள் குடிமி பிடிச் சண்டையைத் தீர்த்து வைத்து விடும். பல சந்தர்ப்பங் களில், 'பெரியவங்க சண்டை போட்டா போட்டுக்கட்டும்; நாம ஃப்ரெண்ட்ஸ் தான்...' என்று பிள்ளைகள் குலாவிக் கொண்டிருக்க பெற்றோர்தான் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பார்கள்!

தகவல்கள் : மனநல நிபுணர் டாக்டர் வி. பாலன்.

கட்டுரை வடிவம் : சீதா ரவி

அட்டை வண்ணப்படம் :

ஜே. டி. ஜானி

பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கணும்

வெளியே நிறுத்தி வைத்திருக்கும் தன்னுடைய மோபெட்டின் மீதே உட்கார்ந்து கொண்டு, தன்னை நோக்கிக் கேலிச் சொற்களை உதிர்க்கும் ரோடு ஓர ரோமியோவின் கன்னத்தில் பளீரென அறை விட்டு, அவளை ஓடச் செய்யும் கோபா வேச வீராங்கனையாக அறிமுகமாகும் பானுப்ரியா -

இப்படியொரு பெண் தன்னுடைய மருமகள்களில் ஒருத்தியாக அமைந்து விட்டதை நினைத்த மாத்திரத்திலேயே நடுங்கத் தொடங்கும் மாமியாராக மனோரமா -

கஞ்ச மகாப்பிரபுவாக விளங்கி, அந்த மருமகள் கொண்டு வரும் மாதச் சம்பளத்துக்கு முக்கியத்துவம் தந்து, அதனால் அவளிடம் பேசவே தயங்கும் மாமனாராக கவுண்டமணி -

இப்படியொரு அஸ்திவாரம் போடப்பட, ஒரு புதுமைப் பெண் பற்றிய வித்தியாசமான கதை நம்முன்னே கட்டடமாக எழும்பப் போகிறது என்று நிமிர்ந்து உட்கார்ந்தால்

அடுத்து வரும் நிகழ்ச்சிகள் திசை மாறிப்போய் அந்த எதிர்பார்ப்பு பொடிப் பொடியாகி விடுகிறது.

மகள்களும் மருமகள்களும் கொண்டு வரும் சம்பளப் பணத்தை இழக்க விரும்பாமல், அந்தவொரு காரணத்துக்காகவே கூட்டுக் குடும்பம் பிரிந்து விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் கவுண்டமணி தன் மகள்களின் மீது தனக்கிருக்கும் ஆதிக்கத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு -

அதே நேரத்தில் மருமகள்கள் தன்னுடைய கட்டுப்பாட்டை மீறிச் செயல் பட்டு விடக் கூடாது என்பதற்காகவே அன்றாடக் குடும்ப நிகழ்ச்சிகளைப் பின்னணியிலிருந்து இயக்கிவைக்கும் பொம்மலாட்டக் காரராகச் செயல்பட -

அவ்வப்போது சிரிப்பலைகள் எழுந்தாலும், சம்பவங்களின் ஒரே மாதிரியான போக்கின் காரணமாக ஏற்படுவது அலுப்பு.

நகைச்சுவை என்னும்போது அதில் இரட்டை அர்த்த வசனம் இடம்பெறுவது தமிழ்த் திரைப்பட இயல்பாகிவிட்ட நிலையில், கவுண்ட மணியின், மனோரமாவை நோக்கிய, 'கொசுக்கடி' அணுகுமுறை இலைமறை காய் மறை விரசம் என்றால் -

சின்னி ஜெயந்த் - தேவிஸ்ரீ படுக்கையறைப் பேச்சுக்கள் ரொம்பவும் பளிச் விரசம். (இந்த இரண்டாவது மருமகள் ஒரு 'பாப்பாத்தி'யாகத்தான் இருக்க வேண்டும் என்பது கதைக்கு எந்த வகையில் அவசியமோ?)

நாதஸ்வரம் இல்லாத தமிழ்நாடா? செந்தில் இல்லாத தமிழ்ப்படமா? இருக்கிறார்... என்றாலும், கவுண்ட மணியின் ஜோடியாக அமையாததால் இன்றைய திரைப்பட நகைச்சுவை இலக்கணப்படி படம் முழுதும் அவரிடம் இவர் தொடர்ந்து அடி வாங்குவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது - ஒரேயொரு காட்சியில் தவிர.

சார்வியின் ஜோடியாக சரளா. முன்னவர் பெரும்பாலும் போதையிலேயே இருப்பதால் போதிய வாய்ப்புகள் இல்லை. பின்னவருக்கு இது ஒரு புது வசந்தம்.

சந்திரசேகருக்கு - பாவம் - சந்தர்ப்பமே இல்லை.

வீணடிக்கப்பட்டிருப்பவர் பானுப்ரியா.

அழுத்தமாகச் செய்திருப்பவர் கவுண்டமணி - கவுண்டமணி மட்டுமே.

- சி. ஆர். கே.

JYOTHY LABORATORIES

Marketing Office:
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.

Regd. Office:
Sreekrishna Nagar
Bombay-400 066.


மில்லர் ஹீரோ மங்காரம்பரை வந்தும்...
எனை இருந்தா எனக்கென்ன...
துரத்தல், துவிலுரிதல் காட்சிகள் நிறைந்தது...
திரைப்படமிதை நடந்தே தீரும்!
பங்காரம்மா
தலைவரைக்கைது பண்ணிட்டாங்க... இறங்குடா கீழே... பஸ்ஸை கொளுத்தணும்!
அங்கிகயாயது தமிழனைக் கண்டுகாரன் இன்பம் படுத்தினான்... இங்கிக தமிழனை நமிழனைக் கஷ்டப் படுத்தறான்...
அய்யய்யோ... ராஜ்கைளை அமிதாப்பன்னு விட்டுட்டுப் போனீங்களே... ஜோதியாலவால் உங்களுக்காக ஸ்பெஷல் விமானம் ரெடி பண்ண முடியுமா?
ஜெயலலிதா
இளங்கோவன்
காங்கிரஸ் அல்லாத முதல்வர்கள் மாநாடு
கனிமொழி

ஆணவத் தலைவர்களின் அபத்தப் போக்கு

"இரண்டு பேர் ஒரு முடிவில்லாத தர்க்கத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால், யார் பக்கம் நியாயம் என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கிறார்கள். அந்த நீதிமன்றம் ஒரு முடிவைக் கொடுத்தால் அதை இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி, தீர்ப்பையொட்டியே மறுபடி இருவரும் குடுமி பிடி சண்டை போட்டால் அபத்தமாகும். இப்படியே போனால் நாட்டில் அராஜகம்தான் நிலவுமே தவிர, ஜனநாயகம் இராது."

தமிழகத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி, திருச்சி தேசியக் கல்லூரியில் சாரநாதன் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்து கையில் மேற்படி கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். சரியான சந்தர்ப்பத்தில் கூறப்பட்ட முக்கியமான கருத்து என்று நாம் ஏற்கும்போதே, இவ்வாறு அபத்தமாக நடந்து கொள்வது மக்கள் அல்ல, தலைவர்களே என்பதையும் எண்ணிப் பார்க்கிறோம்.

இன்று மத்திய, மாநிலத் தலைவர்கள் பலரிடமும் அடக்கம் போய் விட்டது. ஆணவம் கட்டுக்கடங்காமல் பெருகி விட்டது. இந்த ஆணவத்தை அநாகரிகமாக வெளியிட்டு, நடுவர் மன்றத் தீர்ப்பையும் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பையும் ஏற்க மறுத்ததுடன், பழிவாங்குவது போல் கன்னடியரைத் தமிழருக்கு எதிராகத் தூண்டிவிட்ட அளவில் பங்காரப்பா முதல்வர் பதவியில் நீடிக்கும் தகுதியை அடியோடு இழக்கிறார்.

கடந்த பல சந்தர்ப்பங்களில் சட்ட ஒழுங்கு குலைந்ததாக சால் ஜாப்பு கூறி பல மெஜாரிட்டி அரசுகளைப் பதவி நீக்கம் செய்த மத்திய அரசு, இன்று நிட்டமிட்டு வன்முறையை வளர்த்த பங்காரப்பாவைச் சகித்துக் கொள்கிறது; பதவியில் நீடிக்க அனுமதிக்கிறது. ஏன் என்று பார்த்தால், அதற்கும் 'ஆணவம்' என்றே பதில் கிடைக்கும். பங்காரப்பா பதவி நீக்கம் செய்யப்பட, கர்நாடக காங்கிரஸ் உடைந்து அல்கே மறு தேர்தல் நடக்க, வேறு கட்சி ஆட்சிக்கு வந்து விடக் கூடாது, தொடர்ந்து காங்கிரசே பதவியில் இருக்க வேண்டும் என்ற ஆணவம்தான் காரணம்.

அது போகட்டும்; நமது முதல்வர், 'சுப்ரீம் கோர்ட் ஆணையை, நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க வேண்டும்' என்று வலியுறுத்துவது நியாயம்தான். ஆனால் 'பேச்சு வார்த்தைக்கே இடமில்லை' என்று கூறுவது ஆணவமே. 'பங்காரப்பாவிடம் எனக்கு நம்பிக்கை இல்லை; ஆனாலும் பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்குகிறேன்; நடுவர் மன்ற, சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்களின் அடிப்படையில் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளுக்குத் தமிழகம் தயார்' என்று கூறியிருக்கலாம்.

மற்ற எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே நிலைத்தில் பந்த் என்று அறிவித்திருக்கும் போது (அந்த பந்த் என்ன சாதித்தது என்பது வேறு விஷயம்) பாட்டாளி மக்கள் கட்சியும் அதன் தலைவர்களும் நடந்து கொண்ட முறை ஆணவத்தின் இன்னொரு வடிவமே. 'தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும் போது, அதைக் கண்டிப்பதில் கூட தமிழரிடையே ஒற்றுமை இல்லை' என்று உலகுக்குப் பறைசாற்றியதுதான் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ஆகியோரின் சாதனை. முதல்வருக்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி, பா. ம. கட்சித் தலைவர்களைக் கைது செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கினார்கள். இதன் மூலம் தங்கள் இமேஜை வளர்த்துக் கொள்ள அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் தொடர்ந்து நடந்த வன்முறைகள் காரணமாக மக்களிடம் மதிப்பை இழக்கவே செய்வார்கள். கசப்புணர்வே மிகும். ஏதோ படையெடுப்புப் போல் ஏராள பஸ்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கர்நாடகத்துக்குச் சென்று இறங்கியிருப்பார்களேயானால், நெருப்பில் ஊற்றிய பெட்ரோல் போல் அது ஏற்கெனவே உள்ள விரோத பாவம் மேலும் வளரத்தான் வழிவகுத்திருக்குமே தவிர, குறைக்க உதவியிராது.

கன்னடிய தீவிரவாதிகளுக்கும் தமிழருக்கும் இடையில் வித்தியாசமில்லை என்று காட்டிக் கொள்வது நமது நோக்கமாக இருக்கக் கூடாது. 'நீங்கள் தவறு செய்தாலும் நாங்கள் கண்ணியம் காப்போம்; நியாயமான வழிகளில், சாத்துவீக முறைகளில், சட்டபூர்வமாகப் போராட்டத்தைத் தொடர்வோம்' என்பதை உணர்த்த வேண்டும்.

கல்கி

1992
ஜனவரி 19
மலர் : 50
இதழ் : 25
பிரஜோத்பத்தி
தை 5

வட்டமேஜை

குடும்பத்தோடு எக்ஸ்கர்ஷன்!

◆ கல்கியில் நீங்கள் கேட்டவை பகுதியில் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் ''தனி விமானப் பயணம்'' கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கிறது. முதல்வரை விமர்சிக்க அசாத்திய மான துணிச்சல் தேவை. அத்தகைய துணிச்சல் கல்கியாகிய அபரிமிதமாக இருப்பதைக் கண்டு பாராட்டாமல் இருக்கவா முடியும்?
சிறுமுகைப்புதூர், இந்துதாஸன்.

◆ உழைப்பவனுக்குத்தான் உழைப்பின் பலனும், மதிப்பும் தெரியும். பெரியவர் முத்தையா உண்மையிலேயே 'திறமை வென்ற திருமா'வி விட்டார். பெளிட்டோ குமாருக்குப் பாராட்டுக்கள்.
கடையல், அ. பொன்ராஜன்.

◆ புத்தாண்டின் முதல் இதழ் மஞ்சள் கொத்துகளுடன் (தோட்டத்துடனே!), பொங்கலை சிறப்புடன் வந்து மகிழ்வளராகவும், மகிழ்ச்சிகரமாக வும் இருந்தது. சமோட்டுச் செய்திகள் தெஞ்ச நிமிர்த்தச் செய்தாலும் காலிச் செய்தி சற்று கலவலையும் விளைத்தது.
மகிழஞ்சேரி, எஸ். கே. ரவிச்சந்திரன்.

◆ 'அமுல்' கோட்டையான குஜராத்தில் ''ஆவின்'' வெண்ணெய் விற்பனை செய்யப்படு வது சாதனைதான், கல்கி அடுத்த சமோட்டு சிறப்பு இதழ் வெளியிடும் பொழுது, ஆஸ்திரேலியா விற்கு 'ஆவின்' வெண்ணெய் ஏற்றுமதி செய்யப் படுகிறது என்ற செய்தி தாங்கி வரும்படியாக இருக்க வேண்டும்.
சென்னை - 28, வ. தே. பாலகுப்ரமணியன்.

◆ கூட்டுக் குடும்பத்தின் வெற்றி ரகசியம், வீட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மட்டுமே என் பதைத் தெளிவாக உணர்த்தியது. மலையிலிருந்து நிறைவான வாழ்க்கையை நீண்ட நாட்களாகச் செம்மையாக நடத்திவரும் திரு. சைத்தமலை யின் கூட்டுக் குடும்பம்.
கும்பகோணம், பாலு. திருஞ்ஞானசம்பந்தி.

◆ நான் சமோட்டு நாற்றங்காலில் வளர்ந்து இன்று வேர் விட்டுப் பயிராகும் பெண். சமோடு நகரச் சிறப்பிதழ் என்னை சமோட்டிற்கே (பிக் அவுட் டிக்கெட்) அழைத்துச் சென்று விட்டது. மஞ்சள் வாசமும், வினைத்த நெல்லின் வாசமும், பிடித்த மூக்கு, இன்று காவிரிக் கரையில் நிறுத்த வெண், கழிப்பிடங்களால் கைகளுக்கு நடுவில் நிறை இருக்க விரும்புகிறது. கங்கையைப் புனித மாக்கியதைப் போல் காவிரியைப் புனிதமாக்க இனியொரு தலைவர் பிறந்து வருவாரா?
எங்கள் ஊர் போடு மைலம்கலில் சில வருடம் படித்த பாக்கியராஜ் சாரின் கொங்கு நாட்டு மணம் கமழும் கதை அருமை.
காளைக்குடி, நிலகம் ராமச்சந்திரன்.

◆ வீட்டுப் பணியாளரைச் சமாளித்தபடி சமாளிக்க அழகு கருதத்தில் கொடுத்துள்ள 'டிப்ஸ்' வேலைக்காரர்கள் கிடைக்காமல், கிடைத்தாலும் நிலைக்காமல் இருக்கும் இந்தக் காலத்தில் மிகவும் பயனுள்ளவை.
வேலூர், கே. பி. சாந்தி.

◆ திருப்பங்கள் நிறைந்த ஒரு மர்மப் படத்தைப் பார்த்த உணர்வு ஏற்படுத்தியது வாணியின் வாழ்வுடன் வைரம்... விதவிதமான கோணங் களில் ஜெயராஜின் ஓவியம் கதைக்கு மேலும் மெருகேற்றியது... மங்களகரமான முடிவுக்கு (வாசகருக்கு) ஒரு தொட்டு...
காரிமங்கலம், தோ. ரமேஷ்.

(வாசகி என்ற பெயரில் தனது முதல் தொடர்கதை எழுதிய ஸ்ரீதரன் அமெரிக்கா வில் பால்டிமோரில் டாக்டராக வெற்றிகர மாகத் தொழில் நடத்தி வருகிறார். எழுத்துத் துறையிலும் வெற்றி பெறுவார் என்பதற்கு வாணியுடன் வைரம் கட்டியம் கூறுகிறது எனில், இந்த இதழில் இடம்பெறும் அமெ ரிக்கச் செய்தி மடல் இக் கருத்துக்கு வலி யூட்டுகிறது. - ஆர்.)

◆ கதாதா தன் வழக்கமான பாணியுடன் நேர மத்தில் நாடகம்பிக்கைகளையும் சேர்த்து ஒரு அழகாகக் கம்ப்யூட்டர் நிராமத்தை எங்களுக்கு 33 வாரங்கள் அளித்திருந்தார்.
நிராம மக்களின் தன்மையைப் புரிந்து கொண்டு நாம்தான் சற்று வழி விட வேண்டும் என்று விஞ்ஞான உலகத்தை கதாதா வேண்டிக் கொள்வது போல் இருந்தது கதை!
மொழட்டுப்பாளையம், கே. கல்பனா.

◆ 'கம்ப்யூட்டர் நிராமம்' குடும்பத்தோடு எக்ஸ்கர்ஷன் போல் வந்த நிருப்பினை அளித்தது. அந்த 'வளர்முக' நிராமத்தில் உலவும் மனிதர் களை மறக்க முடியாது.
அரளில் வண்ணக் கலவை, அழகு விஷ்வ ரூபமாக மனத்தைக் கவர்ந்தது.
நிருச்சி, தாயு. செந்தில் குமார்.

கட்டிப் முடிக்க முடியாத கமிஸ்தேவ்!

இம்ரான் கான் மற்றும் பல பாகிஸ்தானிய வேகப் பந்துவீச்சாளர்களின் போலிங்கை எதிர்த்து, சில மாட்சுகளில் நன்றாக ஆடினேன். 1978 இல் பாகிஸ்தான் சென்றபோது இது நடந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் பத்திரிகைகள் என்னை பாட்ஸ்மன் என்று வர்ணித்து எழுதின...! அதுவரை நானே என் பாட்டிங் திறமையை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு நல்ல போலராகப் பெயரெடுக்க வேண்டும் என்பது மட்டுமே எனது குறிக்கோளாக இருந்தது. 1979 இல் வெஸ்ட் இன்டீஸின் அதிவேகப் பந்து வீச்சைச் சமாளித்துச் சதம் எடுத்த போது 'பாட்ஸ்மன்' என்று முத்திரையே குத்தப்பட்டேன். கிரிக்கெட் ரசிகர்களுக்கு என்னிடம் எதிர்பார்ப்பு அதிகரித்து விட்டது. எனக்கும் பொறுப்பு அதிகரித்து விட்டது. எனது பாட்டிங் திறமையை ஆரம்ப நாட்களிலேயே எனது 'கோச்' அடையாளம் கண்டு, அதற்கு ஏற்ப எனக்குப் பயிற்சி அளித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

●● டெஸ்ட் மாட்சில் முதன் முறையாக செஞ்சுரி அடித்த நாளை என்னால் மறக்கவே முடியாது. டெல்லி, கோட்லா மைதானத்தில் நடந்த மாட்சைப் பார்க்க என் குடும்பமே வந்திருந்தது. தன் பெருமிதத்தில் பங்கு கொள்ள அப்பா இல்லையே என்று அம்மா கண்ணீர் விட்டார்.

அந்த மாட்சில் நான் சதம் கண்டதற்குக் கிர்மானிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நாங்கள் இருவரும் பாட் செய்து கொண்டிருந்த சமயத்தில் ஒரு ஒற்றை ரன் எடுப்பதில் பெரிய குழப்பம் உண்டாகி விட்டது. யாரேனும் ஒருவர் நிச்சயம் ரன் அவுட் ஆக வேண்டும் என்ற நிலையில் கிரி (கிர்மானி) அந்தத் தியாகத்தைச் செய்தார். எனக்குத் தாங்க முடியாத சங்கடம் ஏற்பட்டது. ஆனால் கிரி வெளியேறும் போது, ''நீ நன்றாக ஆடிக் கொண்டிருக்கிறாய் - கீப்



இட் அப்; செஞ்சுரி எடுத்துவிடு!'' என்று கூறிவிட்டுச் சென்றார். நான் அப்படியே நெகிழ்ந்து போய்விட்டேன். அந்தத் தியாகம் வீணாகிவிடக்கூடாது என்கிற வைராக்கியத்துடன் ஆடினேன். ஒரு சிக்ஸர் அடித்த தன் மூலம் நூறை எட்டியதோடு, சிறந்த ஆல் ரவுண்டர் என்ற பெயரையும் பெற்றேன்.

●● உலகக் கோப்பை தொடரில் ஜிம் பாப்வேக்கு எதிராக 175 ரன்கள் எடுத்ததை எனது மிகப்பெரிய சாதனையாகப் பலர் கருதுகிறார்கள். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. கலபமாகக் கிடைத்த அந்த ரன்களையும், வெற்றியையும் விட, மிகச் சிறந்த போலிங்கையும் ஃபீல்டிங்கையும் தாக்குப்பிடித்துப் போராடிய தருணங்களையே நான் பெரிதாகக் கருதுகிறேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் எடுக்கப்படும் இருபது - முப்பது ரன்கள், சாதகமான சூழலில் கலபமாக அடையும் செஞ்சுரியை விட மதிப்பு மிக்கவை. விளையாட்டிலும் சரி, வாழ்க்கையிலும் சரி, சவால்களைச் சமாளித்து வெற்றி காணும் ஆற்றலும் மனோபாவமும்தானே அவசியம்! இதனால்தான் வெறும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கொடுக்கப்படும் மான் ஆஃப் தி மாட்ச் விருதுகளின்பால் நான் அதிகம் மதிப்பு வைப்பதில்லை.

●● டெஸ்ட் மாட்சுகளில் பந்து வீசுவதற்கும் ஒரு நாள் பந்தயங்களில் வீசுவதற்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. டெஸ்ட் மாட்சில் விக்கெட் எடுப்பதைக் காட்டிலும் நன்றாக போல் செய்து ரன்களைக் கட்டுப்படுத்துவது முக்கியம். ஒரு நாள் பந்தயத்திலோ பாட்ஸ்மனை 'அவுட்' ஆக்கிவிட வேண்டும் என்ற 'டென்ஷன்' ஆரம்பம் முதல் கடைசிவரை அழுத்தும். ஒரு நாள் பந்தயங்கள் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியளிக்கலாம், ஆனால் பந்துவீச்சாளர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதில்லை.

●● மட்டை பிடித்து நிற்பவர் எத்தகைய ஆட்டக்காரர் என்பதைப் பொருத்தும், பிட்ச் எப்படி இருக்கிறது என்பதைப் பொருத்தும் நிட்டமிட வேண்டும். ஒவ்வொரு பந்தையும் நிட்டமிட்டு வீச வேண்டும். பாட்ஸ்மன் அவசரப்பட்டு விக்கெட் இழக்கும்போது கிடைக்கும் சந்தோஷத்தை விட, நாம் போட்ட நிட்டத்தில் - விரித்த வலையில் - அவர் சிக்கி அவுட் ஆகும் போது அடையும் 'த்ரில்' இருக்கிறதே... அதற்கு ஈடு இணையே கிடையாது.

●● நான் முதன் முறையாக ஆஸ்திரேலியா போயிருந்தபோது (1981-82) தொடையில் அடிபட்டு விட்டது. மாட்சின் முதல் மூன்று நாட்கள் ஆடாமலே இருந்தேன். இறுதி நாளன்று ஆஸ்திரேலியா பாட்டிங் - அவர்கள் வெற்றிக்கு நூறே ரன்கள் தேவை என்ற நிலை.

காலில் ஐஸ் ஒத்தடம் கொடுத்தபடி இரவெல்லாம் தூக்கமின்றிக் கழித்திருந்த நான் அன்று போல் செய்ய முடிவு செய்தேன். நூறு ரன்களுக்குள் ஆஸ்திரேலிய அணியை அவுட் ஆக்கவேண்டிய சவாலை என்னால் ஏற்காமல் இருக்க முடியவில்லை.

களத்தில் இறங்கிப் பந்து வீச ஆரம்பித்தேன். என் உத்வேகம் அதிகரிக்க அதிகரிக்க, கால் வலி குறைந்துபோயிற்று. அன்று ஐந்து விக்கெட்டுகள் எடுத்தேன்.

இந்தச் சம்பவத்தைப் பெருமைக்காக நான் சொல்லிக் கொள்ளவில்லை. மன வலிமையினால் எந்த அளவுக்குச் சாதிக்க முடியுமென்பதை உணர்த்தவே கூறுகிறேன்.

●● 'ரிடையர்' ஆகும் காலத்தில் என்ன செய்வது....?' என்ற கேள்விக் குறி எழுகிறது.

அரசாங்கக் கட்டுப்பாடோ தலையீடோ இல்லாத தனியார் விளையாட்டு அகடெமி ஒன்றைத் துவங்கி, உலகத் தரத்துக்குக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். தோற்கும் தறுவாயிலும் விடாமல் போராட வேண்டும் என்ற மனப்பாங்கு நம் இளைஞர்களிடையே இல்லாததுதான் எனக்குக் கவலை அளிக்கிறது. நம்மிடையே உள்ள திறமைமிக்க இளம் ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுத்து, கடின உழைப்பும், மன வலிமையும், இறுதிவரை போராடும் உறுதியும் பெறும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி வழங்க வேண்டும்.

(- கபில் தேவ் எழுதியுள்ள The World of Kapil Dev *என்ற கல வரலாற்று நூலிலிருந்து சில பகுதிகள்.)*

வெளியீடு : UBS. விலை: ரூ. 65/-

"எப்படியோ கேடி கந்தன் மட்டும் தப்பிச்சுப் போயிட்டான்."

"அய்யய்யோ... அதிகாரிகிட்ட எப்படி சமாளிக்கப் போறீங்க...?"

"என்ன பண்றது... என் சொந்தப் பணத்தைக் கொடுத்து, அவன்தான் மாமூல் கொடுத்தான்னு சொல்லி சமாளிக்க வேண்டியதுதான்...!"

- புதுவண்டி ரவீந்திரன்

அடுத்த இதழில் ...

பாபாவின் சென்னை வருகையையொட்டி

சத்ய சாயி சிறப்பு மலர்

இடம் பெறும்.

பாபாவின்

- கல்விப் பணி
- ஆன்மிகப் பணி
- சமூகப் பணி

பற்றிய சிறப்புக் கட்டுரைகள், புகைப்படங்கள்.

வில்லுப் பாட்டு :
கவர்ச்சிமிக்க
கிராமியக் கலை!
- சிறப்புச் செய்திகள்

உண்மையின் அழகை உணர்ந்த அழகேசன்

தமிழ்நாடு காங்கிரசின் தலைவ ராகவும், மத்திய அமைச்சராகவும் இருந்த ஓ. வி. அழகேசனைப் பற்றி நினைவுகூர்கிறார், அ வ ரு ட ன் நெருங்கிப் பழகிய தினமணி தலை மைத் துணையாசிரியர் கே. ஸி. லட்சுமி நாராயணன் :

●● 'ஆ தேர்தலுக்குப் பிறகு நி. க. விலி ருந்தும், நி. மு. க. விலிருந்தும் பலர் காங்கிரசில் சேர்ந்தார்கள். அப்படிச் சேர்ந்தவர்களில் லர் காங்கிரஸ் மேடையில் இருந்து கொண்டே பெரி

யார் புகழ் பாடினார்கள். மாங்காட்டில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு மாஜி நி. மு. க. ''பெரியாருடைய இயக்கத்தினால்தான் அரி ஜனங்கள் விழிப்படைத்தார்கள். அவர் மட்டும் இல்லை என்றால் தாழ்த்தப்பட்டவர்கள் நிலை மாறியே இருக்காது...'' என்ற ரீதியில் பேசினார்.

பின்னர் அழகேசன் எழுந்து, ''அரிஜனங் களுக்காகப் பாடுபட்டவர் காந்திஜிதான். அவர் இல்லை என்றால், அவர்கள் முன்னேறியிருக் கவே முடியாது... இ ன் னு ம் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் அரிஜன இயக்கம் நடத்தியதே ராஜாஜிதான். இவர் உண்மை தெரி யாமல் பேசுகிறார். காங்கிரஸ் இயக்க வரலாறு தெரியாத, புதிதாகக் காங்கிரசுக்கு வந்த இவர், பேசுவது உண்மை அல்ல!'' என்று சொன்னார். இத்தனைக்கும் அப்போது ராஜாஜி காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருந்தார். அதனால் எல்லா ரும் திகைத்துப் போனார்கள்.

பிறகு ஈ. வி. கே. சம்பத் பேசினார் : ''ஐயா அளகேசன் சொன்னதை, நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்ளுகிறேன். நாங்கள் வளர்ந்த விதம் அப்படி. எங்களுக்கு உண்மைகள் சரி வரத் தெரியாது! உண்மையை எந்த இடத்தி லும், தயங்காமல் வெளிப்படுத்தும் குணமும் தைரியமும் கொண்டவர் அழகேசன்.''

●● சமீபத்தில், சில மாதங்கள் முன்பு அழகேசன் அவர்களை ஒரு நிருமணத்தில் சந்தித் தேன். ''காங்கிரஸ் நிலைமை இப்படி ஆகி விட்டதே! கா ங் கி ர ஸ் கட்சியில் நி. க. வினர் இருக்கிறார்கள். நி. மு. க. வினர் இருக்கிறார் கள். ஏன், அ.தி.மு.க. வினர் கூட இ ரு க் கி ற ா ர் க ள். ஆ ன ா ல் காங்கிரஸ்காரர்கள் எ ங் கே இருக்கிறார்கள்?'' என்று மிகவும் மனம் நொந்து போய்ப் பேசினார்.

●● செங்கல்பட்டு மருத் துவக் கல்லூரி உருவாக அழ கேசன் அவர்களது முயற்சி களே காரணம். பக்தவத்சலம் அறக்கட்டளையின் க ல் வி ப் பணிகளைத் திறம்பட நடத்தி வந்தவர் அழகேசன். தமிழில் மட்டுமல்லாது, சமஸ்கிருதத் திலும் மிகுந்த புலமை பெற் றவர். காளிதாசனையும், வால் மீகியையும், நினைத்த மாத்தி ரத்தில் மேற்கோள் காட்டிப் பேசுமளவுக்கு அந்த மொழியில் பாண்டித்தியம் உ ள் ள வ ர். நினசரி விஷ்ணு சகஸ்ரநாமம் சொ ல் ல ா ம ல் உணவு அருந்த மாட் டார்.

●● தமிழவேள் பி. டி. ராசனும், முன் னாள் முதல்வர் பக்தவத்சலமும் அழகேசனின் சகலபாடிகள். முதல் இருவரும் பரம்பரைப் பணக்காரர்கள். ஆனால் அழகேசனோ அவர் களுடன் ஒப்பிடும் போது, ஏழை! பிரிடென்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர, படிப்பை உதறி விட்டு வெளியேறி வந்த போது அவருக்குப் பதினெட்டே வயதுதான்!

- சாருகேசி

கை நுழையும் அளவுக்குக் காது வளையங்கள்!

அஜந்தா கொண்டை, தோள் தொடும் அளவுக்குக் காது வளையங்கள், 'ரவிக்'குடன் ஒரு பெண் நடந்து செல்வாள்... ஒரு குருவி பறந்து வந்து அவள் காது வளையத்தில் உட்கார்ந்து ஊஞ்சலாடும்! கமர் இருபது வருஷங்களுக்கு முன் 'கை வளை' சைஸ் காது வளையங்கள் ஃபாஷனாக இருந்த போது இந்த 'சைலன்ட் ஜோக்' ஒரு பத்திரிகையில் இடம் பெற்றது!

Jokes apart, அதே வளையல் சைஸ் வளையங்கள் இப்போது மீண்டும் ஃபாஷன்... படத்தில் பூர்ணிமா பாரதி அணிந்துள்ளது போல், இந்தக் காது வளையங்களை ஜீன்ஸ், டீ ஷர்ட்டுடன் அணியலாம்.

"அதுமட்டுமல்ல... இந்த உடையுடன் (Sneakers) என்று அழைக்கப்படும் ஷூக்களை அணிந்து, லேஸைக் கணுக்காலைச் சுற்றி முடிந்து கொள்வதும் ஃபாஷன்தான்" என்கிறார் பூர்ணிமா.

வண்ணப்படம் : உத்ரா

ஃபாஷன் பக்கம் :

குமரன் குன்றத்து அழகன்

"இந்தக் குன்றில் சுப்ரமண்ய சுவாமிக்கு ஒரு கோயில் கட்டலாமே" என்று காஞ்சி முனிவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அடையாளம் காட்டினார். 1958 இல் சென்னையை அடுத்து குரோம்பேட்டையில் முகாமிட்டிருந்த போது, ஓர் அமாவாசை தினத்தில் உதயமான பெரியவரின் எண்ணம், சிறுகச் சிறுக வளர் பிறை கண்டு ஈடேற 21 ஆண்டுகள் ஆயின. கம்பீரமான சிறு குன்றம், குமரன் குன்றமாக உருவெடுத்தது.

1979 ஆம் ஆண்டு தை மாதம் குமரன் குன்றத்து சுவாமிநாத சுவாமி ஆலயத்தின் நூதன கும்பாபிஷேகம் நடந்தேறியது. இன்று வெகு விமரிசையாகத் தைப்பூச வைபவங்கள் நடைபெறவுள்ள இந்த ஆலயத்தின் படிப் படியான வளர்ச்சியே சுவையான கதை.

பெரியவாளின் வாக்கை மதித்து ஆரம்பத்தில் ஒரு சிறு வேல் மட்டுமே குன்றின் உச்சியில் நடப்பட்டது. அதற்குத் தினமும் விளக்கேற்றி (காற்றில் அணையா திருக்க பாட்டிலுக்குள் திரியிட்டு விளக்கேற்றினார்கள்) சிறிதளவு பொங்கல் நைவேத்தியம் மட்டும் செய்து வந்தனர் பக்தர்கள். பக்தர்களின் எண்ணிக்கை பெருகி, 'ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி சத் சங்கம்' உருவானது. சத் சங்க உறுப்பினர்கள் (பெரும்பாலும் ஸ்டேட் பாங்க் ஊழியர்கள்) சிறுகச் சேர்த்தும், சென்னை நகரப் பிரமுகர்களின் உதவியைப் பெற்றும், உபன்யாசங்கள்; கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்திப் பெற்ற

☛ குன்றின் அடிவாரத்தில்...

செல்வம் பெருகும் சிறந்தநலம் சேரும்
கல்வியும் கண்ணியமும் கைகூடும் - நல்ல
குமரன் குன்றம் கூடித் தொழுதால்
அமரரென வாழ்வார் அணிந்து.

- திருமுருக கிருபானந்த வாரியார்

தொகையைக் கொண்டும் கோயில் திருப் பணியைத் தொடங்கினார்கள்.

ஒரு கட்டத்தில், திருப்பணிக்காக 50,000 செங்கற்கள் குன்றின் அடிவாரத்தில் வந்து இறங்கியிருந்தன. மேலே செல்ல சரி யான பாதை இல்லை; சத் சங்கத்தின் நிதி நிலைமையும் சுமார்தான். 'குன்றேறிச் செல்லும் அன்பர்கள் ஆளுக்கு ஒரு செங் கல்லை மேலே எடுத்துக் கொண்டு போய்ச் சேர்த்துத் திருப்பணியில் கலந்து கொள்ளலாம்' என்று அறிவிப்புப் பலகை எழுதி வைக்கப்பட்டது. சில நாட்களி லேயே 50,000 செங்கற்களும் மேலே சென்று விட்டன. திருப்பணியும் விரைவி லேயே வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ் வாறு ஆத்மார்த்மாகக் கர சேவை செய்த தால் மகிழ்வுற்றது போல், குமரன் குன்றத் தில் கொலுவிருக்கும் சுவாமிநாத சுவாமி யின் முகத்தில் நிறைவான அருள் புன்னகை குடிகொண்டிருக்கிறது. சஷ்டி விழாவை யொட்டி சந்தனக் காப்பு தரித்து, கண்களை யும் மனத்தையும் குளிர்விக்கிறான் கந்தன்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என மனம் நிறையப் பிரார்த்தித்தபடி தரிசிக்கிறோம். சுற்றிலும் 'முருகா! முருகா! அரோகரா!' என்று உணர்ச்சிப் பெருக்கு டன் குரலெழுப்பும் பக்தர்கள்.

மூலவர் சன்னதி கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. கமலத்தில் தோன் றிய குமரனின் சன்னிதி பிராகாரத்தின் மேல் தளத்தில் எட்டு கமலங்கள் நேர்த்தி யாகச் செதுக்கப்பட்டுள்ளன. சன்னதி முழைவாயிலில் தந்தைக்கு உபதேசம் செய் யும் முருகன் சிற்பத்தைக் காணலாம்.

சூரசம்ஹாரத்துக்கு முந்தைய தோற்றம் ஆதலால் இங்கு முருகன் மயில் வாகன னாக அன்றி ஐராவதத்தை வாகனமாகக் கொண்டிருக்கிறான். 'பிரணவ மந்திரம் எது?' என்று கேட்டுப் பால முருகன் எல்லா தேவர்களையும் பரிசோதிக்க, இந்தி ரன் உள்பட அனைவரும் விடை தெரியாது விழித்தனர். அதற்கு அபராதமாக இந்திர னின் வெள்ளை யானை ஐராவதத்தை முருகன் தனதாக்கிக் கொண்டான் என்று வரலாறு கூறப்படுகிறது.

ஆகம விதிகள்படியும் சிற்ப சாஸ் திரப்படியும் இந்த ஆலயத்தை வடிவமைத் தவர் ஜானகிரமண ஸ்தபதி. இவர் கணபதி ஸ்தபதியின் சகோதரர்.

மேலிருந்து ஒரு தோற்றம்

குன்றின் அடிவாரத்தில் விநாயகர், நவக்கிரகஹங்கள், இடும்பன் சந்நிதிகள். 108 படிகளுள் பாதியைக் கடந்ததும் மீனாட்சி, சுந்தரேசுவரருக்குத் தனித்தனிப் பிராகாரங்கள். ஈச்வரன் சன்னதியில் பிர திஷ்டையாகியுள்ள லிங்கம் காஞ்சிப் பெரி யவர் தேர்ந்தெடுத்து அனுப்பியது - கங்கை யில் உருண்டு, தேய்ந்து இயல்பாய் லிங்க வடிவு பெற்றுக் கரை சேர்ந்த பாண லிங்கம் அது, என்று சத்சங்கத்தார் விளக்கு கிறார்கள். மீனாட்சி, சுந்தரேசுவரர் சந்நிதி யிலிருந்து பார்த்தால் தொலைவில் திரி சூலம் கோவில் கோபுரம் தெரிகிறது.

108 படிகளையும் கடந்து குன்றின் உச்சியை அடைந்தால் 'இது தமிழ்நாட்டின் கதிர்காமமோ' என்று வியக்கத் தோன்று கிறது. அந்த 120 அடி உயரத்திலிருந்து குன் றத்தூர், திருநீர்மலைக் கோயில்கள் தெரி கின்றன. சுற்றிலும் பசுமையான சோலை களும் தடாகங்களும் தென்படுகின்றன. குமரன் குன்றத்தின் உச்சியிலேயே இயற் கையாக அமைந்துள்ள 'குமார தீர்த்தம்' என்ற தடாகம் 40 அடி நீர் மட்டத்துடன், பூஜை, அபிஷேக ஆராதனைகளுக்கு நீர் அளிக்கிறது.

சத்சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்கள் கல்யாண ராமனும் சச்சிதானந்தமும் கோயி லையும் நந்தவனத்தையும் சுற்றிக் காண்பிக் கிறார்கள். 'ஞானச் சோலைவனம்' என்ற பாந்தமான பெயருடன் அன்றாடம் புஷ்ப கைங்கரியம் செய்கிறது இந்த நந்தவனம்.

அழகையே பெயராகக் கொண்ட முருகனுக்குக் கொள்ளை அழகுடன் தன் னிறைவும் படைத்த இருப்பிடத்தை அடை யாளம் காட்டிய பரமாச்சாரியாவின் ஞான திருஷ்டியை நினைத்து வியக்கிறோம். சத்சங்கத்தாரின் பக்திப் பணி தொடர அந்த பால முருகனிடமே வேண்டிக் கொள் கிறோம். சந்தியா கால பூஜைக்கு மணி ஒலிக்கிறது. 'ஓம்' 'ஓம்' என்று பிரணவ நாதமாக அது நம் செவிகளில் பாய்கிறது.

- பானுமதி ராமச்சந்திரன்

படங்கள் : உத்ரா

முன்கதைச் சுருக்கம் :

சென்னையில் பெரிய தொழிலதிபர் ராஜசேகர். தமக்கு வயதாகி விட்டதென்று தம் ஒரே மகன் பிரகாஷை மெல்ல பிஸினஸ் பொறுப்புஏற்கு மாறு வற்புறுத்துகிறார். திட்டமாக மறுத்துவிடும் பிரகாஷின் ஈடுபாடு முழுவதும் ஓவியத்தில். சிந்துஜா அவள் காதலி. அசத்தும் அழகி. ஆனால் சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். தீவிரப் பணப் பற்றுடைய அப்பா தங்கள் காதலை அங்கீகரிப் பாரா எனக் கவலையுறுகிறான். இதனிடையில் நகரில் ஓர் அரசியல் பொதுக் கூட்டத்தில் நடிகன் ஆனந்த் குமார் டெலஸ்கோப்பிக் ரைஃபிளால் தீர்க்கப்படுகிறான். அக் குற்றம் நிகழ்த்தியவன் சோமையா. அவன் சார்ந்திருக்கும் டான் கலிலியோ குழுவை ஏவியவர் குணமூர்த்தி. இனி...

2

ஸெல்லுலாய்டு நாயகன் ஆனந்த் குமார் கொடூரமாகக் கொல்லப்பட்ட அன்றிரவும், மறுநாளும் பஸ்களைக் கொளுத்தி, கண்ணில் பட்டதையெல்லாம் உடைத்து, மரபு மாறாமல் செம்மையாகத் 'துக்கம்' கொண்டாடப்பட்டது. இரவரிகளில் தீப் பொறி பறந்தது.

துல்லியமாகக் கொலை நிகழ்த்தப் பட்டிருந்ததில் போலீஸ் திசை தெரியாமல் திணறிப் போயிருந்தது.

ஆனந்த் இறந்த மூன்றாம் நாள் முன்னிரவு :

அ. உ. மு. கட்சியின் முக்கிய புள்ளி குணமூர்த்தி அழைப்பு மணி அழுத்தி விட்டுக் காத்திருந்தார். அந்தக் கட்டடத்திற்கு வெளியில் அவருக்கு வேறு ஆரோக்கிய முகம். எமகாதகன்.

இம்மாதிரி பல கட்டடங்கள் டான் கலிலியோ வைத்திருப்பதாகக் கேள்வி. திடீர் திடீரென்று இடம் மாறி விடுவார் களாம்.

கதவைத் திறந்தவன் சட்டைக்குள் காணப்பட்ட உப்பலான உறுத்தல் - துப்பாக்கி என்று உணர்ந்தார் குணமூர்த்தி.

எச்சில் மிடறு விழுங்கியபடி, ''நான்...'' என்று ஆரம்பித்தவரை, ''தெரியும்!'' என்று அவன் இடைவெட்டி ஹாலுக்கு இட்டுச் சென்றான்.

''வாங்க குணமூர்த்தி!'' என்று வரவேற்ற சோமையா பனியன் லுங்கியிலிருந்தான். அவன் முன் ஒரு மப்பாய்; அதில் விக்கர் ஆயத்தங்கள்....

''சரியான சமயம்தான் வந்திருக்கீங்க!''

குணமூர்த்தி அமர்ந்து கொண்டதும் தன் கையிலிருந்த ப்ரீப் கேஸை லேசாக உயர்த்தி, ''பணம் கொணாந்திருக்கேன் சோமையா'' என்றார்.

''இருக்கட்டும். முதல்ல ஸ்காட்ச் சாப்பிடுங்க.''

''வேணாம்பா...'' என்று தயங்கினார்.

''சாப்பிடுவீங்கல்ல?'' என்றவன் களுக்கென்று சிரித்தான். ''ஒரு அரசியல் வாதிகிட்ட என்ன அபத்தமாக் கேட்கறேன் பாருங்க!''

குணமூர்த்தி கண்டுகொள்ளாமல், ''ஆனந்த் கொலையைக் கச்சிதமாக முடிச்சதுக்கு தேங்க்ஸ்'' என்றார்.

டான் கலிலியோ

விக்கர் சரிப்பதிலிருந்து நிமிர்ந்து அவரை ஊடுருவிப் பார்த்துச் சிக்கனமாகச் சிரித்தான் சோமையா. கோப்பை உரசி உற்சாகம் உரைத்து விட்டு மெல்லப் பருகினர்.

ஏதோ யோசனையுடன் பருகிய சோமையாவைக் கவனித்தார் குணமூர்த்தி. அவனுக்கு 45 வயதிருக்கும். தேர்ந்த கொலையாளி என்று சொல்ல அவன் பர்சனாலிட்டியில் விசேஷமாக ஏதுமில்லை. மிதமான உடல்வாகு. கன்னத்திலிருந்த ஒரு வெட்டுத் தழும்பு தவிர்த்து முரட்டுத்தன மற்ற சாதாரண முகம்தான்.

சோமையாவின் இந்த மேல்தோற்றத்தில் குணமூர்த்தி ஏமாறத் தயாராயில்லை. ஒரு விபரீத விருப்ப வினாடியில் திடுமென்று சிறுத்தையாக அவன் மாற முடியும் என்பதை உணர்ந்திருந்தார். அலைந்து கொண்டிருந்த அவன் கண்களில் ஒருவித பூனைத் தன்மையும், எச்சரிக்கையும் தெரிந்தது; ஆபத்து ஒளிர்ந்தது.

சோமையா தான் டான் கலிலியோவா? இருள் சாம்ராஜ்யத்தின் ரகசிய

புஷ்பா தங்கதுரை

ராஜா டான்கலிலியோ. சோமையாவிடம் ஜ்வலிக்கும் ஆபத்தும், கம்ப்யூட்டர் குற்ற மூளையும், ஏவலுக்கு விருப்பமுடன் காத்திருக்கும் ஆட்களும் 'அவன்தான், அவன்தான்' என்று பறை சாற்றின.

குணமூர்த்தி ஆவலை அடக்க முடியா மல், ''நீ... நீதான் டான்கலிலியோவா?'' என்றார்.

சட்டென்று சோமையாவின் கண்களில் பளிச்சிட்ட பெருமித போதைக்குக் கார ணம் நிச்சயம் முதல் பெக் இல்லை.

ஒரே வினாடியில் இயல்பாகி விட்ட சோமையா, ''அனாவசியக் கே ள் வி கேட்டா எனக்குப் பிடிக்காது'' என்றான் முரட்டுக் குரலில்.

'மீதித் தொகை' என்று அவர் கொடுத்த ப்ரீப்கேஸை உதவியாளன்வசம் ஒப்படைத் தான்.

''புழங்கின நோட்டுதானே?''

''ஆமா சோமையா. பொட்டி பிரிச்சுப் பார்க்கலையா?''

''தேவையில்லை!'' என்றான் அலட் சியமாக. ''எங்களை எவரும் ஏமாத்த நினைப்பாங்களா? அப்படி நினைக்கிற வங்க கதி என்ன ஆவது?''

அவன் சிரிப்பில் உள்ளுக்குள் நடுங்கி னார். ஹாலில் மாட்டியிருந்த ஆக்ரோஷ சிங்கத் தலை ப்ளோ அப்பைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்தார்.

''சுத்தமான வேலைதான். இருந்தும் உள்ளுக்குள்ள அடிச்சிக்குது. அந்த நடிகன் கொலையில பின்னால ஏதும் கண்டுபிடிச்சு போலீஸ் பிரச்னை பண்ணாதே?''

''எங்க தொழிலுக்கு ஒரு உதாரணம்

சொல்றேன் குணமூர்த்தி. நீங்க இப்ப என்னைச் சந்திக்க வந்தது ஒரு வெப்பு மாருதி கார்ல. அதையும் ரெண்டு தெரு தள்ளி இருட்டுல நிறுத்திட்டு வந்திருக் கீங்க. யாரும் ட்ரேஸ் செய்யக் கூடாதுன்னு கார் நம்பர் பிளேட்டுல சேறு பூசி மறைச் சிருக்கீங்க. இந்தக் காரும் ஒரு நண்பருடை யது. சரிதானா குணமூர்த்தி?''

வியப்பில் வாய் பிளந்த குணமூர்த்தி தலையசைத்து ஆமோதித்தார்.

''டானைப் பிடிக்க, இவி ஒருத்தன் பிறக்கணும்! வீணாக் கவலைப்படாம இளம்புங்க.''

அவர் அகன்றதும் மறைவில் வாசல் காவல் காத்தவனை விளித்தான் சோமையா.

''என்ன பாஸ்?''

''இந்த விஸ்கி கப்பை டிரேயோட அலுங்காமத் தூக்கிப் பீரோவில பத்திரப் படுத்து!''

''எதுக்கு பாஸ்?''

''குணமூர்த்தி மாதிரியான அரசியல் வாதியை நம்ப முடியாது. இந்தக் கோப்பை ஒரு இன்ஷூரன்ஸ். பிற்பாடு ஒரு பிரச் னைன்னா நம்ம விருப்பத்துக்கு அவரை வளைக்கவும் முடியும்.''

''எப்படி பாஸ்?''

''முட்டாள்! அந்தக் கப்புல குண மூர்த்தியோட கைரேகை இருக்குடா! தேவைன்னா ஒரு எதிர்க் கட்சி ஆசாமியைத் தீர்த்துட்டு இந்தக் கப்பை அங்கே 'பினாண்ட்' செய்துட்டுப் போலீசுக்குப் போன் போட்டா - ''

''அட! உங்களுக்கு நரி மூளை பாஸ்!''

எத்தனையாவது முறையாகவோ நேரம் பார்த்தான் பிரகாஷ். மதியம் 3.00. சட். சிந்துவைச் சந்திக்க இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறதே என்று நொந்து கொண்டான்.

சிந்துஜா காலையில் போன் செய்தபி லிருந்தே அவனுக்கு இருப்புக் கொள்ள வில்லை. பாதி வரைந்திருந்த ஓவியத்தைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டான். காதலியைக் காணும் ஆசை முன்பு, ஓவியம் கூட இரண் டாம் பட்சம்தான். சிந்துஜாவை இரண்டு 'முழு' நாட்கள் பார்க்காமல் தவித்துப் போயிருந்தவனுக்குத் தற்போதுதான் முகத் தில் உயிர் வந்திருந்தது.

பிரகாஷ் நர்வஸாக நடை பயின்று ஹாலுக்கு வந்து அமர்ந்தான். இறைந் திருந்த இனசரிகளில் ஒன்று தேர்ந்தெடுத்துப் பிரித்தான்.

கொட்டை எழுத்துக் குற்றச் செய்திகள். அரசியல் ஆரவாரங்கள். சூடான சூளு ரைகள். நெருக்கியடித்த சினிமா விளம்ப ரங்கள். ஒரு இரைக் காவியத்திற்கு வெற்றி கரமான பத்தாவது நாளாம்!

நாலாம் பக்கத்திலிருந்த 'கண்காட்சி' பற்றிய விளம்பரம் பார்த்ததும் அவன் முகத்தில் பரவசப் புன்முறுவல் அரும்பி யது. மனம் சரசரவென்று பின்னுக்குத் தாவி யது. அவனுடைய ஓவியக் 'கண்காட்சி யில்தான்' முதன்முதல் சிந்துஜாவைச் சந்தித் தான்.....

அவனுடைய ஓவியங்களுக்கு நல்ல வரவேற்பிருந்தது. நடைபெற்ற நான்கு நாட்களும் குறைவின்றிக் கூட்டம். சிலர் விரும்பி விலைக்கு வாங்கிச் சென்றனர். சிற்சிலர் நாடிய ஆர்வ குறிப்புகளுக்குப் பெருமிதமாகப் பதிலுரைத்தான்.

நான்காம் நாள் மதியம். காலரியில் அவ்வளவாகக் கூட்டமில்லை. இடைத்த சந் தர்ப்பத்தில் ஒரு ஓரமாக ஒதுங்கித் தீவிர ரசனையுடன் பிரகாஷ் ஓவியம் வரைகை யில் -

''ஏன் மிஸ்டர் நீங்க செஞ்சிருக்கிறது நியாயம்தானா?''

திடுமென்று ஒரு பெண் குரல் கோப மாக ஒலித்ததும் ஓவியத்திலிருந்து நிமிரா மல் நிதானமாக, ''என்ன அநியாயம் செய் துட்டேன் மேடம்?'' என்றான்.

என் அனுமதி இல்லாம என்னைப் படமா வரைஞ்சு இப்படி பப்ளிக்கா டிஸ்ப்ளே செய்திருக்கிறது அநியாயமில் லையா?''

''உளறாதீங்க! உங்க படம் நான் வரைஞ்சேனா?'' என்று மனமின்றி நிமிர்ந்த பிரகாஷ் அதிர்ந்தான். அவனைப் பல ஆச்சரிய அம்புகள் ஒரு சேரத் தாக்கின. அசர வைத்தது அவள் அழகு. அவள் கோபமாக விசிறிக் காண்பித்த அவனது ஓவியத்தில்

''என்ன சார் இது? இவரு வேட்டி சட்டையை 'இன்' பண்ணிட்டுப் போறார்?''
''அதான் சொன்னேனே, அவர் பழமைக்கும் புதுமைக்கும் பாலமா திகழறவர்னு!''
- சம்பத் குமாரி

பல்வேறு பற்குச்சிகளின் பலன்கள்

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி தருபவை.

நாயுருக்குச்சி தைரியத்தையும், மேதையையும், அறிவையும், மென்மையான குரலையும் தரும். **மாதுளங்குச்சி, வெட்பாலைக்குச்சி, மருதம்குச்சி** அழகு தரும். **ஜாதி மல்லிக்குச்சி, மந்தாரம்குச்சி** கெட்ட கனவுகளைப் போக்கும். **எருக்கு** வீரியத்தைக் கட்டும். **ஆலி** பசி தூண்டும். **புங்கு** வெற்றி நோக்கை வளர்க்கும். **இச்சி** பொருள் சேர்க்கும். **இலந்தை** இனிய குரல் தரும். **கருங்காலி** வாய் நாற்றத்தைப் போக்கி மணம் தரும். **வில்வம்** செல்வத்தைப் பெருக்கும். **அத்தி** பேச்சு வன்மையை வளர்க்கும். **மா** ஆரோக்கியம் நிலைக்கச் செய்யும். **வேம்பு,** வாய்நாற்றம் பற்களில் சீழ், வேக்காளம், எகிறுகளில் வலி இவைகளைப் போக்கும். **தம்பு** தைரியத்தையும் மேதையையும் அதிகப்படுத்தும். **சம்பகம்** வாக்குவன்மை, கேட்டது மறக்காதிருத்தல் இவைகளைத் தரும். **பொன் வாகை** புகழ், அழகு, ஆயுள் தரும்.

எங்களுடைய பல இனிப்பு வகைகளும், பல கார வகைகளும் அவற்றிற்கு தந்த பல்வேறு நற்பலன்களையும் அளிக்கக் கூடியவை.

கல்யாண வைபவங்களுக்கு

சீர் முறுக்கு, சீர் முள்ளுத்தேன்குழல், அதிரசம், அப்பம் திரட்டுப்பால், பருப்புத் தேங்காய், வகைகள் ஆர்டரின் பேரில் செய்துத் தரப்படும்

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20
போன் : 412557

'ஏறக்குறைய' ஆச்சரிய அச்சாக அவள்.... மை! மை!

பிரகாஷ் தினறலுடன், ''நான்... நான் உங்களை என் வாழ்நாளில் இப்போதான் முதன் முறையாப் பார்க்கிறேன் மிஸ்!'' என்றான்.

''பொய் சொல்லாதீங்க சார்! நீங்க சேலம் வந்திருக்கீங்க.''

மேலும் வெளியான விவரத்தில் வியந்தான். அவள் - பெயர் சிந்துஜாவாம் - பிறந்து வளர்ந்தது சேலம் நகரத்திலாம்; சென்னையை முதன் முறை மிதித்தது நேற்றுத்தானாம். இவனோ சேலம் சென்ற தில்லை. பின் எப்படி இது சாத்தியம்?

அவன் அம்மா இறந்த இரண்டாம் மாதம் உதித்த ஒவியம் அது: 'மோனம்' என்ற தலைப்பில் - யோசனையில் ஆழ்ந்திருக்கும் ஓர் இளம் பெண்ணை, க்ளோசப்பில் தத்ரூபமாகக் கொண்டு வந்திருந்தான். தற்போது அப்பெண் எதிரில் உயிருடன்....! எப்படி சிந்துஜா என்ற இந்த தேவதையின் உருவம் அவன் கற்பனையில் உதயமாயிற்று?

விதியா? ஈ.எஸ்.பியா? ப்ரிய அம்மாவின் ஆவி அவனுள் புகுந்து....? அல்லது பூர்வ ஜென்மத் தொடர்பா? தற்செயல் என்று அவனால் ஒதுக்க முடியவில்லை. நிகழ்ந்தவை யாவற்றிலும் ஒரு தவிர்க்க இயலாத தன்மை இருப்பதாகப் பட்டது.

'இவன்தான்... இவன்தான்' என்று உள்ளுக்குள் ஒரு உற்சாகக் கூப்பாடு இளம்ப, ஒரு வித 'வித்தியாச' உணர்வு.

அவள் விடை பெறுகையில் அன்புடன் என்று கையெழுத்திட்டு 'மோனம்' பரிசளித்தான். முகவரி பறிமாறி -

அன்றிரவு ஸ்டூடியோவில் வயலின் இசை இழைய உலகத்து உச்சியில் உலவுவதாக உணர்ந்தான்.

மறுநாள் சிந்துஜா ஹாஸ்டலுக்குச் சென்றான். அதற்குப் பிறகு பல சந்திப்புகள்.....

'உன் அப்பா அம்மா சேலத்திலா?'

'என் இனிஷியல் 'அ'!'

'அப்படின்னா?'

'அனாதை சிந்துஜான்னு அர்த்தம்! என் பதினாலாவது வயசின்போது அப்பா அம்மாவை ஒரு பஸ் விபத்துல பறி கொடுத்துட்டேன். தாய் மாமா ஆதரவு காட்ட முன் வந்தார். ஆனா சில நாள்லயே அவர் 'பாசம்' என் உடம்பு மேலன்னுத் திட்டமா தெரிஞ்சப்போ வெளியே வந்துட்டேன். சேலம் கஸ்தூர்பா சமூக நல சங்கம் அரவணைச்சுக்கிட்டது. தொடர்ந்து படிச்சேன். ஸ்டாஃப் செலக்ஷன் பரீட்சை எழுதினேன். டிகிரி முடிஞ்ச சமயம் சரியா மெட்றாஸுக்கு ஏஜீஸ் ஆபீஸ்ல எல்.டி.சி. இளார்க் போஸ்டிங் கிடைச்சது. அதுக்காகச் சென்னை வந்தப்பதான் பொழுது போகாம உங்க ஓவிய -'

'இனி நீ அனாதையில்லை. உனக்குத் துணையா நான் -'

'நான் தகுதியில்லையோன்னு -'

'ஷட்டப். நீ என் அதிர்ஷ்டம் சிந்து!'

'ஏன் அப்படி பார்க்கறீங்க பிரகாஷ்?'

'உத்துப் பார்த்தா 'மோனம்' படத்துக்கும் உனக்கும் ஒரிரண்டு வித்தியாசம் தென்படுதும்மா. படத்துல கன்னத்துல மிளகு சைஸ் மச்சம் வரைஞ்சிருந்தேன். உனக்கு அது இல்லை. நேர்ல உன் உதடு இன்னும் திருத்தமா -'

'ஏய். எல்லை மீறாதே!'

●

'சிந்து டார்லிங்! என்ன சீரியஸா எழுதிக்கிட்டிருக்கே? ஸ்ரீராமஜயமா? புதுக் கவிதையா? ஆபீஸ் குறிப்பு ஏதேனுமா?'

'.....'

'புக்கை இப்படிக் கொடு... மைகாட்! நோட்புக் பூராவும் என் பெயர்! உனக்கு என்ன பைத்தியமா?'

'ஐமா. உங்க பேர்ல!'

●

கடிகாரம் இனிமையாக ஒலித்து '4.30' என்று அறிவிக்கவும் பழைய பரவச நினைவுகளிலிருந்து விடுபட்டான். பரபரப்புடன் காரில் இளம்பினான்.....

பிரகாஷும் சிந்துஜாவும் நட்சத்திர ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டனர். இருவரும் கைகோர்த்து உற்சாகமாகப் பேசிய படி செல்வதை ஒரு ஜோடி பூனைக் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன.....

(தொடரும்)

''இங்கே புதுசா கட்டியிருக்கும் ரெஸ்டாரண்டுக்கு 'குப்ஸ் அன் கூல்ஸ்'னு அழகான பெயர் வைக்கணும்னு எப்படி உங்களுக்கு ஐடியா வந்தது?''

''இதைக் கட்டறதுக்கு முன்னாடி ரொம்ப வருஷமா இந்த இடத்துல குப்பையும் கூளமுமாய் இருந்தது. அதைத்தான் கொஞ்சம் சுருக்கி அப்படி ஸ்டைலாகப் போர் வச்சேன்!''

- ஆர். ரகோத்தமன்

பொன்விழா கவிதைப் போட்டி

முகவரியில்லா நட்பு

ராகவி

அறிமுக எழுத்தாளர்

பிரிய சினேகிதி!
புன்னை மரக் காட்டினிலே
வெண் பூ விரித்த மணற்பரப்பில்
பூக்களுக்கு வலிக்குமென்று - நாம்
முட்களிலே நடந்ததுவும்,

வறுமை என்னும் அரையிருட்டில்
நான் தடுமாறி விழுந்த போது
என் கண்ணீர் நீ துடைக்க
நாம் கைகோத்து நெகிழ்ந்ததுவும்,

வானத் திரையினிலே
வரைகின்ற சூரியனை
வகுப்பின் சன்னல் வழி - நம்
விழிச் சிறையில் படம்பிடிக்க
சிறப்புப் பாடம் இதுவோ என ஆசான்
சீறி நம்மேல் பாய்ந்ததுவும்,

தூரிகை போல் மலர் நிறைந்த
தூங்குமூஞ்சி மரத்தடியில்
முகில் நிறைந்த மழைப் பொழுதில்
முகமெல்லாம் கவிஎழுதிப்
பொழிகின்ற மழை நீரை - நாம்
போர்வையென மகிழ்ந்ததுவும்,

காயம்பட்ட மனங்களை நீ
கவிதை பாடித் தேற்றியதும்
பெண் எனில் பொன், நகை, பூச்சூடும்
பொம்மை அல்ல என்றதுவும்
வாழ்வின் நோக்கம் தேடல் என
வழிகாட்டிச் சென்றதுவும்

நிசமெல்லாம் நிழலாக,
நினைவெல்லாம் சுமையாக,
நீண்ட தூரம் நடந்த பின்பும்
நடந்து வந்த பாதையெங்கும்
நீ விட்ட தடயம் தோழி!
இத்தனை வருடம் கழித்த பின்பும்
எதை மறப்பது? எதை நினைப்பது?
இனிய சகியே! எங்கிருக்கின்றாய் நீ?

சரவணனின் வார்த்தைகளுக்கு உயிர் இருந்தது. ஊடுறுவித் தாக்கின. விண்ணென்ற வலியுடன், ''தகப்பனையே குறை சொல்ற அளவுக்கு வளர்ந்துட்டியா?'' என்று கேட்டாள் அம்மா. தனது எதிர்ப்பை அழுகையாகத்தான் வெளிப்படுத்த முடிந்தது அவளுக்கு.

சரவணன் பதில் சொல்லவில்லை.

''உம்மேலதான் எம்புட்டு ஆசை.... உசிரோட இருந்தா வேலைக்கு அனுப்பு வாரா....? மூட்டை தூக்கியாச்சும் காப் பாத்துவேன். எம் பையன் படிப்பை நிறுத்த மாட்டேன்னு சொன்னவரில்ல... அவ ரையா இப்படிக் கேக்கறே?''

அழுகை தெரியாமலிருக்கும்படி முகத் தைத் திருப்பிக் கொண்டாள். அவனுக்குக் காணச் சகிக்காததாக இருந்தது.

''எதுக்கும் நாளைக்கு மத்தியானம் வீட்டுக்கு வா. முடிஞ்சாப் பாக்கலாம்....''

அதே யோசனையுடன் சாப்பாட்டிற்கு வர, அம்மா தங்கவேலு வந்துவிட்டுப் போனதைச் சொன்னாள். அப்பா விட்டுப் போன சங்கதிகளில் அவரிடம் வாங்கிய கடனும் ஒன்று.

சரவணனுக்கு முகம் இருண்டது. ''அந் தாளு இப்ப எதுக்கு வந்தான். அதான் ரெண்டு மாசம் போகட்டும்னு சொல் லலே....''

''ஏதோ அவசரமாம். முடிஞ்சதைக் குடுங்கன்னு சொல்றாரு.... கை நீட்டி வாங் கின காசு, உங்க அப்பா இருந்தா இந்நேரம் திருப்பிக் குடுத்திருப்பாரு.....''

''அவரு வாங்கினாரு.... குடுப்பாரு.... என்னால முடியாது.....''

மறுபடியும்

''நான் என்ன சொல்லிட்டேன்னு இப்ப ஒப்பாரி வைக்கிறே....'' எனக் கேட் டான்.

அவள் பதில் சொல்லாததுடன், மேலும் பிலாக்கணம் பாட, சரவணனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

எழுந்து சட்டையைப் போட்டுக் கொண்டான்.

''அண்ணே.... சாப்பாடு ரெடியாயி டுச்சு'' லட்சுமி தடுக்க முயல - ''அந்தம் மாவுக்குப் போடு. இன்னுட்டு தெம்பா ஒப் பாரி வைக்கட்டும்....'' விர்ரென்று வெளியே வந்தான். கோபத்துடன் சைக்கி ளில் ஏறி உட்கார்ந்தான்.

தணற வைக்கும் மதிய வெயில். நினைவுகளில் கசக்கும் எரிச்சல்.... கொஞ்ச நாளாகவே வியாபாரம் சரி இல்லை. தொட்டதெல்லாம் நஷ்டம். கமிஷன் மண் டிக்கு நிறுவைத் தொகையைக் கொடுத் தால்தான் இனி சரக்கு கிடைக்கும் என்ற நிலைமை. லெட்சுமணசாமியிடம் வட்டிக் குக் கேட்டிருந்தான். அவசியம் நேரும் போது அவரிடம் கேட்டுத்தான் பழக்கம்.

''எவ்ளோ வேணும்ப்பா.....?''

''அஞ்சு நோட்டு அண்ணே.....''

''இப்ப அவ்ளோ இல்லை யேப்பா....'' என இழுத்தார்.

''ரொம்ப கஷ்டம்... உங்களைத் தாண்ணே நம்பி இருக்கேன்....''

''அவரு என்ன.... தன் செலவுக்கா வாங்கினாரு.... உங்களை வளர்க்க வாங்கின கடன் தானேடா....!''

''இதை மட்டும் சொல்லாதே. கெட்ட கோபம் வருது. பெரிசா வளர்த்துட்டீக ரெண்டு பேரும்.... அதான் மெத்தையில உக்கார்ந்து சாப்பிடறேன்... குப்பை பொழப்பு..... ச்சைய்....''

அவனுடைய கோபத்தை இந்த நிலையில் அவள் எதிர்பார்க்கவில்லை. படபடவென்று பொரிந்த வார்த்தைகள் எத்தனையோ அர்த்தம் தருவதாக இருந்தன.

''ஏம்ப்பா.... நாங்க பொழைச்சது குப்பையாத் தெரியுதா உனக்கு?'' எனத் திருப்பிக் கேட்டாள்.

''பின்னே... பிச்சைக்காரன்கிட்டக்கூட ரெண்டு காசு இருக்கும். அவரு என்னத்தை வச்சுட்டுப் போனாரு?....''

அவளை முற்றிலுமாக வீழ்த்த இந்தக் கேள்வி போதுமானதாக இருந்தது. பெருமைப்பட புருஷனுடன் வாழ்ந்ததை அர்த்தமற்றதாக்கிய கேள்வி. அதுவும் பிள்ளையின் வாயால்.....

''இப்படிக் கேக்க புள்ளை இல்லையேன்னுதான் உன்னை வளர்த்து ஆளாக்கினேனா?''

அவனும் அதே வேகத்துடன் பதில் சொல்ல, வார்த்தைகள் வளர்ந்து, சண்டையாகி, சரிந்து உட்கார்ந்தாள். தன் துக்கங்கள் நினைவிற்கு வர, புலம்பினாள்.

''ஏண்டா.... பெத்த தகப்பனையா இப்படிக் கேக்கறே?''

வெளியே வந்து விட்டாளே தவிர சரவணனின் மனம் இன்னும் புழுங்கியது. திரும்பத் திரும்ப எதிரில் வரும் அம்மாவின் முகம். வீட்டில் இந்நேரம் பஞ்சாயத்து நடக்கும்.

மாமாவை வரவழைத்து அம்மா எல்லாவற்றையும் சொல்லி இருப்பாள். குடும்பத்துக்கு ஆதரவான மனுஷர். அன்றாட நிகழ்வுகளைத் தம்பியிடம் ஒப்புவித்தால்தான் அவளுக்கும் திருப்தி.

மார்க்கெட்டிற்கு வந்து கடையைத் திறந்தான்.

கடை என்ன? சுற்றிலும் சாக்குப் படுதா. தலைக்கு மேல் தென்னங்கீற்று. கூட்டம் குறைந்த நேரம். சக வியாபாரிகள் சாப்பிடப் போயிருந்தார்கள். சுட்டெரிக்கும் வெயில். புழுதிக்காற்று. தனக்கு மட்டும் ஏன் வாழ்க்கை இப்படி தண்டனை போல விதிக்கப்பட்டு விட்டது?

அப்பா செத்தபோது சரவணன் இரண்டாம் வருஷம் படித்துக் கொண்டிருந்தான். சாவின் துக்கம் விலகி, ''இனி என்ன செய்யறது?'' என்ற கேள்வி எதிரில் நின்ற நேரம்.

கூரை முகட்டைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தவனிடம் மாமாதான் யோசனை சொன்னார்,

''ஏம்ப்பா... இன்னும் எத்தனை நாளைக்குத்தான் போனவரை நினைச்சுக்கிட்டே இருக்கிறது.... ஆம்பளைப்புள்ளை... இனி சம்பாதிக்கிற வழியைப் பார்க்கணும். என்ன சொல்றே?''

''என்ன சொல்லட்டும்.... படிப்பு முடிய இன்னும் ஒண்ணரை வருஷம் இருக்கே.... மாமா.''

''அதுக்குள்ள இங்க எல்லார் வயிறும் காஞ்சு போயிடும். அப்படித்தான் படிச்சாலும் உடனே வேலை கெடைச்சிரப் போவுதா?''

மாமா காரியவாதி. அப்பாவைப் போலவே காய்கறி வியாபாரிதான். என்றாலும், யாரும் எளிதில் வாங்கிட முடியாத சாதுர்யம். சரவணன் பதில் தெரியாமல் விழிக்க -

''சொல்றனேன்னு தப்பா நினைக்காதே.... உங்க அப்பா கடை இன்னும் காலியாத்தான் இருக்கு. நீ ஏவாரம்

மும்தாஜ் யாசீன்

பண்றேன்னு சொல்லு.... மத்ததை நான் பார்த்துக்கறேன்....''

''ம்.....''

''சும்மா தலையை ஆட்டிப் பிரயோஜனம் இல்லை. முதல்ல சோத்துக்கு வழி வேணும். தங்கச்சி நிக்குது. அதுக்கு ஒரு வழி வேணும்.... யோசிச்சுப் பாரு..... எது நல்லதுன்னு படுதோ அதைச் செய்....''

இரண்டு நாள் குழப்பத்திற்குப் பிறகு மாமாவின் வாதம்தான் ஜெயித்தது. அப்பாவின் சாக்குக்கட்டைப் பிரித்தான். கைத்தராசு. நாலைந்து படிக்கற்கள். தோளில் குறுக்காகத் தொங்க விடும் காசுப்பை. பழைய கணக்குப் புத்தகங்கள்.....

''ஆண்டவனே....'' என்று வெளியே கால் எடுத்து வைத்த நேரம் அம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டு அழுதாள். அவனுள் ஏமாற்றமும், இயலாமையும் கொப்பளித்தன.

யோசித்துப் பார்த்தால் அப்பாவின் மீது மரியாதை சரிந்த முதல் தருணம் அதுதான். சந்தநிக்குச் சேர்த்து வைத்துச் சாகிற தகப்பன்மார்கள்தான் மரியாதைக்கு உரியவர்கள். அதன் பின்னர் அப்பாவின் மீது கோபம் உண்டான தருணங்கள்தான் அதிகம்.

- வாங்கிய கடனுக்குப் பதில் சொன்ன போது.

- அழுக்குத் துணியும் பரட்டைத் தலையுமாகக் கண்ணாடியில் தன்னைக் கண்ட சமயம்.

கூடப்படித்தவர்களைக் கண்டு, பாதையை மாற்றிக் கொண்டு போன பொழுது. அப்பாவின் பெயரைச் சிம்மாசனத்தில் வைக்க வேண்டும் என்று அம்மா ஏன் எதிர்பார்க்கிறாள்?

சரவணன் மாமாவை எதிர்பார்க்கவில்லை.

''என்னப்பா... ஏவாரம்லாம் எப்படி?'' என எதிரில் நின்றவரை ஆச்சரியத்துடன் பார்த்தான். ''வாங்க மாமா.....'' எனக் கல்லாவின் அருகில் ஸ்டூலை நகர்த்திப் போட்டான்.

பூச்சி மாதிரி முத்து உட்கார்ந்தான். மெலிந்த தேகம். குச்சி குச்சியாய்க் கை கால்கள்.....

''டீ சாப்பிடுங்க....'' சாயா மாஸ்டரைக் கைதட்டிக் கூப்பிட்டு, இரண்டு என விரலைக் காட்டினான்.

''ஒண்ணு சொல்லு. உனக்குச் சாப்பாடு இருக்கு....''

சரவணனுக்கு மாமாவின் வருகை புரிந்தது.

அவனுக்கு மேலும் புரிய வைப்பதைப் போல ''சாப்பிடலையா... கோவத்தைச் சோத்துல காட்டக் கூடாது மாப்ளே.....'' என்றான் முத்து.

சரவணன் பதில் சொல்லவில்லை.

''வெங்காயம் என்ன விலை?'' என்று கேட்டான் ஒரு பெண்மணி.

''ஆச்சி..... நீங்க கூட விலை கேட்டுத் தான் வாங்கணுமா?'' என்றான் முத்து.

திரும்பியவளுக்கு அவனைத் தெரிந்தது. ''அட.... இங்க என்னய்யா?'' என ஆச்சரியப்பட்டாள்.

''சும்மாதான் ஊர்ல எல்லாருக்கும் வெங்காயம் கிடைக்குதான்னு பார்க்கத்தான்.''

''இந்த வாய்தான்யா... உனக்குச் சொத்து.....'' ஆச்சியும் சிரித்தாள். அவள் போனதும்,

''சாப்பிட்டு வா மாப்ளே.... கடையை நான் பார்த்துக்கறேன்..''

''.....''

''போ... உங்கிட்ட கொஞ்சம் பேச ஏலும்..... பசிக்கிறவன் கிட்ட நாயம் பேச முடியுமா?''

சரவணன் கேரியரை வாங்கிக் கொண்டு போனான்.

திரும்பி வந்த போது முத்து இருமிக்

❑ புகை பிடிக்கும் பழக்கத்துக்கு 14 மில்லியன் மக்கள் ஆளாகியுள்ளார்கள். இதனால் மனிக்கு 12 பேர், சராசரியாக இறக்கிறார்கள். 2,85,000 பேர் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான நோய்க்குச் சிகிச்சை பெறுகிறார்கள். அரசாங்கங்கள் இதற்காக வருடத்திற்கு 2000 கோடி ரூபாய் செலவிடுகின்றன. இந்த நோய்களால் ஒவ்வொரு வருடமும் 50 மில்லியன் மனித உழைக்கும் நேரம் வீணாகிறது. சாலை விபத்தில் மரணம் அடைபவர்களைக் காட்டிலும் 20 மடங்கு அதிகமாகப் புகை பிடிப்பதால்தான் இறக்கிறார்கள். புகை பிடிப்பதால் இருதய நோய் மட்டுமல்ல, வாய், சிறுநீரகம், கல்லீரல், குடல் ஆகிய வற்றில் கேன்சர் (புற்றுநோய்) வருவதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட பிரிட்டிஷ் மக்கள் இதைத் தடுக்க அரசாங்கத்தை வற்புறுத்துகிறார்கள். எனவே 20 சிகரெட் கொண்ட ஒரு பாக்கெட்டை ரூ 135 ஆக - 1995ல் உயர்த்த பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது. மேலும் புகை பிடித்தல் சம்பந்தமான எல்லா விளம்பரங்களையும் தடை செய்ய அந்த அரசு உத்தேசித்துள்ளது.

- நா. துளசிராமன்
தகவல் : ''இந்து''

- ஆர். ரகோத்தமன்

கொண்டிருந்தான். தான் நல்ல நிலை மைக்கு வந்தால், மாமாவுக்கு வைத்தியம் செய்ய வேண்டும். எனச் சரவணன் நினைப் பது உண்டு. அப்படி ஒரு காலம் வருமா?

''சாப்பிட்டாச்சா... அப்ப கோபம் தீர்ந் தாப்லதான்.'' சிரிக்க - அம்மா என்ன சொல்லி இருப்பாள் என யோசித்தான் சரவணன். எதிராளியைச் சட்டென்று தொடாதே.' கொஞ்சம் கொஞ்சமாய் நெருங்கு.... முத்து நெருங்கினாள்.

''அம்மாகிட்ட என்னய்யா பிரச்னை?''

''அம்மா உங்ககிட்ட என்ன சொல் லிச்சு?''

''என்னமோ சொல்லிச்சு... படிச்சவன் கொஞ்சம் அனுசரிச்சுப் போகக் கூடாது....!''

''ஆமா! எல்லோரும் என்கிட்டயே குத்தம் கண்டு பிடிங்க....'' சரவணன் சலித் துக் கொண்டான். முகத்தில் கொப்புளித்த வேதனையைக் கண்டு மாமா ஆறுதலாகத் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

பேச ஏதுமற்றவர்களைப் போல இரு வரும் ஒரு கணம் பார்த்துக் கொண்டார்கள்.

சாக்கு துவாரங்களின் வழியே வட்ட காசுகளாய் வெளிச்சம். பக்கத்துக் கடையில் பச்சை மிளகாய் மூட்டையைப் பிரித்துக் கொட்டியதால் உண்டான கார நெடி. தாலும் கத்திரிக்காய்க்குத் தண்ணீர் தெளித் தால் தேவலை என்று யோசனை.....

''சொல்லு.... மனசுல இருக்கிறதைச் சொன்னாதானே வெளியே தெரியும்?''

''அப்பாவை ஏதோ சொல்லிட்டனாம். அதான் அந்தம்மாவுக்குக் கோவம்...''

''ம்.....''

''ஏதோ ஒரு வயித்தெரிச்சல். கஷ்டப் பட வச்சிட்டாரேன்னு ஒரு இது.... பெத்த புள்ளைதானேன்னு பொறுத்துக்கணும். அதில்லாம.....''

''உங்கம்மா மாதிரி பொறுமைசாலி கெடையாது.... சரவணா.....''

''நீங்கதான் மெச்சிக்கணும் மாமா.....''

''நெசமாவே உங்கப்பா மேல கோவம் தானா?''

''பின்ன.....''

''என்ன கோவம்?''

''.....''

''காசு பணம் வச்சிட்டுப் போக லைன்னா?'' பெரும் குரலில் சிரித்தான். பிடியைப் பற்ற வைத்துக் கொண்டு, சரவணனின் முகத்தை நேராகப் பார்த்தான். ''பைத்தியக்காரா.... காசா பெரிசு? அறி வும் ஆரோக்கியமான உடம்பும்தானேடா பெரிய சொத்து.... பெத்த மனுஷன் இதைத் தரலியா உனக்கு?''

சிரிப்பு மறைந்து முகம் இறுகியது. இருமல் மீண்டும் ஆரம்பிக்க நெஞ்சில் கை வைத்தபடி, ''எங்கப்பன்.... அதான் உன் பாட்டன்.... எனக்கு அதைக் கூடத் தரலை சரவணா..... அவர் விட்டுட்டுப் போனது கடனையும், இந்த பரம்பரை வியாதி யையும் தானேடா... நான் எங்க போயி முட்டிக்கிறது.... சொல்லு.....''

அதிர்ந்தவனாக, ''மாமா....'' எனச் சர வணன் நிமிர்ந்து பார்க்க - தான் சொன் னதை நிரூபிப்பதைப் போல முத்து இருமிக் கொண்டிருந்தான். ''அவரவர் வாழ்க்கை அவரவர் பிரச்னை. இதுக்கெல்லாம் பெத்த வங்களைக் குறை சொல்லக் கூடாது.....''

முத்துவுக்குத் தொடர்ச்சியாகப் பேச முடியவில்லை. நெஞ்சில் சங்கிலித் தொட ராய்த் தடைகள். வலி அவஸ்தை.....

இடையில் தண்ணீருக்காகச் சைகை செய்ய, சற்று தள்ளியிருந்த டீக்கடைக்கு ஓடினான் சரவணன்.

மாமாவின் புதிய கோணம். பச்சென்று அறைந்த நியாயம்.....

காற்று விசுவிசுத்தது. தனக்குள்ளா? வெளியேவா? என்று தெரியவில்லை.

சுகமாக மூச்சை இழுத்து, புதிய காற் றைச் சுவாசிக்க ஆரம்பித்தான் அவன்.

சிவகாமியின்

முப்பத்தேழாம் அத்தியாயம்
புலிகேசியும் சிவகாமியும்

சத்ருக்னன் கூறிவந்த வரலாற்றில் மேற்கண்ட இடத்துக்கு வந்ததும் மாமல்லருக்கு மூச்ச நின்று விடும்போல் இருந்தது. மேலே நடந்ததைத் தெரிந்து கொள்ள அவர் அவ் வளவு ஆவலாயிருந்தார். ஒரு கண நேரத் திற்குள் அவருடைய மனம் என்னவெல் லாமோ கற்பனை செய்தது. சத்ருக்னனும் சிவகாமியும் புறப்பட்டு ஓடி வந்திருக்க வேண்டும் என்றும், மறுபடியும் வழியில் அவனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் நினைத்தார். அவளை அந்த ஆபத்திலிருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு அவருடைய உள்ளம் துடித்தது.

''சத்ருக்னா! ஏன் இப்படிக் கதையை வளர்த்திக் கொண்டிருக்கிறாய்? சிவ காமியை எங்கே விட்டுவிட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்லு'' என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

''பிரபு, சிவகாமி அம்மை இப்போது வடபெண்ணை நதிக்கு அப்பால் போய்க் கொண்டிருப்பார்! பொன்முகலி ஆற்றுக் கும் வட பெண்ணைக்கும் மத்தியில் அவரை நான் விட்டுவிட்டு வந்தேன். பாவி!'' என்று சத்ருக்னன் துயரக் குரலில் கூறினான்.

மாமல்லரின் கண்களில் தழற்பொறி பறந்தது. புலிகேசியிடம் வந்த கோபத்தைக் காட்டிலும் சத்ருக்னனிடம் அதிகக் கோபம் அவருக்கு வந்ததாகத் தோன்றியது.

''இதென்ன? சிவகாமியைப் புலிகேசி யிடம் விட்டுவிட்டு நீ மட்டும் தப்பி வந் தாயா? சத்ருக்னா! என்னிடம் விளையாட வேண்டாம். சீக்கிரம் விஷயத்தைச் சொல்!'' என்று கர்ஜனை புரிந்தார்.

அப்போது ஆயனர், மாமல்லருக்குக் காரணம் விளங்காத உற்சாகம் நிறைந்த குரலில், ''பிரபு! சத்ருக்னன் சொல்கிறபடி சொல்லி வரட்டும். தயவு செய்து சற்றுப் பொறுமையாகக் கேளுங்கள்!'' என்றார். சத்ருக்னன் மறுபடியும் சொல்லத் தொடங் கினான்:

''சிவகாமி அம்மை உடனே என்னு டைய யோசனையைச் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டு தப்பிச் செல்ல இணங்கு வார் என்று எதிர்பார்த்தேன். இதில் பெரும் ஏமாற்றம் அடைந்தேன். அதுவரையில் தைரியமாயிருந்த சிவகாமி அம்மை என் னுடைய யோசனையைக் கேட்டதும் திடீ ரென்று விம்மி அழத் தொடங்கினார். முகத் தைக் கைகளால் மூடிக் கொண்டு தேம்பி னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவரைச் சமாதானப்படுத்த முயன்றேன். அப்போது சிவகாமி அம்மை என்னை வெறித்துப் பார்த்து, 'அவருடைய வாக் குறுதியை நம்பி இந்தக் கதி அடைந்தேன்' என்றார். உடனே, 'இல்லை, இல்லை. அவர் பேச்சைக் கேளாததால் இந்த விப ரீதம் வந்தது. இனி அவருடைய முகத்தில் எப்படி விழிப்பேன்?' என்றார். இன்னும் என்னவெல்லாமோ சம்பந்தமற்ற வார்த் தைகளைச் சொன்னார். இதனாலெல்லாம் என் திகைப்பு அதிகமாயிற்று. ஒருவேளை அவருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு விட் டதோ என்று மிகவும் பயந்து போனேன். பிறகு, சளுக்கர் படைகள் நம் இராமங்களில் செய்த அட்டூழியங்களைத் தம் கண்களால் பார்த்தது பற்றிச் சிவகாமி அம்மை சொல்ல ஆரம்பித்தார். அப்புறந்தான் அவருடைய அறிவுத் தெளிவைப் பற்றி எனக்கு ஏற்பட்ட சந்தேகம் நீங்கிற்று. அவர் சொன்னவற்றை யெல்லாம் சிறிது நேரம் நான் பொறுமை யாகக் கேட்டேன். பிறகு, 'அம்மா! மகேந் திர பல்லவரும் மாமல்லரும் இதற்கெல் லாம் பழிக்குப் பழி வாங்குவார்கள்!' என் றேன். அப்போது சிவகாமி அம்மைக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் ஆவேசத்தையும்

பார்க்க வேண்டுமே? 'ஆம், சத்ருக்னா! ஆம்! பழிக்குப் பழி வாங்கியே தீர வேண்டும்' என்று அவர் அப்போது போட்ட கூச்சலினால் காவலர்கள் சந்தேகங் கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று எனக்குப் பயமாய்ப் போய்விட்டது. நல்லவேளையாக அங்கே ஸ்திரீகள் பலர் தூக்கத்திலே புலம்புவதும் பிதற்றுவதும் சகஜமாயிருந்த படியால், சிவகாமி அம்மையின் கூச்சல் காவலர்களின் கவனத்தைக் கவரவில்லை.

''பிறகு நான் அவரை மெள்ள மெள்ளச் சாந்தப்படுத்தினேன். மறுபடியும் தப்பிச் செல்லும் யோசனையைக் கூறினேன். அப்போது அவர் என்னை வெறித்துப் பார்த்து, ''ஐயா, உண்மையாகவே என்னைத் தப்பி வரச்சொல்கிறீரா? இங்கே என்னைப்போல் ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கட்டிய புருஷனை விட்டு விட்டு வந்திருக்கிறார்கள். சிலர் கைக் குழந்தைகளைக் கதற விட்டு வந்திருக்கிறார்கள். இவர்களை எல்லாம் அந்தச் சளுக்க ராட்சதர்கள் கொண்டு போகும்படி விட்டுவிட்டு நான் மட்டும் தப்பிச் செல்லவேண்டுமா? எனக்குத் தாலி கட்டிய கணவன் இல்லை; வயிற்றில் பிறந்த குழந்தையும் இல்லை. நான் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? என்னை விட்டு விடுங்கள்; இங்குள்ள கைக் குழந்தைக்காரிகளில் யாராவது ஒருத்தியை அழைத்துப் போங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டாகும்' என்றார். என் மனமும் இளகிவிட்டது. ஆயினும் மனத்தைக் கெட்டிப்படுத்திக் கொண்டு, 'அம்மா! மகேந்திரச் சக்கரவர்த்தி எனக்கு இட்ட கட்டளை தங்களைப் பத்திரமாய் அழைத்து வரவேண்டும் என்பதுதான். நான் சக்கரவர்த்தியின் ஊழியன். அவருடைய கட்டளையை நிறைவேற்ற வேண்டியவன்' என்றேன். இதனால் அவருடைய மனம் மாறாது என்று எனக்குத் தெரிந்தேயிருந்தது. ஆதலின் மறுபடியும், 'அம்மா! உங்களுக்குப் புருஷனில்லை. குழந்தை இல்லை என்பது உண்மைதான். ஆனால் தந்தை ஒருவர் இருக்கிறார் அல்லவா? ஏக புத்திரியாகிய தங்களைப் பிரிந்து அவருடைய மனம் என்ன பாடுபடும்? அதை யோசிக்க வேண்டாமா?' என்றேன்.

''சிவகாமி அம்மையின் கண்களில் அப்போது கண்ணீர் துளித்தது. தழுதழுத்த குரலில், 'ஆம்; என் தந்தைக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டேன். ஐயோ! அவர் பிழைத்தாரோ இல்லையோ?' என்றார். அம்மா! அவரைப் பிழைப்பிக்க விரும்பினால் நீங்கள் உடனே என்னுடன் புறப்பட வேண்டும்!' என்றேன் நான். சிவகாமி அம்மை மறுபடியும் முகத்தைக் கையால் மூடிக் கொண்டு விம்மினாள். சிக்கிரம் கையை எடுத்து விட்டு, 'ஐயா! இன்று ஒரு நாளைக்கு எனக்கு அவகாசம் கொடுங்கள். என் உடம்பும் உள்ளமும் சோர்ந்து போயிருக்கின்றன. இப்போது நான் புறப்பட எண்ணினாலும் ஓர் அடிகூட என்னால் எடுத்து வைக்க முடியாது. நாளைக்கு முடிவாகச் சொல்கிறேன்' என்றார். நானும் அவருக்கு ஒருநாள் அவகாசம் கொடுப்பது நல்லது என்று எண்ணி, 'ஆகட்டும், அம்மா! ஒரு நாளில் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. நாளைக்கே முடிவு செய்யலாம்' என்று சொன்னேன்.

''மறுநாள் இராத்திரி எப்படியாவது அவருடைய மனத்தைத் திருப்பி அவரையும் அழைத்துக் கொண்டு திரும்பலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் மறுநாள் மாலை நான் சற்றும் எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது. சளுக்கச் சக்கரவர்த்தி புலிகேசி பொன்முகலியாற்றைக் கடந்து வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். அவருடன் ஒரு சிறு சைனியமும் வந்தது! தளபதி சசாங்கனை அங்கேயே காவலுக்கு நிறுத்திவிட்டு இவர் மட்டும் முன்னால் செல்லத் தீர்மானித்து வந்திருக்கிறார் என்று ஊகித்தேன். அதன்படியே அன்று இரவுக் கிரவே எல்லாரும் வடக்கு நோக்கிப் பிரயாணமானோம். எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் துக்கத்தையும் சொல்ல முடியாது. வழியில் சிவகாமி அம்மை யோடு தனியாயிருக்க நேர்ந்தபோது, 'அம்மா! இப்படிச் செய்துவிட்டீர்களே!' என்றேன். 'நானா செய்தேன்? விதி இப்படி இருக்கும்போது நான் என்ன செய்வேன்!' என்றார் சிவகாமி. இரண்டு நாள் பிரயாணத்திற்குப் பிறகு மூன்றாவது நாள் திருவேங்கட மலையின் அடிவாரத்தில் சென்று தங்கினோம். முதல் இரண்டு நாள் பிரயாணத்தில் புலிகேசி நாங்கள் தங்கியிருந்த பக்கம் வரவேயில்லை. மூன்றாம் நாள்

மாலை நாங்கள் ஒரு பாறையின் பக்கத்தில் தங்கியிருந்தோம். சமீபத்தில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. சிறிது நேரத்துக் கெல்லாம் புலிகேசியும் இன்னும் சில குதிரை வீரர்களும் அந்தப் பாறையின் திருப் பத்தில் வந்து நின்றார்கள். சக்கரவர்த்தி குதிரை மேலிருந்து இறங்கி எங்கள் அரு கில் வருவாரோ என்று நான் எதிர் பார்த்தேன். அவ்விதம் நடைபெறவில்லை. சற்று நின்று பார்த்துவிட்டுச் சக்கரவர்த்தி குதிரையைத் திருப்ப யத்தனித்த போது தான் சற்றும் எதிர்பாராத அதிசயச் சம்பவம் நடை பெற்றது. கண்ணை மூடித் திறக்கும் நேரத்தில் சிவகாமி பெண்கள் கூட்டத்தின் மத்தியிலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடினார். புலிகேசியின் குதிரைக்கு எதிரில் வழிமறித்து நின்று, 'சக்கரவர்த்தி! ஒரு விண்ணப்பம்' என்று அலறினார்.

''சிவகாமி அம்மையின் அலறலைக் கேட்டு அந்தக் கல்நெஞ்சன் புலிகேசி மனம் கூட இளகியிருக்க வேண்டும். உடனே, புலிகேசி குதிரையிலிருந்து கீழே குதித்துச் சிவகாமியின் அருகில் வந்தார். 'பெண்ணே! என்ன விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்?' என்று கேட்டார். ஆகா! அப்போது சிவகாமி அம்மையின் வாக்கிலிருந்து வந்த ஆவேச மொழிகளை எவ்விதம் வர்ணிப்பேன்! அத்தனை தைரிய மும், சாமர்த்தியமும், வாக்குவன்மையும் அவருக்கு எங்கிருந்துதான் வந்ததோ, அறி யேன். கம்பீரமாகப் புலிகேசியை நிமிர்ந்து பார்த்து, தழுதழுத்த குரலில், சிவகாமி அம்மை கூறிய மொழிகளை ஏதோ எனக்கு ஞாபகம் உள்ள வரையில் கூறுகிறேன்.

''ஐயா! பூமண்டலத்தை ஆளும் மன்னர்களாகிய நீங்கள் உங்களுடைய வீரத் தையும் புகழையும் நிலைநாட்டிக் கொள்ள யுத்தம் செய்கிறீர்கள். இன்றைக்கு எதிரி

களாயிருக்கிறீர்கள்; நாளைக்குச் சிநேகிதர் களாகிறீர்கள்; இன்றைக்கு ஒருவனுடைய அரண்மனையில் இன்னொருவர் விருந் தாளியாயிருக்கிறீர்கள்; மறுநாள் போர்க் களத்தில் யுத்தம் செய்கிறீர்கள். உங்க ளுடைய சண்டையிலே ஏழைப் பெண்க ளாகிய எங்களை ஏன் வாட்ட வேண்டும்? உங்களுக்கு நாங்கள் என்ன கெடுதல் செய் தோம்? கருணை கூர்ந்து எங்களையெல் லாம் திருப்பி அனுப்பிவிடுங்கள். இங்கே சிறைப்பிடித்து வைத்திருக்கும் பெண்களில் சிலர் கைக் குழந்தைகளைக் கதற விட்டு விட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் அநே கர் கையிலே கட்டிய திருமணக் கங்க ணத்துடன் வந்திருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் நீங்கள் விடுதலை செய்து அனுப்பாவிட்டால், தங்களுடைய நகர மாகிய வாதாபியை அடைவதற்குள் அவர் களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும். திக் விஜயம் செய்துவிட்டுத் தலைநகருக்குத் திரும்பும்போது சித்தப் பிரமை பிடித்த ஆயிரம் ஸ்திரீகளை அழைத்துக் கொண்டு போவீர்களா? அதில் உங்களுக்கு என்ன லாபம்? ஆயிரம் பெண்கள் மனமார வாயாரத் தங்களை வாழ்த்திக் கொண்டு விடு திரும்பும்படி செய்யுங்கள்!' - இப்படிக் கல்லுங் கரையுமாறு சிவகாமி அம்மை கேட்டதற்கு, 'பெண்ணே! உன்னுடைய பாவ அபிநயக் கலை சாமர்த்தியங்களை யெல்லாம் நாட்டியக் கச்சேரியில் காட்ட வேண்டும்; இங்கே போர்க்களத்திலே காட்டி என்ன பிரயோஜனம்!' என்றான் அந்த ரஸிகத் தன்மையற்ற நிர்மூடன்!....."

சத்ருக்னன் இவ்வாறு சொன்னபோது, மாமல்லர் ஒரு நெடு மூச்சுவிட்டு, "ஆகா! ஆயனரின் மகள் அந்த நீசனிடம் போய்க் காலில் விழுந்து வரம் கேட்டாள் அல்லவா? அவளுக்கு வேண்டியதுதான்!" என்று கொதிப்புடன் கூறினார்.

சித்ருக்னன் மேலே சொன்னான்: "ஆம், பிரபு! சிவகாமி அம்மையும் தங்களைப் போலவே எண்ணியதாகத் தோன்றியது. புலிகேசியின் மறுமொழி யைக் கேட்டு அவர் தலையைக் குனிந்து கொண்டார். சிறிது நேரம் தரையைப் பார்த்த வண்ணம் இருந்தார். அப்போது அந்தச் சண்டாளப் பாவி, 'பெண்ணே! உன் அபிநய சாகஸத்தைக் கண்டு நான் ஏமாந்து விடமாட்டேன். ஆனால் உன் பேச்சில் கொஞ்சம் நியாயம் இருக்கிறது. ஆகையால் உன் வேண்டுகோளை நிறைவேற்ற இணங் குகிறேன். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை. நீ இந்தப் பெண்களுக்காக மிகவும் இரங்கிப் பேசினாய். உன்னுடைய இரக்கம் வெறும் பாசாங்கு இல்லை என்பதை நீ நிரூபிக்க வேண்டும். இவர்கள் கட்டிய கணவனைப் பிரிந்து வந்தவர்கள் என்றும், கைக் குழந் தைகளைப் பிரிந்து வந்தவர்கள் என்றும் சொன்னாயல்லவா? ஆனால் உனக்குக் கணவனும் இல்லை, குழந்தையும் இல்லை. நீ என்னுடன் வாதாபிக்குச் சந் தோஷமாய் வருவதற்குச் சம்மதிக்கிறாயா, சொல்லு! சம்மதித்தால் உன்னைத் தவிர இவர்கள் எல்லாரையும் இந்தக் கணமே விடுதலை செய்து அனுப்பிவிடுகிறேன்' என்றான். அந்த மொழிகளைக் கேட்டதும், அந்தப் பாவியை அங்கேயே கொன்றுவிட லாமா என்று எண்ணினேன்."

மாமல்லர் குறுக்கிட்டு, "நிபந்த னைக்குச் சிவகாமி சம்மதித்தாளா?" என்று குரோதம் ததும்பிய குரலில் கேட்டார்.

"ஆம், பிரபு! சிவகாமி அம்மை ஒரு கணங் கூடத் தாமதிக்கவில்லை. உடனே எழுந்து நின்று, "சம்மதம், சக்கரவர்த்தி!

கோகுலம்

கோகுலம் வயது ஒன்பதாச்சு!
கோகுலம் கடைக்கு வந்தாச்சு!

- ஐந்து தலை சர்ப்பத்தைக் கொன்ற தம்பித்துரையின் சாகசம் தெரியுமா?
- மின்மினி மினுக்கும் காரணம் தெரியுமா?

- பட்டத்துக் கழுதை தெரியுமா?
- பட்டாம்பூச்சிப் பண்ணை தெரியுமா?
- ஜப்பானில் சலங்கை ஒலிக்கிறது தெரியுமா?
- 35,000 பேர்களில் முதல் பரிசு பெற்றவன் தெரியுமா?

1992 பிப்ரவரி கோகுலத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்

பெற்றோரே கோகுலம் வாங்குங்கள்!
பிள்ளைகள் மகிழ்வதைக் காணுங்கள்!

நிபந்தனையை ஒப்புக்கொள்கிறேன்' என் றார். அச்சமயம் சிவகாமி அம்மை நின்ற நிலையும், அவருடைய முகத்தோற்றமும் தெய்விகமாயிருந்தது! இராவணனுக்கு முன் னால் நின்ற சீதையையும், துரியோதனன் சபையில் நின்ற பாஞ்சாலியையும், யமன் முன்னால் வாதாடிய சாவித்திரியையும், பாண்டியன் முன்னால் நின்ற கண்ணகியை யும் ஒத்து அச்சமயம் ஆயனரின் திருக் குமாரி விளங்கினார்....."

"சத்ருக்னா! உன்னுடைய பரவச வர்ணனை அப்புறம் இருக்கட்டும், பின்னர் என்ன நடந்தது?" என்று மாமல்லர் கேட் டார்.

"சற்று நேரத்துக்கெல்லாம் சக்கர வர்த்தி எங்களை விடுதலை செய்யும்படி கட்டளையிட்டார். பொன் முகலி ஆறு வரையில் எங்களைத் திரும்பக் கொண்டு போய் விட்டுவிடும்படியும் சில வீரர் களுக்கு ஆக்ஞாபித்தார். அவ்வளவு நாளும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருந்த ஸ்திரீகள் எல்லாரும் இப்போது ஒரே சந்தோஷத்தில் ஆழ்ந்தார்கள். சிவகாமி யைத் தலைக்குத் தலை வாழ்த்தினார்கள். ஆனால் எனக்கு இடி விழுந்தது போலி ருந்தது. சிவகாமியின் காலில் விழுந்து, 'அம்மா! உங்களை விட்டு நான் போக மாட்டேன். சக்கரவர்த்தியிடம் ம று ப டி வரங்கேட்டு என்னை உங்களுடனே வைத் துக் கொள்ளுங்கள்' என்றேன். சிவகாமி ஒரே பிடிவாதமாக, 'நீதான் முக்கியமாய்ப் போகவேண்டும். என் தந்தையிடம் போய்ச் செய்தி சொல்ல வேண்டும்' என்றார். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. கடைசியில் வேறு வழியில்லையென்று நானும் புறப்படத் தீர்மானித்தேன். மேலும் அங்கே தாமதித்தால் என்னுடைய வேஷம் வெளிப்பட்டுச் சிவகாமிக்கும் உபயோக மில்லாமல் இங்கே வந்து சொல்லவும் முடி யாமற் போய்விடலாம் என்று பயந்தேன். ஆகவே, 'தங்கள் விருப்பம் அதுவானால் போகிறேன், அம்மா! அப்பாவுக்கு என்ன செய்தி சொல்லட்டும்?' என்று கேட்டேன். 'என்னைப்பற்றிக் கவலைப்பட வேண் டாம் என்றும், வாதாபியில் நான் 'சௌக் கியமாயிருப்பேன் என்றும் சொல்லு. வாதாபியிலிருந்து திரும்பி வரும்போது அஜந்தா வர்ண இரகசியத்தைத் தெரிந்து கொண்டு வருவேன் என்றும் சொல்லு' என்றார் சிவகாமி அம்மை....."

இவ்விதம் சத்ருக்னன் சொன்னதும் ஆயனர் துள்ளும் உற்சாகத்துடனே "பார்த் தீர்களா?, பல்லவ குமாரா! சிவகாமி சௌக் கியமாயிருக்கிறாள். அதோடு அஜந்தா இரகசியத்தையும் அறிந்துகொண்டு வருவ தாகச் சொல்லுகிறாள். அதற்காக நான் பரஞ் சோதியை அனுப்பியதெல்லாம் வீணாகப் போய்விட்டதல்லவா? என் அருமைக்

குமாரியினால் என் மனோரதம் நிறை வேறப் போகிறது! இதுமட்டுமல்ல! வாதாபிச் சக்கரவர்த்தியைப் பற்றி நமது எண்ணத்தைக் கூட மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர் ரஸிகத்தன்மை அற்றவர், கலை, உணர்ச்சியே இல்லாதவர் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே? அப்படியிருந்தால், ஆயிரம் பெண்களைத் திருப்பி அனுப்பிவிட்டுச் சிவகாமியை மட்டும் அழைத்துப் போயிருப்பாரா? பிரபு!.... எனக்கு மட்டும் உடம்பு குணமாக வேண்டும். குணமானதும் நானே வாதாபிக்குப் போவேன்.....''

ஆயனரின் வார்த்தைகள் மாமல்லரின் செவிகளில் நாராசம் போல் விழுந்து கொண்டிருந்தன. சிவகாமி வாதாபிக்குப் போகச் சம்மதித்தாள் என்றதுமே மாமல்லரை ஆயிரம் தேள்கள் ஏக காலத்தில் கொட்டுவது போலிருந்தது. சிவகாமியிடம் அவர் உள்ளத்தில் கொண்டிருந்த பரிசுத்த மான அன்பில் ஒரு துளி நஞ்சு அப்போது கலந்தது என்றே சொல்லவேண்டும். சிவகாமி மனமுவந்து புலிகேசியிடம் வாதாபிக்குச் செல்லச் சம்மதித்தாள் என்னும் எண்ணத்தை அவரால் சகிக்க முடியவில்லை. இந்த எண்ணத்தினால் புண்பட்டிருந்த அவருடைய இருதயத்தில் கூரிய வேலை நுழைப்பது போலிருந்தது ஆயனரின் பேச்சு.

மாமல்லர் அப்போது தனிமையை விரும்பினார். பழைய தாமரைக் குளத்துக்குப் போகவேண்டுமென்று அவருக்கு விருப்பம் உண்டாயிற்று. சட்டென்று ஒரு துள்ளலில் எழுந்து நின்று ''சத்ருக்னா! அவ்வளவுதானே விஷயம்? சிவகாமி வேறு எந்தச் செய்தியும் அனுப்பவில்லையல்லவா?'' என்றார்.

சத்ருக்னன் தயக்கத்துடன் ஆயனரைப் பார்த்தான். அவர் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கவனித்த பின்னர், சிறிது தாழ்ந்த குரலில், ''பல்லவ குமாரா! சிவகாமி அம்மை தங்களுக்கும் ஒரு செய்தி சொல்லி அனுப்பினார். வேலின்மீது ஆணையிட்டுக் கூறிய வாக்குறுதியைத் தங்களுக்கு ஞாபகப் படுத்தச் சொன்னார். சீதாதேவி இலங்கையில் காத்திருந்தது போல் தாங்கள் வாதாபிக்கு வந்து அழைத்துப் போகும் வரையில் காத்திருப்பேனென்று சொன்னார்'' என்றான்.

சற்றுமுன் மாமல்லருக்கு இவ்வுலகம் ஒரு குளியமான வறண்ட பாலைவனமாகக் காணப்பட்டது. இப்போது அந்தப் பாலைவனத்தில் பசுமையான ஜீவ பூமி ஒன்றும் இருப்பதாகத் தோன்றியது.

(தொடரும்)

அருள்வாக்கு

கலா என்கிற சமஸ்கிருத வார்த்தை, கல்வி என்கிற தமிழ்ச் சொல், கல்ச்சர் என்கிற ஆங்கிலப் பதம், கொலே என்கிற பிரெஞ்சு வார்த்தை எல்லாவற்றுக்கும் மூலம் ஒன்றே. கலை சர்வ தேசத்தையும் தழுவுகிற விஷயமாதலால், வார்த்தையும் ஒன்றாகவே இருக்கிறது. 'கலா' என்றால் எப்போதும் வளருவது என்று பொருள் - சந்திரகலை என்கிறோமே அது போல். பிறை தினந்தோறும் வளர்வது போல், மன வளர்ச்சியைத் தருவது கலை. முடிவே இல்லாமல் வளர்வது இது. 'கற்றது கைமண்ணளவு' என்று, சரஸ்வதியே கற்றபடிதான் இருக்கிறாளாம். கலைச் சிறப்பே 'கல்ச்சர்', கலா'சாரம்' என்று இதைச் சமீப காலமாகச் சொல்கிறோம். பண்பு, பண்பாடு என்பது பழைய வார்த்தை.

உயர்ந்த எண்ணம் வளர்ந்து வளர்ந்து பல கலைகளாக உருவெடுத்திருக்கிறது. உயர்ந்த எண்ணங்கள் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொருவிதமாக உருவெடுக்கின்றன. சிற்ப ரூபமாக, சித்திர ரூபமாக, நாட்டிய ரூபமாக, சங்கீத ரூபமாக, காவிய ரூபமாக, தியாக ரூபமாக, சேவை ரூபமாக, தான ரூபமாக இப்படிப் பல உருவங்களாக உயர்ந்த எண்ணம் வெளிப்படுகிறது. இந்த உயர்ந்த எண்ணம் மிகவும் உயர்ந்து, விரிந்து எடுத்துக் கொள்கிற உருவமே, எல்லா உயிர்களிடமும் அன்பு. உலகம் முழுக்க ஒன்றாகி விட வேண்டும் என்று என்னுகிற அன்பில் பிறப்பதே மிகப் பெரிய பண்பாடு. இதுவே நமக்கெல்லாம் தலையான கலை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பேறுகாலம் உன்னதமானது. பேரின்பமானது. திருப்தியானது. ஒன்பது நீண்ட மாதங்களில் சிறியதும் மற்றும் பெரியதுமான உபாதைகளை அனுபவித்து ''அனைவரும் கேளுங்கள், நான் ஒரு தாய்'' என்று கூறும் வண்ணம் பயனுடையதாகத்தான் இருக்கிறது.

உங்கள் உடலுடன் ஏற்பட்ட ஒரு உன்னத செயலாயினும், ஒரு புத்துயிரை வெளிக் கொணர்ந்து உயிரளிப்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. அது ஒரு கடினமான பணியாகும். உங்கள் உடல் அதை நிறைவேற்றியுள்ளது. இந்த சோர்விலிருந்து சரியான நிலைக்கு திரும்ப வர உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது. தளர்ந்த தசைகளுக்கு ஓய்வு தேவை. மற்றும் கருப்பை கருங்க வேண்டும். உங்கள் உடல் கருத்தரிப்பதற்கு முன் இருந்த நலமான நிலைக்கு வர சில காலமாகிறது.

தாய்ப்பால் கொடுப்பது இதை உதவுகிறது. மற்றும் தாய்ப்பால் கொடுப்பதால் இரண்டு நற்பயன்கள் ஏற்படுகின்றன. உங்கள் குழந்தைக்கு பாலூட்டுவதினால் உண்டாகும் மென்மையான இன்ப நிலையில் சோர்வடைந்த தசைகள் மீண்டும் மறுமலர்ச்சி பெறுகின்றன. மேலும் கருப்பை கருங்க ஆரம்பிக்கிறது.

ஆம், சிறப்பின் அழகு சிறப்பானதையே திரும்ப கொண்டு வருகிறது என்று கூறவும் வேண்டுமோ ?

உங்கள் சீரான
உடல் நலத்திற்காக
உலகில் சிறந்த
குழந்தை உணவை
நாங்கள்
பரிந்துரைக்கிறோம்.

அமுல் இந்த அறிவுரையை ஒவ்வொரு இந்திய அன்னை மற்றும் அவள் குழந்தைக்கு அர்ப்பணிக்கிறார்கள்.



குஜராத் கோ ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 380 001.

ASP-AMUL-102/91 TAM

சிம்பு–இலக்கியா தேர்ந்தெடுத்த அதிர்ஷ்ட சாலிகள்

ஈகிள் டைரி பரிசு பெற்றவர் பெயர்ப் பட்டியல் : (சென்ற வாரத் தொடர்ச்சி)

251) டி. பாமா, பாண்டிச்சேரி - 605 003, 252) பி. சக்தி வேல், புளியங்குடி - 627 855, 253) உமா முரளிதரன், மயிலாடுதுறை, 254) ப. மூர்த்தி, சேலம் - 636 002, 255) பி. முத்துராமன், சேலம் - 636 005, 256) ஜி. அருணாதேவி, கோயமுத்தூர் - 641 028, 257) பா. பாஸ்கரன், நாயகன்பேட்டை - 631 601, 258) டி. வி. முத்துகப்ரமணியன், பெங்களூர் - 560 043, 259) புலவர். கு. தாண்டவராயப் பிள்ளை, திருக் கோவிலூர் - 605 803, 260) கே. ரத்தினகுமார், தரங்கம் பாடி - 609 301, 261) எச். எம். கப்ரமணி, தருமபுரி, 262) கே. பாபு, செங்கை - 603 201, 263) இரா. சாரங்கபாணி, தரங்கம்பாடி - 609 309, 264) வ. வீரப்பன், சீர்காழி - 609 110, 265) ஜே. சந்திரசேகர், தஞ்சை - 609 110, 266) ஆர். பத்மா, மயிலாடுதுறை - 609 003, 267) என். ரவீந்திரன், சேலம் - 636 001, 268) எஸ். சிவகாம சுந்தரி, மயிலாடுதுறை - 609 118, 269) ஜி. குருமூர்த்தி, காரைக்கால் - 609 802, 270) எஸ். பிரேமா, புதுதில்லி - 110 002, 271) ஆர். தாமோதரன், கடலூர் - 2, 272) சி. சரஸ்வதி, சேலம் - 636 005, 273) ஜி. பால கிருஷ்ணன், தஞ்சாவூர் - 614 206, 274) ஜமுனா ராஜேந்திரன், சேலம் - 636 014, 275) கே. எஸ். எம். சுந்தரசாமி, மன்னார்கோயில் - 608 301, 276) எம். மனோகரன், தருமபுரி - 635 207, 277) டி. தசரதன், இராமநாதபுரம், 278) எஸ். வாசு, தாணே - 400 606, 279) ஆர். பாலகப்ரமணியன், பாம்பே - 400 019, 280) எம். சண்முகசுந்தரம், கரட்டடி பாளையம் - 638 453, 281) ஜே. ஆர். கே. தீபக்குமார், பாம்பே - 400 020, 282) டி. மாணிக்கம், கல்கத்தா - 700 001, 283) சேலம் ஸாது அடிகளார், வேலூர் - 632 006, 284) எம். கலிய பெருமான், திருவாரூர் - 610 002, 285) பிலோமினா சீனிவாசன், திருச்சி - 620 003, 286) கா. சம்பத், ஈரோடு - 638 011, 287) கே. கப்பிரமணியன், கொல்லம் - 691 016, 288) வி. ஆர். பாலகப்ரமணியன், பழனி - 624 618, 289) ஜே. குப்புசாமி, அரக்கோணம் - 631 004, 290) டி. கே. ரவீந்திரன், மதுரை - 625 020, 291) எல். சி. மாணிக்கம், திருச்சி - 620 003, 292) எஸ். சங்கரன், மதுரை - 3, 293) டி. கே. ராமச்சந்திரன், திருச்சி - 620 013, 294) எம் பரமஹம்சன், திருச்சி - 620 021, 295) சி. ஆர். குமார், செங்கை, 296) கே. லலிதா, மதுரை - 1, 297) ஆல். முத்து, கந்தராபுரம் - 641 024, 298) ஆர். கரு மாரன், தஞ்சாவூர் - 613 001, 299) செல்வி வரதராஜு, தஞ்சாவூர் - 614 202, 300) கலாவதி குமாரராஜா, உடு மலைப்பேட்டை - 642 154, 301) அ. ஜெகந்நாதன், திருப்பூர் - 638 601, 302) எஸ். புவனேஸ்வரி, செங்கல் பட்டு - 602 002, 303) முக. தி. க. பாலகப்பிரமணியன், முசிறி - 621 211, 304) வி. எஸ். கோவிந்தன், திரு வில்லிபுத்தூர், 305) வி. கே. அனந்தராமன், பாலக்காடு - 678 011, 306) கு. தியாகராஜன், புதுச்சேரி - 605 001, 307) வி. ஸ்ரீமதி, விழுப்புரம் - 605 602, 308) கே. ஜெயங்கொண்டான், செங்கை - 603 106, 309) த. முத்தமிழ், காரைக்குடி - 623 001, 310) எம். பாலாஜி, சேலம் - 6, 311) எஸ். வரதராஜன், ஹைதராபாத் - 500 032, 312) எஸ். மோகன், காரைக்குடி - 623 002, 313) சி. கப்ரமணியன், சேலம் - 636 007, 314) ஆர். முருகன், கன்னியாகுமரி, 315) ஏ. கே. இராதாகிருஷ்ணன், பைங் குளம் - 609 188, 316) ம. ஸ்ரீதர், புதுதில்லி - 110 003, 317) வி. கப்ரமணியன், நெய்வேலி - 607 803, 318) கே. தர்மராஜன், திருச்சி - 620 008, 319) பி. அன்பழகன், நெய்வேலி - 607 807, 320) பி. சீதா லட்சுமி, மதுரை - 10, 321) என். மோகன், நெய்வேலி - 607 801, 322) டாக்டர். என். சித்ரா, நெய்வேலி - 1, 323) டாக்டர். ஆர். வி. நாதன், சீர்காழி - 609 111, 324) செ. பாண்டியன், பாண்டிச்சேரி - 605 004, 325) எஸ். கே. சக்திவேல், ஈரோடு - 638 011, 326) இரா. கல்யாணசுந்தரம், மதுரை - 9, 327) பி. எஸ். ராஜ கோபாலன், மயிலாடுதுறை - 609 001, 328) அ. இராம ஜெயம், அரசூர் - 608 302, 329) ஆர். செல்வராணி, மயிலாடுதுறை - 609 404, 330) எஸ். வெங்கடேஷ், சேலம் - 636 102, 331) ஆர். சவுண்டப்பன், சேலம் - 636 501, 332) டி. வீரையன், மன்னார்குடி - 614 019, 333) சாந்தா கப்புலட்சுமி, புதுக்கோட்டை, 334) டி. ராம கிருஷ்ணன், தஞ்சாவூர் - 613 004, 335) ஆர். கலிய மூர்த்தி, தஞ்சாவூர் - 1, 336) ஆர். தேவராஜபாண்டி யன், எட்டயபுரம் - 627 902, 337) ஜி. இளஞ்செழியன், தஞ்சாவூர் - 7, 338) எஸ். துரைசாமி, அள்ளிபூர் - 605 202, 339) விஜயராமன், திருக்கோயிலூர் - 605 757, 340) எஸ். ரெவினா பாலு, மதுரை - 625 001, 341) வெ. ஜானகிராமன், வேலூர் - 632 006, 342) எஸ். கமதி, செங்கை - 603 209, 343) வி. நளினி விஜயன், மதுரை - 625 011, 344) ந. மங்கையர்க்கரசி, ஒட்டன்சத்திரம் - 624 619, 345) ஆர். குமார், மதுரை - 625 001, 346) வி. மகாலட்சுமி, திருவண்ணாமலை - 606 601, 347) டி. கே. கணேசன், திட்டுக்குடி - 606 106, 348) செ. ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை - 1, 349) அ. தங்கசாமி, தஞ்சாவூர் - 613 006, 350) கே. கண்ணுசாமி, சேலம் - 637 410, 351) நீ. ராகவன், திரு வில்லிபுத்தூர் - 626 125, 352) கரையா மகபூப்ஜான், திருச்சி - 21, 353) ஏ. நசீர் அகமது, திருச்சி - 620 014, 354) ஆர். ரெங்கநாதன், சிதம்பரம் - 608 501, 355) எஸ். மாதவிசோமு, தஞ்சை, 356) ஆர். லக்ஷ்மி நாராயணன், நெய்வேலி - 607 803, 357) கே. கமலா, தஞ்சை - 614 713, 358) நா. கிருட்டிணசாமி, தர்மபுரி - 635 001, 359) ந. முத்துராமலிங்கம், பேரளம் - 609 405, 360) ஏ. கலியபெருமான், குறிஞ்சிபாடி - 607 302, 361) ஆர். ராஜேந்திரன், பாம்பே - 400 001, 362) ஆர். கோமதி, கோயம்புத்தூர் - 641 038, 363) ஏ. ஜெகதீசன், சேலம் - 637 208, 364) எஸ். பிச்சை, பெங்களூர் - 93, 365) ம. சஜி, கன்னியாகுமரி - 629 188, 366) வி. ஆர். ஸ்ரீதரன், சென்னை - 600 033, 367) என். பாலகப்ர மணியன், சென்னை - 600 061, 368) ஜுலக்ஷ்மி ராம ஸ்வாமி, சென்னை - 600 005, 369) எஸ். சேதுரத்னம், சென்னை - 600 101, 370) பி. நாராயணசுவாமி, சென்னை - 600 064, 371) டாக்டர். டி. எஸ். எஸ். அய்யனாரப்பன், சென்னை - 600 010, 372) அ. ராஜா ராம், சென்னை - 600 106, 373) ஜெ. பாலகப்பிரமணி யம், சென்னை - 600 091, 374) எஸ். ஜெயராம்,

சென்னை - 600 027, 375) வி. முத்துஸ்வாமி, சென்னை - 600 075, 376) சௌதா கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 600 002, 377) சி. வி. நாராயணசாமி, சென்னை - 600 007, 378) பி. நிர்மலா பிரபாகர், சென்னை - 600 023, 379) பா. ரேவதி பாலகப்ர மணியன், சென்னை - 600 071, 380) ரேவதி கிருஷ்ணா, சென்னை - 600 061, 381) மீனாக்ஷிரமணி, சென்னை - 600 033, 382) எஸ். முத்துஸ்வாமி, சென்னை - 600 033, 383) வி. சீனிவாசன், சென்னை - 600 024, 384) வெ. கணேசன், சென்னை - 600 045, 385) பி. ஈ. டி. நடராஜன், சென்னை - 600 011, 386) கோமதி கயம்பிரகாசம், சென்னை - 600 033, 387) அ. இராமசாமி, சென்னை - 600 004, 388) எஸ். ஆருவ முதன், சென்னை - 600 014, 389) ப. வெங்கடலட்சுமி, சென்னை - 600 048, 390) கே. வி. அலமேலு, சென்னை - 5, 391) அல்வி சபேசன், சென்னை - 600 014, 392) எஸ். ரெங்கநாதன், சென்னை - 600 053, 393) விஜயலக்ஷ்மி, சென்னை - 600 053, 394) வி. ஆனந்த், சென்னை - 600 013, 395) டாக்டர். செ. தெய்வச்சிலை, சென்னை - 600 056, 396) ஆர். மோகன், சென்னை - 600 007, 397) ந. ரா. சுவாமி னாதன், சென்னை - 600 015, 398) பி. கலாவதி, சென்னை - 600 053, 399) து. சந்தானலட்சுமி, சென்னை - 600 030, 400) டி. ஜ. பாலாஜி, சென்னை - 600 033, 401) ஜி. மணி, சென்னை - 600 109, 402) மா. பெருமாள், சென்னை - 600 114, 403) எஸ். அன்பரசி, சென்னை - 600 057, 404) எல். ஆர். சுந்தர ராஜன், சென்னை - 600 028, 405) பத்மா முத்துப் பிள்ளை, சென்னை - 600 083, 406) ஆர். என். லக்ஷ்மணன், சென்னை - 600 053, 407) வரலக்ஷ்மி சுப்ரமணியன், சென்னை - 600 033, 408) இ. தாமஸ் அம்மாள், சென்னை - 71, 409) கீதா வரதராஜன், சென்னை - 600 019, 410) மைதை ஆர். முரளி, சென்னை - 600 015, 411) என். பாலசுப்பிரமணியன், சென்னை - 600 101, 412) எஸ். எஸ். கணேசன், சென்னை - 600 020, 413) ஏ. ஞானவேலு, சென்னை - 600 087, 414) வி. சுந்தரிபாய், சென்னை - 600 087, 415) ஆர். உஷா, சென்னை - 600 004, 416) பி. ஸ்ரீராம், சென்னை - 600 087, 417) டி. தனிகாசலம், சென்னை - 600 086, 418) கணபதி சுப்ரமணியம், சென்னை - 600 059, 419) ஜி. பாரதி ராஜ், சென்னை - 600 033, 420) பி. அர்ஜுனன், சென்னை - 600 044, 421) அகிலா முரளீதரன், சென்னை - 600 075, 422) சரஸ்வதி வேலு, சென்னை - 600 049, 423) எஸ். பாலசுப்பிரமணியம், சென்னை - 600 078, 424) ஆர். வாள்மதி, சென்னை - 600 034, 425) கே. நடராசன், சென்னை - 21, 426) ல. கவிதா, சென்னை - 600 101, 427) ஈ. மனோகரன், சென்னை - 600 075, 428) எம். நடராஜு, சென்னை - 600 015, 429) மீனா கிருஷ்ணன், சென்னை - 600 101, 430) சாவித்திரி சுவாமிநாதன், சென்னை - 600 114, 431) லக்ஷ்மி கிருஷ்ணன், சென்னை - 600 004, 432) ஆர். கிருஷ்ணகுமார், சென்னை - 600 005, 433) எம். டி. பி. ராஜராஜேஸ்வரன், சென்னை - 600 102, 434) டி. பதி பூரணம், சென்னை - 600 049, 435) கே. ஜனார்த் தனன், சென்னை - 600 028, 436) ஆர். பாஸ்கர், சென்னை - 600 054, 437) எஸ். முருகவள்ளி, சென்னை - 600 023, 438) சந்தா ராஜகோபாலன், சென்னை - 600 004, 439) ஜி. வெங்கடாசலம், சென்னை - 600 035, 440) சகுந்தலா சர்மாணி, சென்னை - 600 031, 441) ஏ. கிருஷ்ணசுவாமி, சென்னை - 600 087, 442) மு. கப்பிரமணிய பிள்ளை, சென்னை - 600 078, 443) ஆர். லக்ஷ்மி நாராயணன், சென்னை - 600 042, 444) வளர்மதி கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 600 004, 445) எழில் அண்ணாமலை, சென்னை - 600 101, 446) வி. ஆர். சேஷாத்ரி, சென்னை - 600 090, 447) பத்மா சுந்தரம், சென்னை - 600 092, 448) உஷாதிருமலை, சென்னை - 600 044, 449) ஆர். சாந்தி, நங்கநல்லூர், 450) க. கோபி, சென்னை - 600 109, 451) டி. வி. பிரேமா, சென்னை - 600 005, 452) ஆ. சண்முகசுந்தரம், சென்னை - 600 114, 453) சந்திரராஜகோன், சென்னை - 600 044, 454) எஸ். அங்குராஜன், சென்னை - 600 021, 455) எஸ். தனுஷ்கோடி, சென்னை - 600 024, 456) ஜி. மகா லட்சுமி, சென்னை - 600 084, 457) எஸ். செல்லப்பா, சென்னை - 600 050, 458) எஸ். எஸ். ராகவன், சென்னை - 600 044, 459) குழந்தை செல்லம், சென்னை - 600 013, 460) சி. வீரராகவன், சென்னை - 600 032, 461) கே. திரிவேணி, சென்னை - 600 004, 462) ஏ. வெங்கட்ராமன், சென்னை - 600 020, 463) க. சந்திரசேகரன், சென்னை - 600 004, 464) எஸ். நளினி ராமதாஸ், சென்னை - 600 017, 465) எஸ். ரெங்கன், சென்னை - 600 102, 466) ந. ஜெயராமன், சென்னை - 600 078, 467) மு. அ. வசந்தகுமாரி, சென்னை - 600 020, 468) ஏ. விஜயலக்ஷ்மி, சென்னை - 600 005, 469) ஜே. அச்சா, சென்னை - 600 004, 470) நாகை. மனோ கரன், சென்னை - 602 013, 471) டி. ஜி. ஸ்ரீசைலன், சென்னை - 600 044, 472) பாலசுப்ரமணியன், சென்னை - 600 052, 473) வி. கௌசல்யா, சென்னை - 600 041, 474) என். விஜயலக்ஷ்மி, சென்னை - 600 028, 475) வி. சுந்தரேசன், சென்னை - 600 053, 476) வி. பாரதி, சென்னை - 600 045, 477) வசந்தா பத்மனாபன், சென்னை - 600 004, 478) கோ. கணபதி, சென்னை - 600 053, 479) எம். லக்ஷ்மி, சென்னை - 600 002, 480) சி. லோகநாதன், சென்னை - 600 116, 481) வி. சிவானந்தம், சென்னை - 600 075, 482) ரெ. இராமச்சந்திரன், சென்னை - 600 015, 483) ஏ. வி. ஸ்ரீனிவாசன், சென்னை - 600 044, 484) வி. ஜே. நடராசன், சென்னை - 600 015, 485) என். சுப்ரமணியன், சென்னை - 600 078, 486) உஷா முகுந்தன், சென்னை - 600 033, 487) எஸ். சீதாலக்ஷ்மி, சென்னை - 600 035, 488) பி. மங்களா கௌரி, சென்னை - 600 073, 489) எம். திலகவதி, சென்னை - 600 057, 490) ஆர். பாலகப்ரமணியம், சென்னை - 600 064, 491) சி. இராதாகிருஷ்ணன், சென்னை - 600 045, 492) வே. வரதராஜன், சென்னை - 600 035, 493) பி. ஜே. பாக்கியலக்ஷ்மி, சென்னை - 600 080, 494) தங்கம் சிவசங்கரன், சென்னை - 600 078, 495) டி. கே. சீனிவாசன், சென்னை - 600 018, 496) ர. புவனேஸ்வரி, சென்னை - 600 021, 497) எஸ். விஸ்வநாதன், சென்னை - 600 032, 498) ஏ. சுப்ர மணிய ஐயர், சென்னை - 600 001, 499) டாக்டர். ஆர். சுப்ரமணியன், புளியங்குடி - 627 855, 500) இரா. சுந்த ரேசன், சிதம்பரம் - 608 701.

புயலி நானலி

ஆஸ்பெஸ்டாஸ் கூரையில் மழை நடனமாடிக் கொண்டிருந்தது.

யுவராஜ் நீக்குச்சியை உரசி மெழுகு வர்த்தியைப் பற்ற வைத்தான். அவன் மூச்சுக்கேற்ப ஜோதி புரண்டு எழுந்தது.

அவன் அந்தக் கத்தியை எடுத்தான். கூரான முனை மாலையில்தான் தீட்டப் பட்ட பளபளப்போடு மின்னியது. அதைப் புகைப்படத்தின் மேற் வைத்தான்.

சாயம் போன போட்டோவில் லலிதா சிரித்தாள். சிரிக்கும் போது கண்ணோரங் களில் சுருக்கங்கள். மூக்கின் இருபுறமும் பெரிய பிராக்கெட் வளைவுகள். ரகசியப் படாத மேல் சதைகள்.

யுவராஜுக்கு அவள் சிரிப்பை மறுபடியும் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

அந்த ஒற்றை அறையில் சிலேட்டுப் பலகை அளவு இருந்த ஜன்னல் வழியே சாரல் உள்ளே தெறித்துக் கொண்டிருந்தது. கவரோரமாகப் போடப்பட்ட மரக்கட்டிலில், நரம்புகள் உரிந்த பாயை நனைத்துக் கொண்டிருந்தது.

அந்தக் கட்டில் அவனைப் பொறுத்த வரை இனிமேல் விறகுதான். இந்தக் கட்டிலில் உட்கார்ந்துதானே லலிதா அன்றைக்கு...

கூடருக்குக் கீழே மெழுகு சொட்டியது. கன்னங்களில் கண்ணீர் சொட்டியது.

ஜன்னல் வழியே காற்று சீறியது. மெழுகுச் சுடரை மிரட்டியது. கூரையிலிருந்து தொங்கிய உயிரில்லாத மின்சார

பல்பு தூளி ஆடியது. பணம் கட்டவில்லை என்று மின்சாரம் நிறுத்தப்பட்டுவிட்டது.

காற்று சும்மா இல்லாமல் சுவரில் சாய்த்து நிறுத்திய ஓவியப் பலகையை உந்தித் தள்ளியது.

லலிதா இருந்தால் பதறியிருப்பாள். அவளைத் தள்ளிக் கொண்டு ஓடி, அதை நிமிர்த்தி, அதற்கொரு முத்தம் கொடுத்திருப்பாள். அவன் அலட்சியம் செய்தான்.

முனை உடைந்த மேஜையில் இருந்த வர்ணங்களில், தூரிகைகளில் லலிதா சிரித்தாள். தூரிகையின் இளம் ஆட்டு முடிகளைத் தொட்டு வருடிய போது, லலிதாவையே ஸ்பரிசித்த உணர்வு.

பார்வை அங்கேயே நின்றிருக்கலாம். ஏனோ தடுக்கிக் கீழே விழுந்தது. எட்டாய் மடித்த அன்றைய நிஜரியின் பழுப்பு நியூஸ்ப்ரிண்ட்டில் ரகுவீரின் முகம் அச்சாகியிருந்தது. செய்தித்தாளின் மசியில் அந்த முகம் மசமசத்துப் போயிருந்தாலும் ரகுவீரிடம் ஒரு வெற்றிச் சிரிப்பு இருப்பதாக யுவராஜுக்குத் தோன்றியது. போட்டோவிடம் ஆசீர்வாதம் பெற்ற கத்தியைக் கையில் எடுத்தான்.

''லலிதா... ரகுவீர் என்னை ஏமாற்றி விட்டான், தெரியுமா?''

அவள் எந்த பதிலும் சொல்லப் போவதில்லை என்று தெரிந்திருந்தும், அந்த செய்தித்தாளை எடுத்து அவள் முகத்துக்கு நேரே நீட்டினான். ''படித்துப் பார், லலிதா...'' கத்தி முனையால் வரிகளைச் சுட்டிக்காட்டினான்.

பெங்களூரில் ரகுவீரின் ஓவியக் கண்காட்சியைக் கவர்னர் நிறந்து வைத்தார். மொத்தம் இருபத்தேழு ஓவியங்கள். ஐந்து நாள் கண்காட்சி. சென்ற முறை ரகுவீரின் தங்கக் கொலுசு என்ற ஓவியம் இருபத் திரண்டாயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது நினைவிருக்கலாம். இந்த வருடம், மண்ணில் வந்த மஞ்சள் நிலா என்ற ஓவியத்தை வாங்க ஏற்கெனவே ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலும், ஒரு மூன்றடுக்கு தியேட்டர் காம்ப்ளெக்ஸும் போட்டியிடுவதாகத் தெரிகிறது. கண்காட்சியின் கடைசி நாளன்று ஏலத்தில் அந்த ஓவியத்திற்கு முப்பது, முப்பத்தைந்தாயிரம் வரை கிடைக்கலாம் என்று பேசப்படுகிறது. இந்த ஓவியம் குறித்து ரகுவீர் பேசிய போது...

''நீ என்னடா பேசுவது? உனக்கு அந்த ஓவியத்தைப் பற்றி என்னடா தெரியும்? மண்ணில் வந்த மஞ்சள் நிலா என்று கொச்சையாகத் தலைப்பு வைத்தநிலையே உன் அருகதை புரிந்து போய் விட்டதே... நாயே, முப்பதாயிரமா எதிர்பார்க்கிறாய்? என்னிடம் அன்றைக்கு என்னடா சொன்னாய்?''

ஆத்திரம் பிறந்த சோடா போல் குமுறிக் கொண்டு வந்தது. தூரிகை பிடித்த விரல்கள் செய்தித்தாள் புகைப்படத்தைக் குறுக்கில் கிழித்தன. கத்தியால் குத்திச் சிதைத்தன. நான் ஏன் ரகுவீரைச் சந்தித்தேன்?

சில கூரான பென்சில்களையும், கறுப்பு மசி பேனாக்களையும், வரைந்த நோட் புத்தகங்களையும், கடல் கடலாய் நம்பிக்கையையும் சுமந்து கொண்டு நகரத்தில் பிரவேசித்த போது, யுவராஜ் கனவையும் கட்டி இழுத்து வந்திருந்தான்.

லலிதா அவனுடைய இளம் மனைவி. சிவந்து ஒளிரும் மேனி. நீண்ட பிரகாசமான விழிகள். உதட்டோரம் ஒரு மின்னல். குடைந்தெடுத்த அளவுகள்.

வந்த முப்பது நாட்களுக்குள் நிலவைப் போல கையிருப்பு தேய்ந்து விட்டது. ஏறிய எத்தனையோ படிகளிலிருந்து ஏமாற்றத்துடன் இறங்கியாயிற்று.

''தப்புப் பண்ணிட்டேனா லலிதா? பத்திரிகை ஆபீஸ்லயும் சரி, சினிமாக் கம்பெனியிலயும் சரி, 'இப்ப ஆள் வேண்டாங்கன்'னு தான் மூஞ்சில கதவைச் சாத்தறாங்க. என்னத்தைப் பெரீசா சாதிக்கப் போறேன்னு நெனைச்க உன்னையும் இழுத்திட்டு வந்தேன்?''

''ப்ச்சு. அவங்கதான் அதிர்ஷ்டமில்லாதவங்க...''

''அப்படி சொல்லாத லலிதா. என் ட்ராயிங்கையெல்லாம் புரட்டிப் பார்த்துட்டு, கல்லு மாதிரி முகத்தை வச்சுக்கிட்டுத் திருப்பித் தர்றாங்க... அவங்களைத் திருப்திப்படுத்தற மாதிரி என்னால வரைய முடியலைதானே?''

''உண்மையான கலைஞன் யாருக்காகவும் வரையறதில்லே ராஜா. ஒன், டூ, த்ரீ சொல்றதுக்காக வெயிட் பண்ணி கட கடன்னு வரையறது இல்ல ஓவியம். அது வரையறவனோட ஆத்மா. பாக்கறவன் அந்த ஆத்மால எச்சில் துப்பிட்டுக் கூடப் போலாம். அதுக்காக அசிங்கப்பட்டதா நெனைச்சுக்க கூடாது. மத்தவங்களுக்காக நீங்க உங்க பாஷையை மாத்திக்க முடியாது. உங்கிட்ட இருக்கற நெருப்பை ஒண்ணரையணாவுகும் ரெண்டணாவுக்கும் விக்க வேண்டாம் ராஜா...''

ஒண்ணரையணா, ரெண்டணா என்று எந்த ஜுரத்தில் சொன்னாளோ லலிதா? நான்கு நாள் கழித்து, வரைந்ததெல்லாம் நடைபாதைக்கு வந்து விட்டது. மும்முர

சுபா

மான ஒரு கடைச் சந்தியில் அவனுடைய உழைப்புகள், காற்றில் பறக்காமல் இருக்க ரோடோரம் பொறுக்கிய கற்களுக்குக் கீழ் பரப்பப்பட்டன. ரகுவீரை அங்கேதான் சந்தித்தான் யுவராஜ்.

''எல்லாவற்றையும் பொறுக்கு. ஏறு என் ஸ்கூட்டரில்''

ரகுவீருக்குத் தனி வீடு இருந்தது. கால் வழுக்கும் தரை. மெஷினால் சுத்தம் செய்த சோஃபா. சுவரை அலங்கரிக்கும் வர்ண ஓவியங்கள்.

''உக்காரு. உன் பேரென்ன?''

சொன்னான். பேரை. ஊரை. புறப்பட்டு வந்ததை. இருட்டிக் கொண்டு வரும் எதிர்காலத்தை.

''முட்டான். வெறும் ட்ராயிங்கை வச்சுக்கிட்டு வயித்தை ரொப்பிடலாம்னு வந்தியா? ஏதாவது ஆபீஸ்ல குமாஸ்தா வேலை தேடிக்கோ. பொழுது இருந்தா வரைஞ்சு மாட்டிக்கோ - என்ன மாதிரி.''

''தெரிஞ்ச தொழிலுக்கே எவனும் வேலை தரலை...''

''படம்லாம் பரவாயில்ல... ரசிக்கறதுக்கு என்னை மாதிரி இன்னொரு ஓவியனாலத்தான் முடியும். உன்னப் பாத்தாப் பாவமாயிருக்கு. நானே மொத்தமா வாங்கிக்கறேன். என்ன விலை சொல்றே?''

நெகிழ்ந்து விட்டது. ''நீங்க என்ன கொடுத்தாலும் சரி.''

முப்பத்திரண்டு ஓவியங்களுக்கு இரு நூறு ரூபாய் கைமாறிற்று.

''இன்னும் வரைஞ்சு எடுத்திட்டு வா.. அங்க இங்க அலையாத. நேர என்கிட்ட கொண்டா. நான் மொத்தமா வாங்கிக்கறேன்... ஆனா... ஆனா ஒவ்வொரு படத்துக்கும் கீழ் மொத்தையா உன் கையெழுத்துப் போடற பாரு, அதை விட்டுரு... கையெழுத்து நான் போட்டுக்கறேன்...''

''அதெப்படிங்கய்யா...?''

''இதுவரைக்கும் மூணு தடவை அவார்டு வாங்கியிருக்கேன். தனியா ஒரு ஓவியப் பள்ளியே நடத்தறேன். ஆறு எக்ஸிபிஷன் வச்சிருக்கேன். இனிமேதான் இந்த ரகுவீர் பாப்புலராகணும்னில்ல. உன் ஓவியத்துல ஒரு புது டைமன்ஷன் இருக்கு. ஒரு வெரைட்டி இருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கு. வரைஞ்சு வரைஞ்சு எனக்குன்னு ஒரு ஸ்டைல் ஏற்பட்டுப் போச்சு. அதை உடைக்கறதுக்காகத்தான் உன்கிட்ட கேட்டேன்... மாட்டேன்றியா, எனக்கு எந்த நஷ்டமுமில்ல.''

''அதுக்கில்லீங்க...''

''இத பாரு... காசுக்கு விக்க வந்தப் புறம் அது இல்லீங்க, இது வேண்டாங்கள்ளுல்லாம் பேச முடியாது... பிடிக்கலையா, ரூபாயைத் திருப்பிக் கொடு. உன் கிறுக்கலையெல்லாம் எடுத்துக்கிட்டு நடையைக் கட்டு...''

வயிறு இதயத்தை வென்றது.

லலிதாவுக்கு முதலில் பிடிக்கவில்லை.

''எதுக்காக நீங்க கஷ்டப்பட்டு வரைஞ்சதை அந்த ஆளு பேர் போட்டு விக்கணும்? அந்த ஆளு பார்வையே சரியில்ல ராஜா... வக்கிரமான கண்ணு...''

''அவனுக்கு வியாபாரம் தெரிஞ்சிருக்கு லலிதா. எனக்கு வரைய மட்டும்தான் தெரியும்...''

அப்புறம் லலிதா ஒன்றும் சொல்வதில்லை. சொன்னால் அவனுடைய மிருதுவான இதயத்தில் குண்டூசி இறங்கி விடுமோ என்ற யோசனையாயிருக்கலாம். அவனுடைய கையாலாகாத்தனத்தைக் குத்திக்காட்டுவதாக நினைத்துவிடப் போகிறானே என்று மௌனமாயிருந்திருக்கலாம்.

ஜோடிப் புறா. மலையோர அருவி. வண்டி இழுக்கும் கூலிக்காரன். கிலு கிலுப்பைக்குச் சிரிக்கும் குழந்தை. கடற்கரை பார்வையோடு பூனைக்குட்டி. நீரில் மிதக்கும் நிலா. படகு நிழல் காதலர்கள்.

வரைய வரைய உண்டியல் நிரம்பியது.

''**எ**த்தனை நாளைக்கு இதையே வரைஞ்சிட்டிருப்ப, யுவராஜ்? போர்ட் ரெய்ட் வரையியா?''

''யாரைங்க?''

''நான் போட்டோ கொண்டு தரேன். லைஃப் சைஸுக்கு வரையணும். ஆயில் பெயிண்டிங். கேன்வாஸ், ஹார்ட் போர்டு, ஜெர்மனில தயாரிச்ச ஹாக் பிரஷ், லண்டன்ல தயாரான விஸ்ஸன் அண்ட் நியூட்டன் கலர் ட்யூப்ஸ் எல்லாம் என் செலவுல தரேன்... என்ன சொல்றே?''

''வாடகையை இருநூறுலேர்ந்து போன மாசம் இருபத்தஞ்சு ரூபா ஏத்திட்டாங்க... அரிசி பருப்பு வெலையெல்லாம் கட்டுப்படியாகல...''

''காசு அதிகமா வேணுமா?''

ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் ஒற்றை

❑ மாதக் கடைசி பார்த்து நம் வீட்டிலுள்ள "டிரான்சிஸ்டர் செல்" பவர் குறைந்து ஒலி மிகவும் சன்னமாக இருக்கிறது. என்ன செய்வது? செல்களை நான்கு மணி நேரம் வெய்யிலில் காயவைத்து மீண்டும் உபயோகித்துப் பாருங்கள். ஒரு நாள் தாக்குப்பிடிக்கும்.

- ஜி. நிர்மலா

நரசுஸ் அளிக்கும் புத்தாண்டு, பொங்கல் வெகுமதிகள்!

கேட்டீங்களா
சேதியை?
நரசுஸ் காபி
வெகுமதி
கொடுக்கறாங்களாமே!

பேஷ், பேஷ்!
ரொம்ப
நல்ல
செய்தி!

வெகுமதிகள்:

- 35 கிலோவிற்கு எவர்சில்வர் பிளேட்.
- 10 கிலோவிற்கு எவர்சில்வர் டபரா செட்.
- 6 கிலோவிற்கு எவர்சில்வர் டம்ளர்.
- 2 கிலோவிற்கு துணிப்பை.
- ½ கிலோவிற்கு எவர்சில்வர் ஸ்பூன்.

மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள். 30.12.91 முதல் 1.2.92 -ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

அப்படியா! இதோ போறேன்!
நரசுஸ் காபி வாங்க!

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ் காபி

நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.

ADWAVE/NCC/4144

யறை வீடும், சில அலுமினியப் பாத்திரங்களும், ஒரு பழைய மரக்கட்டிலும், வெய்ந்த பாய்களும், நான்கு மாற்றுடைகளும் கௌரவமான வாழ்க்கைக்குப் போதுமானவையாய் இருந்தன. லலிதாவுக்கு அந்த புதுப் பிரச்னை வரும் வரை.

ஒரு வெள்ளிக்கிழமை விடியலில் அடுப்படியில் அறுத்த துணி போல் விழுந்தாள்.

''அவீமிக்காக இருக்காங்க.'' மாத்திரைகள்.

மூன்று நாட்களுக்குள் புதிய திருப்பம். வரைந்து கொண்டிருந்தவன் தோளில் தட்டித் திருப்பினாள்.

''இப்ப மட்டும் என் கண்ணு வழியாக உங்களால பாக்க முடிஞ்சுதுன்னா, ரஷ்யா, அமெரிக்கால்லாம் கூட உங்க ஓவியத்துக்கு ஏக டிமாண்ட் வந்துடும்.''

''உன் கண்ணுலயா? என்ன சொல்ற லலிதா?''

''இப்ப உங்களைப் பாக்கறப்பவே ரெண்டா தெரியறீங்க. ஒருத்தர் இதோ பக்கத்துல. இன்னொருத்தர் ஒரடி பின்னால தள்ளி. எல்லாருக்கும் த்ரீ டைமன்ஷன்ல தான் தெரியும். எனக்கு ஆறு டைமன்ஷன்ல பார்வை தெரியுது, ராஜா...''

''என்ன லலிதா, சிரிச்சுக்கிட்டே சொல்ற? நாளைக்கு கண் டாக்டர்கிட்ட போலாம்...''

கண் டாக்டர் நியூரோ ஸ்பெஷலிஸ்டைப் போய் உடனே பார்க்கும்படி கைகாட்டினார். கன்ஸல்டேஷனுக்கு நூறு ரூபாய் என்றதும் முதல் தடவை காட்டாமலேயே வந்து விட்டார்கள். ரகுவீரிடம் கெஞ்சி அட்வான்ஸ் வாங்கி நியூரோ ஸ்பெஷலிஸ்ட் தரிசனம் கிடைத்த போது,

''காம்ப்ளிகேட்ட் கேஸா இருக்கு. ஒரு சி. டி. ஸ்கேன் எடுக்கணும்...''

''அப்படின்னா?''

''மூளையை ஸ்கேன் பண்ணணும். ப்ளெயின் ஸ்கேன் போதாது. ஒரு காண்ட்ராஸ்ட் ஸ்கேன் எடுத்திட்டு வாங்க.. ரொம்ப டிலே பண்ணாதீங்க..''

''எவ்வளவு ஆகுமுங்க?''

''என்ன ஆயிரத்தைநூறு, ஆயிரத்து அறுநூறு ரூபா ஆகும்... என்ன பண்றது? ஏழைங்களுக்குத்தான் ஏரோப்ளேன்ல வியாதி வருது...''

வீட்டிற்கு வந்ததும் லலிதா உதட்டைச் சுழித்தாள். ''இழுத்துக்குக் காசு ஆசை.. ஆயிரத்தைக் கொண்டா, ரெண்டாயிரத்தைக் கொண்டான்னு... அதும் மூஞ்சைப் பாத்தா டாக்டர் மாதிரியா இருக்கு?''

''லலிதா இது வெளையாடற சமாசாரமில்ல...''

''யாரு இப்ப வெளையாடினாங்க? எங்கம்மாவுக்குக் கூட அப்பப்ப இப்படி இருக்கும்... சுக்கு மிளகைத் தட்டிப் போட்டு கஷாயம் வச்சுக் குடிச்சா ரெண்டு நாள்ல சரியாப் போயிடும்...'

இரண்டு நாள் கழித்து அவளைப் பின் புறமிருந்து வந்து கட்டிக் கொண்டாள். ''சரியாப் போயிடுச்சு ராஜா. சத்தியமா சரியாப் போயிடுச்சு...''

அவளை நம்பியது தப்பு. இரண்டு வாரம் தள்ளி ஒரு நாள் கவர் எங்கு இருக்கிறது, வாசல் எங்கிருக்கிறது என்று புரியாமல் போய் அவள் முட்டி நின்ற போது, பொய் வெடித்து விட்டது.

''லலிதா!'' வாழ்நாளில் அவன் அப்படி இரைந்தது இல்லை. ''இந்த துப்புக் கெட்டவனோட வாழறதை விட செத்துப் போயிடலாம்னு முடிவு பண்ணிட்டே இல்லே?''

அவன் இதயத்தைக் குறுக்கில் இழித்து விட்டோமோ என்ற பதைப்பு. ஐயையோ, நிஜமாகவே இவளைத் தனியனாகத் தவிக்க விட்டு விட்டுப் போய் விடுவோமோ என்ற அச்சம். அவன் மடியில் அழுதாள்.

''ஸ்கேன் பண்ணிப் பாத்துரலாமுங்க...''

'ரெண்டாயிரம். யூ மீன் டூ தவுஸண்ட்ஸ்!'

ரகுவீரின் கண்கள் பலூன் பலூனாக விரிந்தன.

''வெளையாடறியா, யுவராஜ்? உன் படத்துக்கு அவ்வளவு காசு எவன் கொடுப்பான்?''

''என் பெண்டாட்டி உசிரு உங்க கைல இருக்குங்க...''

''இதப் பாரு நீ போடற பூனையையும், நாயையும் பத்து ரூபா கொடுத்து வாங்கினா அதிகம்...''

''இல்லீங்க... நீங்கதான் எப்படியாவது காப்பாத்தணும்...''

''அப்ப ஒண்ணு செய்யி... லைஃப்

சைஸ் நியூட் போர்ட்ரைட் வரைஞ்சு கொண்டா.. எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் கிட்ட பேசிப் பாக்கலாம்...''

''நியூடா?''

''பச்சையா சொன்னாத்தான் புரியுமா? நிர்வாணப் படம். உன்னை வரைஞ்சு கொண்டு வந்துராத.. பொம்பிளைப் படம்...''

''ஐயையோ...!''

''தொழிலுய்யா... போ... செய்யி...''

அன்றைக்கு மாலைதான் மின்சாரம் மறுக்கப்பட்டது.

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், குட்டி ஜன்னலுக்கும் ஒரு திரை போடப்பட்டு இந்தக் கட்டிலில்...

மூன்று மாலை நேரங்கள் செலவாயின.

திரையை விலக்கி ஓவியத்தைப் பார்த்ததும் அறையப்பட்டது போல் நின்று விட்டான் ரகுவீர்.

''மூஞ்சி பூரா கூந்தலை வச்சு மறைச்சிட்டியேய்யா... யாருய்யா இது இப்படி ஒரு உடம்போட?''

''ரெண்டாயிரம் தரேன்னீங்க...''

''ரெண்டாயிரமா! அவ்வளவு பணம் எவன்யா கொடுப்பான் இந்தப் படத்துக்கு? முன்னூறு ரூபா வாங்கிக்க...''

''முன்னூறு ரூபாயா!''

''சரி, உனக்காக ஐந்நூறு ரூபா.. அது தான் லிமிட்.. மஞ்சள் வெளிச்சத்துல வரைஞ்சிருக்க பாரு.. அதுதான் ஹைலைட். ஓவியத்துக்குப் பேர் கூட வச்சுட்டேன்.. மண்ணில் வந்த மஞ்சள் நிலா. ஆங்கில ரூப்பரா செலக்ட் பண்ணியிருக்கே...''

''கொறஞ்சது ரெண்டாயிரம் வேணுங்க...''

''உன் கைல வேலை இருக்கு... அப்புறம் ஏன்யா பஞ்சப்பாட்டுப் பாடற? போ.. இன்னும் மூணு நாலு படம் இதே பொண்ணை வேற வேற கோணத்துல வரைஞ்சு எடுத்திட்டு வா... ஒரு படத்துக்கு ஐந்நூறு ரூபா...''

அழுகை பீறிட்டது. ''அழாதீங்க ராஜா... எனக்காகத்தானே இந்த அவமானம்?''

இரண்டாவது ஓவியத்தின் குறை கர்ப்பத்தில், ராத்திரி ஒன்பது மணிக்கு லலிதா கட்டிலில் சுருண்டு விழுந்தாள்.

ஏற்கெனவே வாங்கிய ஐந்நூறு ரூபாயில் ஆஸ்பத்திரி, அவசர டாக்டர், ரூம் வாடகை, எமர்ஜன்ஸி மருந்து எல்லாவற்றிற்கும் போக கடைசியில் அவள் படத்திற்கு ஒரு பூமாலை வாங்கிப் போடத்தான் மிச்சம் இருந்தது.

உறக்கமில்லாமல், ரிசர்வேஷன் செய்யாத ரயில் பெட்டியில் டிக்கெட் இல்லாமல் இரவு முழுக்க உட்கார்ந்து வந்திருந்த போதும், இளங்காலையின் குளிரில் பெங்களூர்க் கூட்டத்தில் கலந்த போது யுவராஜ் சற்றும் களைப்பாக உணரவில்லை.

பாக்கெட்டில் இருந்த கத்தியை மட்டும் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

கண்காட்சிக் கூடத்தின் விற்பனை ஹால் முற்றிலும் குளிர்வசதி செய்யப்பட்டிருந்தது.

ஏலம் மிக மும்முரமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

மூன்றாவது வரிசையில் ரகுவீரின் பார்வையில் படாத மூலையில், யுவராஜ் துடிக்கும் இதயத்தோடு, முடுக்கப்பட்ட, வேகத்தை அடக்கிய ஸ்ப்ரிங் போலக் காத்திருந்தான். வலது கை கத்தியின் கைப்பிடியில் பதிந்திருந்தது.

''அடுத்தது நீங்கள் எல்லோரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மண்ணில் வந்த மஞ்சள் நிலா'' அறிவிப்பாளரின் நாடக பாணி உச்சரிப்பு.

ரகுவீர் எழுந்தான். ஓவியத்தை மூடிய திரையை விலக்கலானான்.

நாற்காலி சப்தத்தோடு பின்னால் கவிழ, யுவராஜ் எழுந்தான். முன் இரு வரிசைகளையும் கலைத்துப் பாய்ந்தான்.

ரகுவீர் அரண்டு தற்காப்பாக முகத்திற்குக் குறுக்கே இரண்டு கைகளையும் தூக்கினான்.

யுவராஜ் அவனை இடதுகையால் ஒதுக்கித் தள்ளினான்.

கத்தியை வலுவாகப் பற்றினான். பாய்ச்சினான்.

கேன்வாஸ் பொத்துக் கொண்டது. சர்ர்ர்ர்ர்.... இழிந்தது. சர்ர்ர்ர்ர். இன்னொரு பகுதி இழிந்தது.

அவனுடைய புஜங்கள் பின்புறமிருந்து பற்றப்பட்டு அவன் இழுக்கப்படுமுன் மண்ணில் வந்த மஞ்சள் நிலா துண்டம் துண்டமாகக் காற்றில் பறந்தது.

12

வெகு நாள் கழித்து இன்று ஒரு கனவு வந்தது. இது கனவு என்கிற பிரக்ஞையும் கூடவே இருந்தது விசித்திரமாக இருந்தது. கனவின் கதாபாத்திரமாய் இருக்கும் தன்னையே பார்வையாளராய் பார்ப்பது போல. கண்ணைக் கட்டிய நிலையில் வளைந்து வளைந்து செல்லும் ஒரு இடத்தின் மையத்தில் நிற்பது போல் இருந்தது. கையைத் துழாவித் துழாவித் திண்டாடிய படி நகருவதைக் கண்டு திகைப்பு ஏற்பட்டது. சுற்றிலும் கும்மிருட்டு. மனித சஞ்சாரமேயில்லாதது போன்ற அந்த மயான மௌனம் பீதியளித்தது.

குப்பென்று மீராவுக்கு உடம்பு வியர்த்தது. கண் விழித்ததும் பளிச்சென்ற சூரிய வெளிச்சம் அறைக்குள் நுழைந்திருந்ததைக் கண்டு தெம்பும் ஏற்பட்டது. ஒ, காட், கனவு! கனவில் ஏற்பட்ட தடுமாற்றமும், கலவரமும் இன்னமும் நிஜமான அனுபவங்களாய்த் தோன்றின. பார்வை இல்லாதவர்களின் நித்திய அனுபவம் போல. ஹரிக்கு இப்படித்தான் இருக்கும். அவன் வீட்டின் வாசலுக்கு அப்பால் இருக்கும் உலகம் இந்தக் கனவில் வந்த நிசை புரியாத அந்தகாரமாகக் கலவரத்தைக் கொடுக்கும்.

அம்மா சினேகிதமாக. ''பரீட்சைக்குப் படிச்சு, சோர்ந்து போயிருக்கே. கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணின மாதிரி இருக்கும்.''

மீரா உற்சாகமில்லாமல் எழுந்திருந்தாள். நேற்று மீனாட்சியின் அழைப்பை ஏற்றுக் கொண்டது முட்டாள்தனம் என்று தோன்றிற்று. அவளுடைய சினேகிதர்கள் யார், எப்படிப்பட்ட பார்ட்டி என்று ஒன்றும் தெரியாது. அந்த சங்கரை இதற்கு முன் எங்கே பார்த்திருக்கிறோம் என்று இப்பவும் ஞாபகம் வரவில்லை. ஏதாவது ஒரு நிருமணக் கூட்டத்தில் சந்தித்திருக்கலாம். அல்லது சந்தித்திருப்பதாக நினைப்பதே அவளது கற்பனையாகவும் இருக்கலாம்.

நேற்றைய இளக்கமான மனநிலையில் மீனாட்சி பார்ட்டிக்கு அழைத்த போது, அவளுடன் நெருக்கமான சினேகிதம் இல்லாமல் போனாலும், மறுக்க முடியாமல் போயிற்று. 'நா வந்து கூட்டிட்டுப் போறேன்' என்று மீனாட்சி சொல்லியிருந்தாள்.

இப்போது குளியலறையில் கண்ணாடியைப் பார்த்தபடி பல் தேய்க்கும் போது தனது பிம்பத்தைப் பார்த்து 'நீ ஒரு முட்டாள்' என்றாள் மீரா பலக்க. இப்பவும் மீனாட்சிக்கு டெலிபோன் செய்து, 'நா வரல்லே மூடில்லே' என்று சொல்லலாம். ஆனால் அதற்கு அவள் வேறு அர்த்தம் கற்பித்துக் கொள்வாள். பத்தாம் பசலி

காதலெனும் வானவில்

நாபியிலிருந்து ஒரு துக்கம் எழுந்து கண்களில் நீர் திரையிட்டது.

''மீரா!''

அம்மாவின் குரலுக்குப் பதில் சொல்லும் மனநிலையில் இல்லாமல் அவள் குப்புறப்படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அம்மாவின் குரல் படியேறி அருகில் கேட்டது.

''எழுந்திருக்கல்லியா? பத்து மணிக்கு ஏதோ பார்ட்டிக்குப் போகணும்னு சொன்னியே?'' மணி எட்டரை ஆச்சு.''

''ஒ. எழுந்திருக்கறேன்'' என்றாள் மீரா அலுப்புடன். பிறகு முகத்தைத் திருப்பி, ''அந்தப் பார்ட்டிக்குப் போகணுமான்னு இருக்கு'' என்றாள்.

''போயிட்டு வாயேன்'' என்றாள். என்று நினைக்கலாம் 'பார்ட்டியிலே என்ன செய்வீங்க' என்று கேட்ட போது, 'பாட்டி மாதிரி இவ கேள்வி கேக்கறதைப் பாரேன்!' என்று மீனாட்சி சிரித்தாள். ''அமெரிக்காவிலேதான் பார்ட்டி உண்டுன்னு நினைச்சியா?''

அமெரிக்காவில் இருந்தவரை அவளுக்கு டேட்டிங் செல்ல வயதாகியிருக்கவில்லை. அவள் சென்றதெல்லாம் பிறந்த நாள் விருந்துகள், கோடைக்கால காம்ப் விருந்துகள். விளையாட்டும் பாட்டும் ஆட்டமும் சாப்பாடுமாகப் பொழுது பறக்கும். சாதாரணமாக அம்மாக்கள் கொண்டு விடுவார்கள். பிறகு அழைத்துச் செல்வார்கள். மீனாட்சி நேற்றும் எங்கம்மா இட்டே சொல்லாதே என்றாள். இவள் ஏன் இதை இத்தனை மறைக்க வேண்டும் என்று

தெரிந்து கொள்வதற்காகவேனும் போய் வர வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆர்வம் தான் தன்னை உந்தியிருக்க வேண்டும் என்று மீரா நினைத்துக் கொண்டாள். சாதாரணமான தருணத்தில் கய பிரக்ஞையுடன், சங்கர் போன்ற முன்பின் தெரியாத ஒருத்தனுடன் நிச்சயம் பார்ட்டிக்குச் செல்லத் தோன்றியிருக்காது. மெட்ராஸில் கார் ஓட்டிச் செல்லும் காலேஜ் மாணவன் பணக்கார இனத்தைச் சேர்ந்தவன். முக்கியமாக அவர்கள் மீனாட்சியின் நண்பர்கள். அதை நான் மறக்கக் கூடாது என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவள் குளித்துத் தயாராகிக் கீழே இறங்கிய போது அப்பா அலுவலகத்திற்குக் கிளம்பிப் போயிருந்தார். மகேஷ் நண்பர்களுடன் நீச்சலுக்குக் கிளம்பியிருந்தான். அம்மாவுடன் காலை ஆகாரத்தைச் சாப்பிடுகையில், ''அந்த முட்டாள் மீனாட்சி இட்டே நா வரேன்னு சொல்லியே இருக்கக் கூடாது'' என்று மறுபடி முணுமுணுத்த போது அம்மா சிரித்தாள்.

''அந்தப் பெண்கிட்டே நீ இன்னும் கொஞ்சம் கருணையோடு நடந்துக்கோ. போகப் பிடிக்கல்லேன்னா அடுத்த தடவை போகாதே. அவ்வளவுதானே?''

சொன்னபடிக்கு மீனாட்சி நேரம் பிசகாமல் வந்து நின்றாள். வாசலிலேயே நின்று 'வா, வா, நேரமாச்சு' என்று மெல்லிய குரலில் சொன்னதோடு, ''உங்கம்மா இட்டே என்ன சொன்னே?'' என்றது வினோதமாக இருந்தது.

''ஏன், பார்ட்டிக்குப் போகப் போறேன்னு சொன்னேன்! ஏன் மறைக்கணும்?'' என்றாள் மீரா.

மீனாட்சி தலையைக் குனிந்து நடந்தபடி ''மறைக்க வேண்டி வருது இங்கே'' என்றாள். ''பார்ட்டிக்குப் போறோம்னா

அம்மாக்கள் விட மாட்டாங்க. உங்கம்மா அமெரிக்காவிலே இருந்ததாலே இதிலெல்லாம் ஒண்ணும் தப்பில்லேன்னு புரிஞ்சுக்கு வாங்க.''

''எதிலே தப்பில்லேன்னு...?''

''பாய்ஸ்ஸோட போறதிலே''

'உங்கம்மா தப்பா நினைக்கிறாங்களா?''

''ஐய்யோ ஆமாம்'' என்று மீனாட்சி சிரித்தாள். ''அதனாலேதான் வேற ஏதாவது சொல்லி டபாய்க்க வேண்டியிருக்கு.''

''நீ பொய் சொல்றேன்னு உங்கம்மாவுக்குத் தெரியாதா?''

''தெரிஞ்சிருக்கலாம். ஆனா தூண்டித் துருவிக் கேட்க மாட்டாங்க. கேட்க தைரியம் கிடையாது. ஏன்னா நா திருப்பிக் கேட்டுடுவேனே, உனக்கு மட்டும் பாய் ஃப்ரெண்ட்ஸ் இல்லையான்னு?''

மீரா சங்கடத்துடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நடந்தாள். எந்த பலவீனமான தருணத்தில் இவளுடன் செல்ல ஒப்புக் கொண்டோம் என்றிருந்தது. ஆட்டோவைப் பிடித்துப் பயணம் செய்யும் போது மிகுந்த விவேகத்துடன் பேசுவது போன்ற பாவனையுடன் மீனாட்சி சொன்னாள்.

''அம்மாக்களுக்கே நிஜத்தைக் கேட்க விருப்பமில்லேன்னு நா நினைக்கறேன். ஒரு சின்ன பொய்யினாலே நமக்கும் ஒண்ணும் நஷ்டமில்லே!''

இவளுடைய சிந்தனையில் ஏதோ அடிப்படைக் கோளாறு இருக்க வேண்டும் என்று மீராவுக்குச் சலிப்பு ஏற்பட்டது.

''எனக்கு நிஜத்தைச் சொல்றதிலே ஒண்ணும் பிரச்னையில்லே மீனாட்சி.''

''நீ அதிர்ஷ்டம் செஞ்சவ மீரா'' என்று மீனாட்சி பெருமூச்சு விட்டது நாடகத்தனமாகத் தோன்றிற்று. இவளும், இவளுடைய அம்மாவும் அப்பாவும் ஒரு நிரந்தர பாசாங்கு விளையாட்டு விளையாடுவது போல இருந்தது.

''அதனாலேதான் பாரு, வீட்டிலே டிரெஸ் செய்துக்காமே கையிலே டிரஸ் எடுத்துக்கிட்டு வந்திருக்கேன்'' என்று மீனாட்சி கைப்பையைக் காண்பித்தாள்.

மீரா பதில் ஏதும் சொல்லாமல் வெட்ட வெளியில் பார்வையைப் பதித்தாள். ஒரு நண்பனின் வீட்டில் நடக்கும் விருந்துக்குச் செல்வதில் எதற்கு இத்தனை ரகசியம் என்று புரியவில்லை.

அது சாதாரண வீடு இல்லை. பெரிய பங்களாவாக இருந்தது. ஐந்து பெண்களும் மணியுடன் சேர்ந்து ஆறு ஏழு பையன்களும் இருந்தார்கள். பெண்கள் பகட்டாக உடை உடுத்தியிருந்ததை மீரா கவனித்தாள். மீனாட்சி அவளை எல்லாருக்கும் அறிமுகம் செய்து விட்டு, ''டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன்'' என்று உள்பக்கம் சென்றாள். பெரியவர்கள் யாரும் கண்ணில்படவில்லை. இவர்கள் எல்லாரும் எப்படி இத்தனை பெரிய குரலில் பேசிச் சிரிக்கிறார்கள் என்று மீராவுக்கு வியப்பு ஏற்பட்டது. அவள் மணியிடம் ''உங்க அப்பா அம்மா வீட்டிலே இல்லையா?'' என்றாள்.

''அவங்க இருந்தா பார்ட்டி எப்படி நடத்த முடியும்?'' என்றான் அவன் பதிலுக்கு. ''ஊட்டிக்குப் போயிருக்காங்க. நம்பளைத் தவிர இங்கே யாரும் இல்லே. கவலைப்படாதே.''

'அவர்கள் இருந்தாலும் நான் எதற்குக் கவலைப்படணும்' என்ற கேள்வியை அவள் கேட்காமல் பேசாமலிருந்தாள். ஹோட்டலிலிருந்து வரவழைத்தவை போல அட்டைப் பெட்டிகளில் சாப்பாடு மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தது. காஸெட் ப்ளேயரில் இரண்டு பெண்களும் பையன்களும் ஏதோ காஸட்டுகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சங்கர் எங்கே என்று கேட்க நினைத்த சமயத்தில் வாசலில் ஒரு ஹோண்டா பைக் வந்து நின்றது. பிடரி மயிர் பறக்கக் கறுப்புக் கண்ணாடியுடன் பைக்கின் மேல் சங்கர் அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் மீராவுக்குச் சடாரென்று நினைவுக்கு வந்தது. கடவுளே, அந்தப் போக்கிரியா இவன் என்று அதிர்ச்சியேற்பட்டது. இவனை எப்படி அடையாளம் கண்டுகொள்ளாமல் போனேன் என்று தன்னையே அவள் சபித்துக் கொண்டாள். இவனும் மீனாட்சியும் சேர்ந்து தனக்கு லிஃப்ட் கொடுத்ததும் விருந்துக்கு அழைத்ததும் முன்னேற்பாடான திட்டமாக இருக்க வேண்டும். எப்படி வகையாக மாட்டிக் கொண்டோம் என்ற ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவள் நின்றாள்.

சங்கர் சிவிமா ஹீரோவைப் போல்

☐ நாம் உண்ணும் பொருட்கள் சீணமாக எத்தனை மணி நேரம் எடுத்துக் கொள்கின்றன என்பதை அமெரிக்க டாக்டர் வில்லியம் பெரெண்ட் கண்டுபிடித்துள்ளார் :

சாதம் - 1 மணி நேரம்
பால் - 2 மணி நேரம்
பருப்பு - 2½ மணி நேரம்
நெய் அல்லது வேகவைத்த முட்டை - 3½ மணி நேரம்
கோழி இறைச்சி - 4 மணி நேரம்
பன்றி மற்றும் மாட்டு இறைச்சி - 5 மணி நேரம்

- சைதை ஆர். முரளி

''வர வர நம்ம வீட்டு வேலைக்காரிக்குத் திமிர் அதிகமாகிக்கிட்டே வருதுங்க!''

''ஏன், அப்படிச் சொல்றே?''

''நம்ம ஃபிரிஜ் வாங்கி இருக்கிறதை எல்லா வீட்டுக்கும் சொன்னியாடின்னு கேட்டதுக்கு, 'ஒரு வீட்டுக்கு ஐந்து ரூபாய் வீதம் தந்தாதான் சொல்வேன்'னு சொல்றா!''

- குடந்தை எல். ராம்பிரபு

உள்ளே நுழைந்தான். லாகவமாகக் கறுப்புக் கண்ணாடியை அவிழ்த்தபடி அவளைப் பார்த்து ''ஹல்லோ!'' என்று சிரித்தான். ''நீ வந்தது எனக்குச் சந்தோஷம். வர மாட்டியோன்னு நினைச்சேன்.''

''நீதான் என்னை பஸ் ஸ்டாண்டிலே தொந்திரவு பண்ணின பைக்குக்காரன்னு ஞாபகம் இருந்திருந்தா நா வந்திருக்க மாட்டேன்'' என்றாள் அவள் சிரித்துக் கொண்டு.

அவன் பலமாகச் சிரித்தான்.

''இப்பத்தான் ஞாபகம் வந்ததா?'' என்று மறுபடி சிரித்தான். ''சேச்சே, இத்தனைச் சின்னத் தப்புக்கெல்லாம் அப்படி தண்டிக்கலாமா? அப்புறம் பையனும் பெண்ணும் சந்திக்கிறது எப்படி?''

மணியும் வேறு சினேகிதர்களும் அவளை உள்ளே அழைத்ததில் அவள் மீராவின் தோளில் கையை வைத்து ''அப்புறம் பேசலாம்'' என்று சொல்லி விட்டு விரைந்தான்.

அவனது பார்வையும் பேச்சும் மீராவுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதில் செயற்கைத்தனம் தெரிந்தது. இங்கு யாருமே இயல்பாக இல்லை என்று தோன்றிற்று. எல்லாரும் மிகையாகப் பேசினார்கள், மிகையாகச் சிரித்தார்கள். உடையை மாற்றிக் கொண்டு வந்த மீனாட்சி பிறவியே மாறிப் போனது போல நடந்து கொண்டது நம்ப முடியாததாக இருந்தது. பேச்சும் பார்வையும் சிரிப்பும் மாறிப் போயின. சினிமாவில் வரும் கவர்ச்சி நடிகை போல. மணியும் தானும் காதலர்கள் என்று பகிரங்கப்படுத்தும் ஆர்வத்துடன் அவள் நடந்து கொண்டது மீராவுக்கு அருவருப்பாக இருந்தது.

சங்கரும் அவனுடைய நண்பர்களும், ''வாங்க பார்ட்டியை ஆரம்பிக்கலாம்'' என்று கண்ணாடி டம்ளரும் பாட்டில்களும் கொண்ட டிரேயை ஏந்தியபடி வந்தார்கள். விஸ்கியும் ரம்மும் இருந்ததை மீரா கவனித்தாள். கூடவே மிக பலக்க டேப்பில் துரித கதியில் வாத்திய இசை கேட்டது. விஸ்கியும் சோடாவும் லாகவமாகக் கலந்து ஆண்கள் எடுத்துக் கொண்டு பெண்களுக்கும் வழங்கிய போது இரண்டு மூன்று பெண்கள் மறுக்காமல் வாங்கிக் கொண்டார்கள். மீரா மறுத்த போது சங்கர் ஆச்சரியத்துடன் புருவத்தை உயர்த்தினாள். ''நிஜம்மா குடிக்க மாட்டியா, இல்லே இந்தியாவிலே வேஷம் போடறியா?'' என்றான்.

''எனக்கு வேஷம் போட வேண்டிய அவசியமில்லே'' என்று அவள் சொன்னது அவனுக்குப் புரிந்திருக்காது என்று அவள் நினைத்துக் கொண்டாள். சமோசா, வடை கொண்ட அட்டைப் பெட்டிகள் திறக்கப் பட்டன. மென்றபடியே பாட்டிற்கு ஏற்ப உடம்பை அசைத்து எல்லாரும் கையிலிருந்த பானத்தையும் உறிஞ்சினார்கள். ஏதோ கனவுலகத்தில் இருப்பவளைப் போல மீனாட்சி மணியுடன் ஒட்டி நின்றிருந்தாள். மணிதான் குடிக்கும் கிளாஸையே அவளிடமும் நீட்டிக் கொண்டிருந்தான்.

தன்னைச் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்க்கும் போது இதிலெல்லாம் ஒட்டாமல் இருக்கும் வெளியாள் தான் ஒருத்தி தான் என்று மீராவுக்குத் தோன்றிற்று. உண்மையில் வெளியில் இருக்கும் உலகத்திற்கும் இதற்கும் ஏதும் சம்பந்தமிருந்ததாகத் தெரியவில்லை. மீனாட்சி கூட இங்கு வேறு பிறவி. வெளியில் அசட்டுப் பெண்ணாகத் தோன்றுபவள் இங்கு அதி சாமர்த்தியசாலி போல நடந்து கொண்டாள். இரண்டு மூன்று கிளாஸ் பானமும் வடையும் சமோசாவும் காலியானதும் சங்கர் அவளருகில் வந்து இடையைப் பற்றி ''எல்லாரும் உள்ளே போய் டான்ஸ் ஆடலாம்'' என்றான். எல்லாரும் பெரிய ஆரவாரத்துடன் அடுத்தாற்போல் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

அறைக் கதவு மூடப்பட்டது. விளக்கு அணைக்கப்பட்டு, ஜன்னல்கள் மூடித் திரையிட்டிருந்த அந்த அறையில் சட்டென்று இருள் சூழ்ந்தது. கையைத் துழாவி மீரா இருட்டில் தடுமாறிய போது கப்பென்று அடிவயிற்றில் பயம் கவ்விற்று.

(தொடரும்)

மறக்கமுடியாத முதல் பரிசு!

எங்கள் இருபதாவது திருமண நாள் என்றாலும் அந்த ஆண்டு எனக்குச் சுவாரஸ்யமில்லாமல் இருந்தது. காரணம், கணவர் கடந்த ஒரு வருட காலமாகு வெளிநாட்டில் இருந்து வந்ததுதான். எனக்குப் பிடித்த பரிசு வாங்கிக் கொள்ளுமாறு கணவர் அனுப்பிய காசோலையைக் காசாக்கி, பர்ஸில் வைத்துக் கொண்டு காலையில் கோயிலுக்குப் போனேன். காமாட்சி தரிசனம் செய்யும் போது எப்போதும் கணவர் நேரில் அளிக்கும் பரிசை உணர்ந்த மகிழ்ச்சியை நினைத்துக் கொண்டேன். அந்த மகிழ்ச்சியை இன்று வேறு யாருக்காவது அளித்தால் என்ன என்று தோன்றியது. என் வீட்டில் ஒரு வருஷமாக வேலை செய்யும் கலாவின் நினைவு வந்தது. ஒரு ஜோடி அழகிய வெள்ளிக் கொலுசு வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். பரிசைப் பெற்ற அவள் முகத்தில் தெரிந்த வியப்பு! கண்களில் பொங்கிய மகிழ்ச்சி! பேச்சு வராத நன்றியுணர்வு! - என் உள்ளம் நிறைந்தது. தகுதியறிந்து பரிசு வழங்கும் இன்பத்தை நான் முதன் முதலாக வழங்கிய நகைப் பரிசிலேயே உணர்ந்தேன். அந்தத் திருமண நாள் சோர்வில் ஆரம்பித்தாலும் மிக மகிழ்ச்சியான நாளாக மாறியது.

கோவை, மாதவி பிரபாகரன்.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகைப் பரிசு பெறுபவர் :

திருமதி மாதவி பிரபாகரன்,
11/20 D, விவேகானந்தர் தெரு,
பி. என். புதூர்,
கோவை - 641 041.

உயிரின் உயிர்

உயிர்த் தோழி ராஜி. பத்தாவது படிக்கும் போது அவள் பிறந்த நாள் பரிசாக ஒயிட் மெடலில் பச்சைக் கல் பதித்த ஒரு ஜோர் இயர் பரிசளித்தேன். அந்த நாளில் விலை ஏழு ரூபாய். திருமணத்துக்குப் பிறகு நாங்கள் பிரிந்து வேறு வேறு மாநிலங்கள் சென்று விட்டோம். இரண்டு வருஷங்களுக்கு முன் சென்னை வந்திருந்த போது, 'ராஜி ஒரு விபத்தில் இறந்து போனாள்' என்ற செய்தி அறிந்து நிடுக்கிட்டேன். அவள் காலமாகி நீண்ட காலமாகி விட்டாலும் அவள் வீட்டுக்குப் போக வேண்டும் என்று மனம் உந்தியது. போன போது அவள் மகளுக்கு அன்று பிறந்த தினம் என்று அறிந்தேன். என் துயரை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டேன். 'வெறும் கையோடு வந்து விட்டோமே, பணமாவது தரலாம்' என்று எண்ணி, குழந்தையை அழைத்து உச்சி முகரப் போனால், நான் ராஜிக்கு அளித்த பரிசு அவள் தலையை அலங்கரித்துக் கொண்டிருந்தது! ''பிறந்த நாளும் அதுவுமா எல்லாத்தையும் விட்டுட்டு, பிடிவாதம் பிடித்து இதுதான் வேணும் என்று ராஜி பீரோவிலிருந்து எடுத்துப் போட்டிண்டிருக்கா, பாரும்மா'' என்று ராஜியின் மாமியார் கூற, நான் உடைந்து போனேன்.

நாஸிக், பி. உமா.

மனம் உடைந்தது

என் சம்பாத்தியத்தில் நான் வாங்கிய

முதல் நகை ஒரு மோதிரம். மிகவும் கஷ்டப் பட்டு மாதா மாதம் பணம் கட்டி வாங் கினேன். பெருமையோடு அதை அணிந்து கொண்டு சொந்த ஊருக்கு வந்தேன். அண்ணா அதை வாங்கிக் கையில் போட்டுப் பார்த்து, ''அளவு சரியாய் இருக்கே!'' என்றார். நானும் பெருந்தன்மை யோடு, ''உங்களுக்கு இல்லாததா அண்ணா, போட்டுக்குங்க'' என்று கூறி விட்டேன். அப்போது அண்ணி, ''அது ஒன்றும் கவரிங் மோதிரம் இல்லையே?'' என்று கேட்க, என் மனம் உடைத்தது. அந்த ரணம் இன்னும் ஆறவில்லை.

பழனூர், ஆ. கல்யாணசுந்தரன்.

தியாக தீபம்

முப்பத்து மூன்று வயதில் மூன்று பெண்களுக்குத் தந்தையாகி, தன் மனைவி யையும் பறிகொடுத்தவர் என் அப்பா. அம்மா நோய்வாய்ப்பட்ட போது ஏற்பட்ட கடன் சுமை வேறு. எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் என் சிற்றன்னை நுழைந் தார். பாசத்துக்கு ஏங்கிய எங்களிடம் அன் பைப் பொழிந்தார். கடன் தொல்லை களுக்கு இடையில் நான் மேற்படிப்புக்குச் செல்ல இயலாத நிலையில் தன்னிடமிருந்த ஒரே தங்க நகையைக் கழற்றிக் கொடுத்து, என் எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்தார். வேலை கிடைத்து முதல் மாதச் சம்பளம் பெற்ற உடனே தவணை முறையில் பணம் கட்டக்கூடிய கடையில் அந்தத் தியாக தீபத் துக்கு ஒன்றரை பவுனில் மெலிதாக ஒரு சங் கிலி வாங்கி வந்து கொடுத்தேன். அன்னை யின் முகமலர்ச்சியைப் பார்த்த போது எனக்கு ஏற்பட்ட உவகை உணர்ச்சியை வர் ணிக்க வார்த்தை இல்லை.

மதுரை - 3, மீனாட்சி பட்டாபிராமன்.

வளையலாய் மாறிய மோதிரம்

என் அலுவலக நண்பர்கள் கழுத்தில் செயின், கையில் மோதிரம் என்றிருக்கும் போது 'நாம் ஏதும் அணியலையே' என்ற ஆதங்கம் இருந்தது. நாறு ரூபாய் சிட்டில் சேர்ந்து, குலுக்கலில் அதிர்ஷ்டமின்மை யால் 24 மாதங்கள் சிட்டு முடிந்த பிறகு கடைக்குப் போய் நகை வாங்கப் புறப்பட் டேன். அப்போது தங்கையிடமிருந்து கடிதம், தன் மகள் பெரியவளாகி விட்டாள் என்று! 'மோதிரம் வேண்டாம்' என்று வளையலுக்கு ஆர்டர் கொடுத்து, தங்கை மகளுக்குப் பரிசளித்தேன். இப்போதும் என் மோதிர விரலைப் பார்க்கும் போதெல் லாம் தங்கை மகளின் மலர்ந்த முகம் நினைவுக்கு வருகிறது. பொன் நகை கண்டு பூத்த புன்னகையின் அழகு என் நெஞ்சை நிறைக்கிறது.

பாளையங்கோட்டை,
எஸ். சுந்தரராஜன்.

பத்து விரல்களின் உழைப்பு

மனைவிக்கு மோதிரம் வாங்கித் தர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ரூ. 250/- சம்பளக்காரனுக்குச் சாத்தியமா என்ன? அந்தச் சமயம் எங்கள் கல்லூரி கணிதப் பிரிவில் ''பிராஜெக்ட் ஒர்க்'' நடத் தது. கல்லூரி வேலை நேரம் முடிந்த பிறகு மாணவர்களுக்கு அதை டைப் செய்து கொடுத்தேன். 850 பக்கங்களுக்கு ரூ. 850 கிடைத்தது. பத்து விரல்களின் உழைப்பு மனைவியின் ஒரு விரலை அணி செய்தது. அதை எண்ணும்போதெல்லாம் இருவருக் குமே பெருமித ஆனந்தமும் பரஸ்பரம் அன்பும் பெருக்கெடுக்கிறது.

பூண்டி, ஜி. ராஜன்.

50 கல்கி
பாலு ஜுவல்லர்ஸ்

டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ்.

மனைவியின் அன்பைப் பெற...

1. வீட்டு வேலைகளில் அவ்வப் போது உதவுங்கள்.
2. ஆபீஸ் கோபத்தை மனைவி மீது காட்டாதீர்கள்.
3. மாலை வேளைகளில் அவ்வப் போது வெளியில் அழைத்துச் செல் லுங்கள்.
4. எ ல் ல ா விஷயங்களிலும் மனைவியைக் கலந்தாலோசியுங்கள்.
5. மனைவிக்கு உடல்நலமில்லாத போது முடிந்தவரை அருகிலேயே இருங்கள்.
6. மாலை நேரங்களில் குழந்தை களை வெளியே அழைத்துப்போய் மனைவிக்கு ஓய்வு கொடுங்கள்.
7. அடுத்தவர் முன்பு 'வாடி,' 'போடி' என்பதையோ திட்டுவதையோ நிறுத் துங்கள்.
8. வீட்டுக்குத் தேவையான பொருட் களை முடிந்தமட்டில் முன்கூட்டியே கேட்டறிந்து வாங்கி வைத்து விடுங்கள்.
9. பிறந்த நாளை மறவாமல் ஞாபகம் வைத்துக் கொண்டு வாழ்த்துக்களுடன் எளிய பரிசாவது ஒன்று தாருங்கள்.

- பூவை மதிவாணன், நெய்வேலி

ஹார்ட் அட்டாக் தவிர்க்க...

1. தினசரி ஐந்து நிமிடம் தியானம் செய்தல்.
2. கோபம், எரிச்சல் என்று உணர்ச்சி வசப்படாது இருத்தல்.
3. புகைப்பிடிப்பதை அ ற வே தவிர்த்தல்.
4. யோகாசனம் அல்லது சீரான உடற் பயிற்சி செய்து வருதல்.
5. மது அருந்துதலைத் தவிர்த்தல்.
6. வேகமும் டென்ஷனும் நீக்கி எதிலும் நிதானத்தைக் கடைப்பிடித்தல்.
7. இரத்த அழுத்தம் அதிகரிக்காது பார்த்துக் கொள்ளுதல்.
8. உடலுக்கும், உள்ளத்திற்கும் நல்ல முறையில் ஓய்வு கொடுத்தல்.

- எஸ். கலோசனா, சென்னை

ESTD 1985

PARK TOWN BENEFIT FUND LIMITED

(Central Government Approved 'NIDHI' Company)
Regd. Office : 223, South Mint Street, Madras - 600 003.
Phone : 582676

FIXED DEPOSIT SCHEME

Period	90 Days	6 Months	1 Year	2 Years	3 Years	4 Years	5 Years
Rate of interest per annum	13%	15%	16%	17%	17.5%	18%	20%

1/2% Extra Interest will be paid on 3 years & 4 years Deposits only, if opted for quarterly Interest.

DEPOSIT DOUBLES IN 45 MONTHS.

KUBER DEPOSIT SCHEME

Rs. 7,500/- Invested for 15 years becomes Rs. 1,20,000/-

PORKUVIAL SCHEME

Save Rs. 100/- p.m. and draw Rs. 3,00,000/- after 25 years.

Rs. 100/- per month in R. D. Scheme becomes Rs. 4,720/- in three years.

PENSIONER'S PARADISE SCHEME

Interest at 19% will be paid on deposits of Rs. 13,000/- and above and for one year Deposits also. (includes Widows & Physically Handicapped)

LOANS AGAINST GOLD JEWELLERY UPTO Rs. 300/- PER GRAM.

Honorary Advisor :
P. BALASUBRAMANAIAM,
Senior Trustee,
Sri Kandaswamy Temple.

Chairman :
R. VIVEKANANTAN.

Board of Directors :

P. EKAMBARAM,
B. VISALAKSHI,
P. K. CHANDRASEKARAN,
P. K. SIVAKUMAR,
G. EKAMBARAM CHETTIAR,
K. T. SHANMUGAM,
C. T. SHANMUGAM Ex. J. P.,
P. T. SHANMUGAM, B. E.,
V. A. GNANAPRAGASAM,
GOMATHI SUNDARAM, B. Sc.,
P. E. RAMACHANDRAN.

Transactions with share holders only.

'ரஷ்யாவைப்போல் இந்தியா உடையும்' என்கிறாரே நெடுஞ்செழியன்?

சினிமா பாணி அரசியல்

● பிரசன்னகுமார், குடந்தை.

? ஆளி அணியிடம் அடுத்தடுத்து இந்திய அணி அடிவாங்கிக் கொண்டிருப்பது...?

! மூன்றாவது லிட்னி டெஸ்ட்டில் வீறு கொண்டு எழுந்து விட்டார்களே! டிராவில் முடிந்தாலும் மதிப்பு மிக்க டிரா.

● அ. சண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

? ஆண்டுக்கு ஆண்டு துன்பங்கள் அதிகரித்தபோதிலும் புத்தாண்டு தினத்தைக் கொண்டாடுவதில் உற்சாகம் அதிகரித்து வருகிறதே?

! சென்று போனதை மறக்கவும் இனி நடப்பதாவது நல்லதாய் இருக்க வேண்டும் என்ற விருப்பமும்தான் காரணம்.

● மல்லிகை மன்னன், மதுரை.

? 'கன்னடியர்கள் செம்மையாக உதைத்த பின்தான் தமிழருக்குத் தமிழனாக வாழ வேண்டும் என்ற உணர்வே வந்திருக்கிறது' என்கிறாரே அன்பழகன்?

! அவர் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார். அது வெந்த புண்ணில் வேலாய்ப் பாய்கிறது. தமிழன், கன்னடியன், மராட்டியன் என்ற உணர்வுகளின் அடிப்படையில், அதற்கும் மேலாக, இந்தியன் - மனிதன் என்ற உணர்வுகளை நம் தலைவர்கள் எப்போது பெறப் போகிறார்களோ அப்போதுதான் நாடு உருப்படும்.

● தாயு. செந்தில்குமார், திருச்சி. ❑

? கோர்பசேவின் வீழ்ச்சியை விஸ்டன் சர்ச்சிலின் அரசியல் வீழ்ச்சியுடன் ஒப்பிடுவது பொருந்துமா?

! ஹிந்து பத்திரிகையில்தான் கோர்பச்சேவ் படம் போட்டு அப்படி ஒப்பிட்டு எழுதியிருந்தார்கள். உலக யுத்தத்துக்குப் பிறகு சர்ச்சில் தேர்தலில் தோல்வி அடைய, ''உலக யுத்த ஹீரோவான உங்களை மக்கள் புறக்கணித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்ட போது, ''இந்த ஜன நாயக உரிமைகளுக்காகத்தானே யுத்தமே நடத்தினோம்'' என்றாராம். 'அப்படி கோர்பச்சேவும் இன்று கூறலாம்' என்று எழுதியிருந்தது. ஆனால் ஒரு பெரிய வித்தியாசம்: சர்ச்சிலை அகற்றியது மக்கள்; கோர்பச்சேவை அகற்றியது இதர தலைவர்கள்.

● சி. ஆர். நாகராஜன், பொள்ளாச்சி.

? 'தமிழர் மீது கன்னடியர் தாக்குதல் நீடித்தால் ரசிகர் படையுடன் சென்று தமிழருக்குப் பாதுகாப்பு அளிப்பேன்' என ரஜினிகாந்த் கூறியிருப்பது குறித்து?

! ஓர் அராஜகத்தைத் தடுத்து நிறுத்த இன்னொரு அராஜகம் உதவாது. எதையும் முறைப்படி செய்ய வேண்டும். சினிமா பாணியில் அரசியலை அணுகக் கூடாது.

● வ. தே. பா. சென்னை - 29.

? 'ரஷியாவைப் போல் இந்தியா உடையும்' என்று நெடுஞ்செழியன் எச்சரித்துள்ளாரே?

! 'தவறான கொள்கைகள் செயல்பாடுகளைக் கையாண்டு அப்படி உடைய இடமளித்து விடாதீர்கள்' என்று சொல்லியிருந்தால் அழகாய் இருந்திருக்கும்.

● என். ஆறுமுகம், சேலம்.

? பி. ஜே. பி. இராமர் கோயில் கட்ட வசூல் செய்த பணத்தில் தொழிற்சாலைகள் கட்டி வேலை வாய்ப்புப் பெருக்கலாமே?

! அப்படி செய்தால்தான் வோட்டுக் கிடைக்கும் என்ற நிலை உருவானால் செய்வார்கள்.

● ப. வெங்கட், கோவை.

? நாட்டு ஒற்றுமைக்கு இந்தியாவில் அதிகம் பேரால் பேசப்படும் இந்தி அவசியம் என்பதில் தவறு இல்லையே? திணித்தால் தானே தவறு?

! ஹிந்தி யாரும் கற்கலாம்; தவறில்லை. அது பேசப்படும் மாநிலங்களில் ஆட்சி

"மத்திய அரசு சதி"

"இந்தியா உடையும்"

இவரின் வீழ்ச்சி....

...இவருடன் ஒப்பிடலாமா?

மொழியாக இருக்கலாம். ஆட்சேபணை இல்லை. ஏன், தேசிய மொழியாக வேணு மானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் மத்திய அரசின் ஆட்சி மொழி என்னும் போதுதான் ஆபத்து. அதற்கு விசேஷ அந்தஸ்த்து அளிக்கப்பட்டதா கிறது. மற்ற பிரஜைகள் இரண்டாந்தரக் குடி மக்களாகக் கருதப்பட வாய்ப்பு அளிக் கிறது. ஒற்றுமை குலைய வழிவகுக்கிறது. 'மாநிலங்களில் அத்தந்தப் பிரதேச மொழியே ஆட்சி மொழி; மத்திய மாநில இணைப்புக்கும் மாநிலங்களிடையே தொடர்புக்கும் ஆங்கிலம்' என்ற நிலை தான் அனைவருக்கும் சம நீதி. இதை ஓராயிரம் தடவை சொல்லியாகி விட்டது. தூங்குவது போல் பாசாங்கு செய்பவரை யும் புரியாதது போல் நடிப்பவரையும் என்ன செய்ய?

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சுவிஸ் வங்கியொன்றில் ராஜீவ் பெயரில் பல கோடி இருப்பதாக சுவிஸ் பத்திரிகைச் செய்தி கூறுகிறதே?

! அதை இங்குள்ள பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. ஆனால் இன்று ராஜீவ் பெரிய நியாயியாகி விட்டார். போஃபர்ஸ், ஏர் பஸ், ஹெலிகாப்டர் ஊழல்கள் எல்லாம் இனி மெல்ல மெல்ல மறக்கப்படும். அந்த விசாரணைகளுக்கும் படிப்படியாக சமாதி கட்டப்படும்.

● எஸ். ஏ. நாகேந்திரன், மதுரை.

? பீகாரைப் பிச்சைக்கார மாநிலமாக மாற்ற மத்திய அரசு சதி செய்வதாக லல்லு பிரசாத் யாதவ் குற்றம் சாட்டுகிறாரே?

! இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை இவ்வளவு ஆத்திரத்தோடு இல்லாவிட் டாலும் பிற மாநிலங்களும் கூறித்தான் வரு கின்றன. இதைத் தவிர்க்க ஒரே வழி, மத்திய அரசு, மாநிலங்கள் மீதான தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தொழில் - பொருளாதார சுதந்திரங்களை அதிகமாக வழங்குவதுதான். மாநிலங்களிடையே போட்டா போட்டியை வளர்ப்பதுதான்.

● டி. சுரேஷ்ராஜ், பாண்டிச்சேரி.

? உங்களுக்குப் பிடித்த ராகம் எது?

! காதுக்கு இனிமையான, மனசுக்கு இத மான எதுவும்தான். உதாரணமாக, 'விக வேசுவரன் ''சந்தூர்'' வாசிக்கிறாராமே, அது எப்படி இருக்கும்?' என்று கேட்ப தற்காகப் போனேன். ஏராளத் தந்திகளுடன் கூடிய அந்த காஷ்மீர வாத்தியத்தை அவர் ஜலதரங்கம் போல் தட்டித் தட்டி வாசித் தார். இந்துஸ்தானி ராகம் - புரியலை. ஆனால் அவர் வாசிப்பு பிரமிப்பை மட்டு மின்றி மனசுக்கு இன்பக் கிளுகிளுப்பையும் அளித்தது. அதுதானே முக்கியம்.

● லீலா ராம், தக்கலை.

? டாக்டர் பட்டம் வழங்குவது பற்றிய கேள்விக்கு 3.11.91 இதழில், 'ஜே' இந்த

● அவளை நினைத்து...

● இனிய சந்தூர்

● நன்கொடைகள்

● பிரமோஷன்

கைய அபத்தங்களுக்கு முடிவு கட்ட வேண்டும்' என்றீர்கள். 5.1.92 இதழ் தலை யங்கத்தில் 'டாக்டர் பட்டம் வழங்கியது சரி' என்று கூறப்பட்டிருக்கிறது... உதைக்கிறதே? ஏன்?

! நீங்கள் தலையங்கத்தைச் சரியாகப் படிக் காததால் உதைக்கிறது. இன்னொரு முறை படித்துப் பாருங்கள்.

● ஆர். ஜேஸ்மின் ரமேஷ், கம்பம்.

? இசை விழாவில் யாருடைய கச்சேரியை ரசித்தீர்கள்?

! சந்தானம், மகன் ராமச்சந்திரனுக்குப் பின்பாட்டிலிருந்து பிரமோஷன் கொடுத் துப் பக்கத்தில் அமரச் செய்ய, இருவரும் பாடினார்கள், நுங்கம்பாக்கம் கல்சரல் அகாடமியில். ராமச்சந்திரன் உருவத்தில் மட்டுமின்றி, பாட்டிலும் 90 சதம் அப்பா அளவுக்கு வளர்ந்து விட்டதை ரசித்தேன். அதைவிட அதிகமாக, சந்தானம் நன் கொடைகளை வாரி வழங்க ஆரம்பித் திருப்பதை ரசித்தேன். கோயில்களுக்கான முதல்வரின் நிதி, இருஷ்ணகான சபை கட்டிடத்துக்கு உதவிக் கச்சேரி, சங்கர நேத்ராலயாவுக்கு, இருவையாறு நாத மண்டபத்துக்கு என்று வளர்ந்து கொண்டே போகிறது. வாழ்த்துவோம்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
தாயு. செந்தில்குமார்,
147, வ. உ. சி. தெரு,
பொன்மலைப்பட்டி,
திருச்சி - 620 004.

நீங்கள் கேட்டவை - தராசு



☛ புதிய கட்டடத்தின் மாதிரி...

சுகுண விலாச சபை:
நாடக சரித்திரத்தின் கதை!

நூறு வருடங்களுக்கு முன்னர் பெல்லாரியிலிருந்து, சரச விநோதினி சபா என்ற நாடகக் குழு, சென்னையில், விக்டோரியா பப்ளிக் ஹாலில், வரிசையாகத் தெலுங்கு நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது. அந்த நாடகங்களுக்கு ஏகக் கூட்டம். இத் தனைக்கும் அந்த நாடகங்களை நடத்திய வர்கள், நடித்தவர்கள் எல்லாம் தொழில் முறை நடிகர்கள் அல்ல. வக்கீலாகவும், அரசு ஊழியர்களாகவும் இருந்தவர்களே.

அந்த நாடகங்களைத் தொடர்ந்து பார்த்த கல்லூரி மாணவன் சம்பந்தனுக்கு, 'தமிழ்நாட்டில் நாமும் ஏன் ஒரு அமெச்சூர் நாடக சபா ஆரம்பிக்கக் கூடாது' என்ற எண்ணம் தோன்றியது. அந்தக் காலத்தில், நாடகம், கூத்து என்றால் பார்க்க வருவார்கள். ஆனால் அவற்றில் பங்கேற்பவருக்குச் சமூகத்தில் கௌரவம் இருக்காது.

இந்தச் சூழ்நிலையில்தான் துணிந்து சம்பந்தன், ஆறு நண்பர்களுடன், 'சுகுண விலாச சபாவை ஆரம்பித்தான். இன்று அந்த சபாவின் வயது நூறு. பின்னாட்களில் நாடக உலகின் தந்தை என்று போற்றப் பட்ட பம்மல் சம்பந்த முதலியார் தான் அந்த இளைஞன் சம்பந்தன்.

அந்தக் கால நாடகங்களில் வசனம் அதிகம் இருக்காது. ஒரே பாட்டாக இருக்கும். இந்த நிலையை மாற்றி தனது நாடகங்களில் வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, சமூக நாடகங்களைப் போட

☛ பம்மல் சம்பந்த முதலியார்

ஆரம்பித்தார் சம்பந்த முதலியார். மக்களிடையே பிரமாதமான வரவேற்பு. தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், ஈராக் என்று பல நாடுகளுக்கும் சென்று நாடகங்கள் போட்டார்கள் சுகுண விலாச சபையினர். சம்பா இத்த பணத்தில், மவுண்ட்ரோட்டில் 36 கிரவுண்ட் நிலத்தை (பிளாசா தியேட்டர் பகுதி) சபாவுக்காக வாங்கிப் போட்டார்கள்.

சம்பந்த முதலியார் ஹீரோ என்றால், 'ஸ்திரீ பார்ட்' ரங்க வடிவேலுதான் ஹீரோயின். பெண் வேடம் போட்டு விட்டால் கொள்ளை அழகு! ஒருமுறை ஆங்கிலேய கவர்னர் ஒருவர் முதலியார் நாடகத்தைப் பார்க்க வந்தவர், ''கதாநாயகி''யின் மேல் மோகம் கொள்ள, நிலைமை விபரீதம் ஆகி விட்டது! 'கதர்நாயகி' யார் என்ற குட்டை உடைத்தவுடன் கவர்னர் ஏற்கெனவே வழிந்த அசட்டுக் களையுடன் மேலும் கொஞ்சம் சேரத் திரும்பிப் போனார்.

முதலியாரின் நாடகங்களில் நடிக்க, சமூகத்தில் உயர் அந்தஸ்தில் இருந்த பலர் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தனர். பிரபல வழக்கறிஞர். வி. வி. சீனிவாச அய்யங்கார், வி. சி. கோபாலரத்னம், சர் சி. பி. ராமசாமி அய்யர், காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி முதலியோர் அவரோடு நாடக மேடையில் நடித்தவர்கள்.

காலப்போக்கில் நாடகம் போடுவது என்பது சபா செயல்பாடுகளில் இருந்து விலகி, மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்காக நடத்தப்படும் மற்ற இளப்களைப் போன்று பில்லியர்ட்ஸ், சீட்டு என்று உருமாறி விட்டது. இந் நிலையை மாற்றி மீண்டும் நாடகப் பணி ஆற்ற முன் வந்திருக்கிறது சுகுண விலாச சபை. இதற்குப் பின்னணியில் இருந்து இன்று சபாவை வழி நடத்திச் செல்பவர் எம். ஏ. எம். ராமசாமி.

நூற்றாண்டு விழாவையொட்டி சபாவுக்காகப் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டிட்டமிட்டிருக்கிறார்கள். அதில் நிரந்தர நாடகத் தியேட்டர் ஒன்று அமைக்கப் போகிறார்களாம். இது தவிர, சிறந்த நாடகங்களுக்கு ஆண்டுதோறும் சுழல் கோப்பை வழங்குவதாகவும் இருக்கிறார்கள்.

- கௌசல்யா

FLYING HORSE

அருமையான, சுவையான பிரியாணி மற்றும் பிரிஞ்சி தயாரிக்க மிகச்சிறந்தது ∴ப்ளையிங் ஹார்ஸ் பாஸ்மதி அரிசிதான்.

FLYING HORSE Rice

BASMATI

அனைத்து டிபார்ட்மெண்ட் மற்றும் மளிகைக் கடைகளில் 35-5-28 கிலோ பாக்கெட்டில் கிடைக்கும்

BECOME SPEEDWRITING
SHORTHAND
PERSONAL SECRETARY

SPEEDWRITING SHORTHAND THROUGH CORRESPONDENCE/REGULAR

FORGET old fashioned artificial symbols used in Shorthand. NOW scientifically developed SPEEDWRITING using only ENGLISH ALPHABETS.

See for yourself. You will be actually writing shorthand after only 15 minutes study.

See Examples :

1. Pay the bill. 2. Let me have a Cheque for the bill.
3. May I see the book? 4. The new book is big.
5. I can judge the value of the book if you fetch it.
6. The book is new and I can get it for you.



Ladies! Learn Speedwriting Shorthand in a New way!

Rush for details. Send Re. 1/Stamp Limited Seats only.

Co.ordinator **INDIANA SPEEDWRITING**

Near Maruthi Theatre Coimbatore - 641 002 T.N.

மயங்கிய மாலை...

அரைக் கிலோ கோதுமை மாவு வாங்கிக் கொண்டு நான்கு ரூபாய் கொடுக்க, ஒரு இரண்டு ரூபாய்த் தாள் நடுவில் ஒட்டை என்று திருப்பித் தந்தார், கடைக்காரர். அப்போதுதான் அதைக் கவனித்தான், தீர்த்தசாமி.

'இதை எப்படியாவது செல்லுபடியாக்கி விட வேண்டும். இல்லாவிட்டால் வீட்டுக்குப் போவதற்குள் இரண்டாய்க் கிழிந்து விடும். மனைவி சப்தம் போடுவாள்' என எண்ணியவனாய், அந்த நோட்டைப் பத்திரமாய் மடித்து பாண்ட் பையில் 'மேலாக' வைத்துக் கொண்டான்.

பட்டர் ஒர்த் சாலை முனையில் ஒரு பெண் பூ விற்றுக் கொண்டிருந்தாள். அந்தி மயங்கி விட்டது. வெளிச்சம் அவ்வளவாக இல்லை.

'ஏமாற்றுவதற்கு இவள் தான் சரியான ஆள்' என்று முடிவுக்கு வந்தான், அவன்.

''இதென்ன பூ?''

''ஜாதி மல்லிகை, சாமி. நூறு ஒரு ரூபாய்.''

''இருநூறு கொடு.''

அவள், பூச்சரத்தை எண்ணினாள்.

''கேக்கிறம்.... பஸ்ஸைப் பிடிக்க வேண்டும்.''

வேண்டுமென்றே தான் அவசரப்படுபவன் போல் பரபரத்தான், தீர்த்தசாமி. அப்போதுதானே பூவை வாங்கிக் கொண்டு வேகமாய் நகர முடியும்.

''இந்தாங்க, சாமி.''

சரட்டென்று இரண்டு ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டு எட்டி நடை போட்டான், அவன்.

ரூபாய் நோட்டைப் பார்த்து விட்டுத் திரும்பக் கூப்பிட்டு விடுவாளோ என்று பயமும், சந்தேகமுமான நடை.

நல்லவேளை. அவள் கூப்பிடவில்லை.

பஸ் நிலையம் வந்தவனுக்கு ஒரு திடீர்ச் சந்தேகம்.

டிக்கெட்டுக்காக வைத்திருந்த வேறொரு இரண்டு ரூபாயைப் பாண்ட் பையிலிருந்து எடுத்தான்.

கூழ் முட்டையாய் வழிந்தது, அவன் முகம்.

அதுதான் கிழிந்து போன செல்லாத நோட்டு! அவசரத்தில் நல்ல நோட்டையே பூக்காரியிடம் கொடுத்து விட்டிருக்கிறான்.

'சரி... சரி... இப்போதும் ஒன்றும் மோசம் போய் விடவில்லை. இரண்டாய் மடித்துக் கொடுத்தால் பஸ் கண்டக்டர், கூட்டத்தில் பார்க்காமல் பையில் போட்டுக் கொள்வார்' என்று சமாதானம் சொல்லிக் கொண்டு, பஸ் ஏறினான், அவன்.

இருக்கையில் வசதியாய் உட்கார்ந்து, சாமான்கள் அடங்கிய பைகளை ஒரமாய் அணைத்துப் பிடித்த போது, மேலும் ஓர் உறுத்தல்.

பூப் பொட்டலத்தை இலேசாகப் பிரித்து, முகர்ந்தான்.

ஜாதி மல்லிகை 'கம... கம'வென மணக்க வேண்டும் அல்லவா?

ஆனால், அந்தப் பூ வாசனையே இல்லை.

வெறும் வெள்ளைப் பூ. பத்து காசுக்குக் கூட பொறாது.

''டிக்கட்... டிக்கட்...'' என்று அருகில் வந்தார், கண்டக்டர்.

கையில் அவருக்காக வைத்திருந்த இழிந்த நோட்டை பாண்ட் பையில் திணித்து விட்டு, புதிய ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்தான், தீர்த்தசாமி.

தமிழ்நிலவன்

திரும்பிப் பார்க்கிறேன் - 16

கண்ணதாசன் கேட்ட கேள்வி

ஒரு நிமிஷ யோசனை

நெஞ்சில் ஓர் ஆலயம் படத்துக்கு நர்ஸிங் ஹோம் ஸெட் அமைக்கும் பணியில் நானும் ஆர்ட் டைரக்டர் கங்காவும் மணிக்கணக்காக யோசித்தோம். என் எண்ணங்களை அவர் ''ஸ்கெட்ச்'' வரைந்து காட்டுவார்.

பொதுவாக அந்தக் காலத்தில் மேற்வீட்டை ஒரு ஸெட்டாகவும் மாடிப் போர்ஷனை இன்னொரு ஸெட்டாகவும்தான் நிர்மாணித்துப் படப்பிடிப்பு நடத்துவார்கள். இதிலும் புதுமை செய்தோம். மாடியும் கீழுமாக ஒரே ஸெட் அமைத்தோம். வாஹினியில் திரைப்படம் சம்பந்தப்பட்டவர்கள் அந்த ஸெட்டையே ஒரு காட்சிப் பொருளாகக் கருதி வந்து பார்த்துப் போனார்கள். கன்சல்டிங் அறை, டாக்டரின் பிரைவேட் அறை, ஜெனரல் வார்டு, ஸ்பெஷல் வார்டு, ஆபரேஷன் தியேட்டர் எல்லாம் அந்த ஸெட்டில் அடக்கம்!

ஸெட் போட்டு முடிந்த நிலையில்தான் இடுக்கிட்டு விழித்துக் கொண்டோம். ஸெட்டின் நுழைவாயில் அருகே படப்பிடிப்பு தளத்தின் கவர்! அதனால் அங்கே

பெருந்தன்மை

நர்ஸிங்ஹோம் வாசலில் கார் வந்து நிற்பது, புறப்படுவது போன்ற காட்சிகளை எடுக்க இடம் போதாது! என்ன செய்வது?

தயங்கித் தயங்கி வாஹினி அதிபர் நாகிரெட்டியிடம் விஷயத்தைச் சொன்னேன். பிரச்னையை உடனே புரிந்து கொண்ட அவர், ''ஸெட்டைக் கலைத்து மறுபடி நிர்மாணிக்க முடியாது; கவரின் ஒரு பகுதியை இடித்துக் கொள்ள அனுமதி வேண்டும்; அவ்வளவுதானே? ஓ.கே. செய்து கொள்ளுங்கள்!'' என்று வெகு இயல்பாகச் சொன்னார். அந்தப் பெருந்தன்மைக்கு முன் நான் வாயடைத்து நின்றேன். எப்படி நன்றி சொல்வது என்று கூடத் தெரியவில்லை!

நெஞ்சில் ஓர் ஆலயம் பார்த்தவர்கள் அந்தக் குழந்தை நட்சத்திரத்தை மறந்திருக்க முடியாது. குட்டி பத்மினி! அவரை எப்படி தேர்ந்தெடுத்தேன்?

''குழந்தை நட்சத்திரம் தேவை'' என்று நாளிதழில் விளம்பரம் செய்தோம். அவ்வளவுதான், தினம் நூறு, இருநூறு என்று குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் படையெடுத்தார்கள். எங்கள் காரியாலயம் இருந்த போக் ரோடில் ஏதோ திருவிழா போல ஒரே கூட்டம். ''ஜே ஜே'' என்று இருந்த இந்தக் கூட்டத்திலும் (குட்டி) பத்மினி மட்டும் எப்படியோ முண்டியடித்துக் கொண்டு தினமும் என்னைப் பார்க்க வந்து விடுவாள்! ''ஹேர் ஹேர்'' என்று என் அறைக்குள் தலையை நீட்டி, ''குட்மார்னிங் அங்கிள்'' என்பாள். அழகு ஒருபுறமிருக்க, அவளுடைய அந்தத் துறு துறுப்புத்தான் என்னைக் கவர்ந்தது. பத்மினியையே தேர்ந்தெடுத்தேன்.

நாகேஷுக்கு ''நெஞ்சில் ஓர் ஆலயம்''தான் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. வெகு காலம் முன்பே நண்பர் பாலாஜி அவரை எனக்கு ''ஒரு நல்ல காமெடி நடிகர்'' என்று அறிமுகப்படுத்தியிருந்தார். அந்தக் கணமே தாம் நடித்துக் கொண்டிருந்த ஒரு நாடகத்திலிருந்து ஒரு காட்சியை நாகேஷ் எனக்கு நடித்துக் காட்டினார். என் மனத்தில் தனியிடம் பெற்றும் விட்டார். உடனடியாக வாய்ப்பு அமையவில்லை என்றாலும் நினைவில் வைத்திருந்து நெஞ்சில் ஓர் ஆலயத்தில்

டைரக்டர் ஸ்ரீதர்



● திருப்புமுனை

● நெஞ்சில் ஓர் ஆலயம்

அவரைப் பயன்படுத்திக் கொண்டேன்.

கவியரசு கண்ணதாசன் எழுதி, மெல்லிசை மன்னர்கள் விசுவநாதன் ராமமூர்த்தி இசை அமைத்த ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' பாடல்கள் எல்லாமே ஸூப்பர் ஹிட்தான். அதிலும் ஒரு பாடல், ரசிகர்கள் கண்களில் மட்டுமின்றி என் கண்களிலும் நீர் வடியச் செய்து விட்டது!

கதைப்படி நோயாளி முத்துராமனுக்கு ஆபரேஷன் நடக்கவிருக்கும் இரவுக்கு முதல் நாள். நிச்சயமாய் உயிர் பிழைக்க மாட்டோம் என்று அவர் நினைக்கிறார். மனைவியை அழைத்து ''மணப்பெண் போல் அலங்கரித்துக் கொண்டு வா; இன்னும் ஒரு தடவை உன்னை அந்தக் கோலத்தில் பார்க்க விரும்புகிறேன்'' என்கிறார். முதலில் மறுக்கும் மனைவி, அது கணவருடைய கடைசி விருப்பமாய் இருக்கலாம் என்பதால் தட்ட முடியாமல் மணப்பெண் கோலத்தில் வருகிறாள்.

ஸிகவேஷனைச் சொல்லி, ''இந்த இடத்தில் ஒரு பாட்டு போட வேண்டும்'' என்று கண்ணதாசனிடம் கேட்டுக் கொண்டேன். ஒரு நிமிஷம்தான் யோசித்தார் கவியரசு. உடனே பாடல் பிறந்துவிட்டது :

''என்ன நினைத்து என்னை
அழைத்தாயோ?
ஏனிந்த கோலத்தைக் கொடுத்தாயோ?
முன்னம் இருந்த நிலை
நினைத்தாயோ?
முகத்தைப் பார்த்துக் கொள்ளத்
துடித்தாயோ?''

நாலே வரியில் அந்தக் காட்சியின் ஜீவனை எத்தனை அற்புதமாக அடக்கி விட்டார் கண்ணதாசன்! என் உடம்பு சிலிர்த்தது. கண்ணதாசனின் கரங்களைப் பற்றினேன். என் கண்களிலிருந்து நீர் கட்டுப்படுத்த முடியாமல் பெருகியது.

என்னை மிகவும் நெகிழச் செய்த இன்னொரு பாடல் - ஏன் ரசிகர்களை நெகிழச் செய்ததும்தான்-: ''சொன்னது நீதானா? சொல்! சொல்! சொல்! என் உயிரே!''

பாடலை எழுதித் தந்த கவியரசர் ஒரு கருத்தும் சொன்னார். அது என்னை திகைக்க வைத்தது. சிந்திக்கவும் செய்தது : ''ஸ்ரீ! (என்னைக் கண்ணதாசன் அப்படித்தான் அழைப்பார்) கதை ரொம்ப நல்லா இருக்கு! ஆனால் என்னதான் சொல்லு, ஒரு கணவன் தான் உயிருடன் இருக்கும்போதே தன் மனைவியிடம், தான் இறந்த பின் அவள் கண்டிப்பாக மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்வானா? இன்னொரு ஆணை அழைத்து, 'நான் இறந்த பிறகு என் மனைவியை நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா?' என்று கேட்பானா? இது துளியும் நமது நாட்டின் பண்பாட்டுக்கு ஒத்துவராத விஷயமாயிற்றே? இதனால் படம் அடிபட்டு விடுமோ என்று எனக்குப் பயமாய் இருக்கிறது'' என்றார்.

இந்தக் காட்சி சர்ச்சைக்குரியது என்பது ஏற்கெனவே எனக்குத் தெரியும். சிலர் 'இளாசிக்' என்று முத்திரை குத்த, வேறு சிலர் 'ஆண்டி செண்டிமெண்ட்' என்று எச்சரித்தனர். ஆனால் வியாபார நோக்கில் மட்டும் படம் எடுக்கிறவன் அல்ல நான். திருஷ்டிகர்த்தா என்ற முறையில் எனக்குப் படம் திருப்தி தர வேண்டும். அப்படி பார்த்தால், 'இந்தக் காட்சியில்லா விட்டால் படமே இல்லை; கதையில் புதுமையே இல்லை; நூறோடு நூற்றி ஒன்று என்றாகி விடும்' என்பதாகத்தான் நான் எண்ணினேன். பிடிவாதமாகவும் இருந்தேன்.

ஆனால் கண்ணதாசனே இப்போது இப்படி கூறவும் நான் திகைத்தேன். ''பிரச்னைக்கு என்ன தீர்வு?'' என்று அவரையே கேட்டேன். ''அமைதியாய் யோசி; அதுதான் வழி'' என்றார்.

சிந்தித்தேன். புதுமையான, புரட்சிகரமான அந்தக் காட்சியும் மாற்றப்படக் கூடாது; அதே சமயம், கண்ணதாசன் சுட்டிக்காட்டிய குறையும் நிவர்த்திக்கப்பட வேண்டும். என்ன வழி? எப்படிச் சமாளித்தேன்? அடுத்த வாரம் சொல்கிறேனே!

நெஞ்சில் ஓர் ஆலயம் ஸ்டில் உதவி :
ஆனந்தன்

போஸ்ட் கார்டில் வெளியாகும் பத்திரிகை!

● ஒரு நாள் கூட 'லீவ்' போடாத பள்ளி ஆசிரியர் ஸாவக் படேல். ஜம்ஷெட்பூர் சாவக் பள்ளியில் பணியாற்றும் இவர் வேலையில் சேர்ந்த நாள் முதலாக (ஜூன் 1955) முப்பத்து நான்கு வருடங்களுக்கு விடுப்பே எடுக்கவில்லை. இவர் பணிக் காலத்தில், தலைமையாசிரியர் பதவியில் பதினோரு பேர் மாறியிருக்கிறார்கள். அவர் களுள் கடைசி இரண்டு பேர் ஸாவக் படேலின் பழைய மாணவர்கள்!

● நாற்பது வருடங்களாகப் பல்வேறு பத்திரிகைகளுக்கு வாசகர் கடிதம் எழுதி வரும் ஆண்டனி பரஹ்லாலின் 3500 கடிதங் கள் பிரசுரிக்கப் பெற்றுள்ளன. பம்பாய் வாசியான ஆண்டனியின் 1500 கடிதங்கள் கேரளத்து நாளிதழான மலபார் ஹெரால் டில் மட்டுமே பிரசுரிக்கப்பட்டுள்ளன!

● பெரும்பாலான இந்திய எம்.பி.கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டிருந் தவர்கள். கடந்த ஒன்பது நாடாளு மன்றங் களின் மொத்த உறுப்பினர்களுள் 1491 பேர் விவசாயிகள். எண்ணிக்கையில் அடுத்தபடி உயர்ந்துள்ளவர்கள் வக்கீல்கள் : 1026.

● அனு என்ற தமிழ் மாத இதழ் போஸ்ட் கார்டில் அச்சிடப்படுகிறது!

● பல்லவி ஜோஷியும் கிட்டு கிட் வானியும் நடிக்கும் 'ருக்மாபாய் கி ஹவேலி' என்ற ஹிந்தி படத்தில் ஒரு ஆண் பாத்திரம் கூட கிடையாது! கோவிந்த் நிஹ் லானியின் படம் இது.

● அடுத்தடுத்த மூன்று தமிழ்ப முதல் வர்களுடன் நடித்த பெருமை, நடிகை மனோரமாவுக்கு மட்டுமே உண்டு. அண்ணாதுரை, கருணாநிதியுடன் நாடகங் களிலும் எம். ஜி. ஆருடன் திரைப்படங் களிலும் நடித்துள்ளார் மனோரமா. (ஜெயையும் சேர்த்துக் கொள்ள வேண் டாமோ?)

● இடைவெளியின்றி மிக நீண்ட காலத்துக்கு இயங்கிய பல்கலைக் கழகம் 'நாலந்தா' (பீஹார்) கி. மு. ஆறாம் நூற்றாண்டில் ஆரம்பித்து, கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் முகமது கோர் அனுப்பிய படைத் தலைவன் பக்தியார் கில்ஜியால் தரைமட்டம் ஆக்கப்படும் வரை தொடர்ந்து செயல்பட்டது.

● பத்தொன்பது வயதில் அம்பயரிங் செய்து மிக இளைய அம்பயர் என்ற சாதனை படைத்தவர் டாமினிக் கான்டோ.

● டென்னிஸ் பந்தயத்தில் தந்தை மகனை எதிர்த்து ஆடினார். தந்தை : ராம நாதன் கிருஷ்ணன்; மகன் : ரமேஷ் கிருஷ்ணன். 1976 இல் ஹைதராபாதில் நடந் தது! வென்றது ரமேஷ்.

● இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியர் தேவிந்தர் குமார் மெஹ்தாவுக்கு மூன்று முறை ஹைஜாக் செய்யப்படும் அனுபவம் கிட்டியுள்ளது!

நன்றி : லிம்கா புக் ஆஃப் ரெகார்ட்ஸ் 1992
வெளியீடு : Limca Beverages Ltd, Andheri East, Bombay - 400 099.
விலை : ரூ 125/-



நாம்தான் சரியாகப் படிக்க முடியலை நம்ம குழந்தைகளாவது நன்றாகப் படிக்கட்டுமே என்று எனது குழந்தை களை கான்வெண்டில் சேர்த்தேன்.

கஷ்டமினி சுலபமா!...

கொஞ்சநாள் வரைக்கும் என் கணவர், குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து அவர்கள் ஹோம் ஒர்க் செய்ய மிகவும் உதவியாக இருந்தார். ஆனால் அவருக்கு, ஆபீஸ் வேலை அதிகமாக இருந்ததால் அவரால் குழந்தைகளுக்கு ஹெல்ப் பண்ண முடிய வில்லை.

குழந்தைகள் ஹோம் ஒர்க் செய்ய எனது உதவியை நாடும் போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். அதுவும் இங்கிலீஷ்கிராமர் சம்மந்தமாக அவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் திண்டாடி னேன்.

எனக்கு இங்கிலீஷ் தெரியாது என்பதை குழந்தைகளிடம் சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை.

வாரப் பத்திரிக்கை ஒன்றைப் புரட்டும் போது "வீட்டிலிருந்தபடியே இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்" என்ற விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

ட்ரை பண்ணிப் பார்க்லாமே என்று, அவரது சம்மதத்துடன் விவேகானந்தா கல்வி நிலையத்தில் சேர்ந்தேன்.

முதல் மூன்று மாதங்களில் வாக்கியங் களை அமைக்கப் பழகி, ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டேன்.

அடுத்த மூன்று மாதங்களில் அவர்கள் சொல்லியிருந்தபடி பயிற்சி களைச் செய்து பழகி "ஸ்போக்கன் இங்கிலீஷைக்" கற்றுக்கொண்டேன்.

இப்பொழுது குழந்தைகளுக்கு, என்னால் இங்கிலீஷ் கிராமரை அவர் களுக்குப் புரியும் வகையில் சொல்லிக் கொடுக்க முடிகிறது.

குழந்தைகளோட சேர்ந்து நானும் இங்கிலீஷில சரளமாகப் பேசும் போது எனக்கே ரொம்ப பெருமையா இருக்கு!

_Mrs. ஜானகி சுந்தர்

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஒய்வு நேரத்தில், தபால் மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

கீழ்க்கண்ட முகவரியில் இன்றே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி.நகர்.
சென்னை 600 017.



ஈ சமீபத்திய சட்டம் பிறப்பிக்கப்படு முன்னர் நீதிமன்றத் தீர்ப்பைக் கிண்டல் செய்து வாஷிங்டன் போஸ்ட்டில் வெளியான கார்ட்டூன்.

இறப்பதற்கு உரிமை வழங்கும் சட்டம்!

எட்டு ஆண்டுகளுக்கு முன் நேன்ஸி க்ரூஸான் என்பவள் கார் விபத்தில் அடிபட்டு, மருத்துவ மனையில் 'கோமா'வில் இடந் தான். உயிர் ஒட்டிக் கொண்டிருந்த போதிலும் நினைவற்றுக் கிடப்ப தால், 'நேன்ஸியின் வாழ்க்கை முடிந்துவிட்டது; எ ன வே, அவ ளுக்குச் செயற்கையாக உணவுச் சத்து அளித்து வரும் குழாயை நீக்கி அவள் உயிருக்கு விடுதலை கொடுக்க வேண்டும்' என்று குடும் பத்தார் கோரினர். மாநில அரசு மறுத்தது. சென்ற ஆண்டு அமெ ரிக்க சுப்ரீம் கோர்ட் அந்த மாநில அரசின் முடிவை மாற்ற மறுத்து, மாநில அரசுகளுக்கு இது போன்ற வழக்கில் தீர்ப்பு சொல்ல அதி காரமுண்டு என்றும் தீர்ப்பளித் தது. பி ற கு சிக்கிரத்திலேயே நேன்ஸி இயற்கை மரணம் அடைத் தாள் - ஆனால் நேன்ஸியின் நெடுங்கால பரிதாப நிலை அமெ ரிக்க மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. தங்கள் உயிர் தங்கள் உரிமைப் பிரச்னை என்ற போராட்டம் தொடர்ந்தது. புதுச்சட்டம் பிறந் தது.

'The Patient Self-Determination Act of 1990' என்ற இச்சட்டம் டிசம்பர் 1, 1991 முதல் அமெரிக்காவில் அமுலாகியது: பதினெட்டு வயதான எந்த நோயாளியும் மருத்துவ மனைக்குப் போகும்போது, செயற்கை முறை களால் தங்கள் உயிர் காக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்து தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம். மருத்துவமனை அவர்களுக்கு இந்த உரிமை இருப்பதாய்த் தெளி வாகக் கூறி, தேவையான மனுவைப் பூர்த்தி செய்யுமாறு கேட்க வேண்டும். நோயாளியின் விருப்பத்தை நிறைவேற்றுவது மருத்துவர் களின் கடமை.

உயிரைப் பணயம் வைத்து....

வளைகுடாப் போர் முடிந்ததும் அமெ ரிக்க டெக்சஸ் மாநிலத்திலிருந்து மூன்று நிறப்புக் குழுக்கள் குவைத் எண்ணெய்க் கிணறு களில் நீரை அணைக்கப் புறப்பட்டன. அதற்கு முன் பாலைவனத்தில், இரு பக்க வீரர்களும் விட்டுப் போன கண்ணி வெடிகளைக் கண்டு பிடித்தேயாக வேண்டிய நிலை. இந்தத் துறை யில் வல்லுனர்களான ஸெர், கண்டுபிடித்த வெடிகளை வெடித்து, அபாயத்தைக் குறைக் கின்றனர். நீயணைக்கும் குழுவினர் பிறகு தங்கள் வேலையைத் தொடங்குகின்றனர். எரி யும் எண்ணெய்க் கிணறுக்கு அருகில் வெப்பம் சுமார் 82 டிகிரி செண்டிகிரேட் அளவைத் தாண்டு கிறது. ஒவ்வொரு எரிப்பிழம்பையும் நெருங் கும்போது உயிரைப் பணயம் வைத்துக் கடமை யைச் செய்கின்றனர்.

தீப்பிழம்பின் மீது இரண்டு அ ல் ல து மூன்று பெரும் குழாய்களைக் கொண்டு விரைவாக, லட்சக்கணக்கான லிட்டர் தண்ணீ ரைப் பாய்ச்சுவார்கள். இதற்கே இரண்டு மூன்று நாட்களாகலாம். அப்படியும் நீ அணைய வில்லையென்றால்?

அடுத்தக் கட்டத்தில், அபாயமான, துணி வான ஒரு முயற்சி எடுக்கப்படுகிறது. பெரிய பெட்டியில் வெ டி கு ண் டு (STICK DYNAMITE) களை அடுக்கி, இராட்சத 'கிரேன்' மூலம் பெட்டியைத் தூக்கி, எரியும் எண்ணெய்க் கிணற்றின் வாயில் இலாகவ மாகப் போடுவார்கள். அவ்வளவு டைனமைட் டும் வெடிப்பதற்குத் தேவையான பிராண வாயுவைத் தீப்பிழம்புகள் 'இயாகம்' செய் கின்றன. வெடிச்சத்தம் முடிவதற்குள் தீப் பிழம்பு தன் கொடூர ஆட்டத்தை நிறுத்திவிட்டு மடிகிறது. ஆனால் எண்ணெய் மட்டும் மேல் நோக்கிப் பீச்சிக் கொண்டே இருக்கிறது. அதை நிறுத்த வேண்டாமா?

வெ டி ம ரு ந் தால் உடைந்த குழாயின் வாயை அடைத்து மூட வேண்டும். இதுவும் அபாயமான கட்டம்தான். குழாயில் பொருத் தப்பட்டுள்ள 'போல்ட்'களைக் க ழ ற் ற வேண்டும். பெரிய சம்மட்டியால் அடிக்கும் போது தீப்பொறிகள் ஏ ற் ப ட் டா ல் எண்ணெய்க் கிணறு மீண்டும் எரியும். கவன மாக, இலாகவமாக ஒவ்வொரு 'போல்ட்' ஆகக் கழற்றப்படும் போது, அந்தச் சடங்கில் பங்கு பெறும் மூன்று, நான்கு பேர்கள் எண்ணெய் ஊ ற் று க் கு மேலே கரும் பூதங்கள் போல் க ட ன மை ய ச் செய்கிறார்கள். இ று தி யா க ஒரு புது மூடி குழாயின் வாயில் பொ ரு த் தப்பட்டு, எண்ணெய்க் கிணறு மூடப்படு கிறது.

'டெக்சஸ்'காரர்கள் தீ ய ணை ப் பை த் தொடங்கிக் கடந்த அக்டோபர் வரை சுமார் 350 எரிகிணறுகள் அணைக்கப்பட்டுள்ளன.

வாஷிங்டன் ஸ்ரீதரன்

ஹவாலா ஹல்வா!

நாளிதழ்களில் ''ஹவாலா பேரம்'' என்று நீங்கள் படித்திருக்கலாம். 'அப்படி என்றால் என்ன?' என்றும் சிலர் யோசித்திருக்கலாம்.

ஓர் அமெரிக்க டாலருக்கு ரிஸர்வ் வங்கி அதிகாரபூர்வமாக வழங்கும் தொகை ரூ 26. ஆனால் ஹவாலாவில் ரூ 35/- அல்லது அதற்கு மேலும் கூடக் கிடைக்கும். ஆக ஹவாலா என்பது சட்டத்துக்குப் புறம்பானது. ஆயினும் நடக்கவே செய்கிறது. ஏன்? எப்படி?

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அந்நியச் செலாவணி நிலைமை திருப்திகரமாக இல்லை. டாலர், ஸ்டெர்லிங், யென் ஆகிய வற்றுக்குப் பஞ்சம். சில காலம் முன்பு நமது அந்நியச் செலாவணி கையிருப்பு அடிமட்டத்துக்குப் போய் விட, ஒரு வாரத்துக்கான இறக்குமதிக்குக் கூட பணம் தர நம்மிடம் அந்நியச் செலாவணி இருக்க வில்லை. கையில் கப்பறை ஏந்தி பல நாடு களுக்கும் சென்று கடன் கேட்க நேர்ந்தது. நமது தங்கக் கையிருப்பை அயல்நாட்டில் கொண்டு போய் அடகு வைத்து இந்த டாலர் கடனைப் பெற நேர்ந்தது. 40 டன் தங்கத்தை பாங்க் ஆப் இங்கிலாந்தில் அடகு வைத்தோம். இவையெல்லாம் நமக்கு அயல்நாட்டுப் பணம் அத்தியாவ சியமாகத் தேவைப்படுவதை உணர்த்தும். அந்நியப் பணம் நமக்குக் கிடைக்கும் விதங் களில் மிக முக்கியமானது, அயல்நாட்டில் வசிக்கும் இந்தியரிடமிருந்து வருவதாகும். இவர்கள் அங்கே வேலை பார்த்துச் சம்பாதித்து, இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பத்தினருக்குப் பணம் அனுப்பு கிறார்கள். இப்படி கோடிக்கணக்கில் வரும் பணத்தை ரிஸர்வ் வங்கி மூலம் அரசு இங்கே ரூபாயாகத் தந்து விட; நமது அந்நியச் செலாவணி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

மற்றொரு புறத்தில் கள்ளக் கடத்தல் காரர்கள் இந்தியாவுக்குள் தங்கம், வெள்ளி, தவிர பல எலெக்ட்ரானிக் பொருள் களைக் கொண்டு வருகின்றனர். அவர் களுக்கு இங்கே ரூபாயாகத்தான் கிடைக் கிறது. இதை அவர்கள் அயல்நாடுகளில் பயன்படுத்த முடியாது. அதனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அயல் நாட்டிலிருந்து இந்தியாவுக்குப் பணம் அனுப்புபவரிடம் போய், ''ஒரு டாலர் அதிகாரபூர்வமாக அனுப்பினால் உங்கள் உறவினருக்கு 26 ரூபாய்தான் கிடைக்கும்; நாங்கள் பத்து ரூபாய் கூடத் தருகிறோம், அந்த டாலர்களை எங்களிடம் கொடுங் கள்'' என்று கேட்டு வாங்கிக் கொள்கி றார்கள். கள்ளக் கடத்தலில் இங்கே பெற்ற ரூபாயை அந்த உறவினர்களுக்குக் கூடுதல் ரேட்டில் கொடுத்து விடுகிறார்கள். இந்திய அரசு நடவடிக்கை எடுக்கிறது என்றாலும் இவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது ரொம்பக் கஷ்டம்.

சமீபத்தில் அயல்நாட்டுச் செலாவணி நிலைமையை அபிவிருத்தி செய்ய இந்திய அரசு, ''யார் வேணுமானாலும் அயல் நாட்டுப் பணத்தை இந்தியாவுக்கு அனுப்ப லாம்; அயல்நாட்டுப் பணம் எப்படி கிடைத்தது என்று கேட்க மாட்டோம்'' என்று அறிவிக்கப் போக, ஹவாலாவில் ஒரு டாலருக்கு ரூ 40 கூடக் கிடைக்க ஆரம் பித்து விட்டது! இங்கே கறுப்புப் பணம் வைத்திருந்தவர்கள், அயல்நாடுகளில் டாலர்களை வாங்கிச் சேர்க்க ஆரம்பித்து விட்டார்கள்! இதற்கு ஹவாலா ஆசாமிகள் உதவினார்கள். அயல்நாட்டுப் பத்திரிகை களில் விளம்பரங்களே வர ஆரம்பித்து விட்டன!

இதற்கெல்லாம் அடிப்படையான காரணம், ரூபாய் தன் மதிப்பை இழப்பதும் டாலர்களையே எல்லோரும் விரும்புவதும் தான். இந்த நிலை மாற வேணுமானால் நமது இறக்குமதியை விட ஏற்றுமதி பல மடங்கு அதிகமாக வேண்டும். சின்னஞ் சிறு நாடான தாய்வான் 84 பில்லியன் அமெ ரிக்க டாலர்களை அந்நியச் செலாவணி கையிருப்பாக வைத்திருக்கிறது (ஒரு பிலி யன் = ஆயிரம் மில்லியன்) நாமோ 60 பில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை அயல்நாடு களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். ஹவாலா பேரம் சக்கைப் போடாக நடக்காமலிருக்குமா?

- வி. கோபாலன்

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி. முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543. ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-. ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

ஆண்கள் மட்டுமே!
இது வீடியோக்க பெண்களுக்காகாது!!

எல்ஐசி மியூச்சுவல் ஃபண்ட் — சாதனை புரிந்து நிரூபித்துள்ள ஒன்று அறிமுகமாகிறது

தனலக்ஷ்மி (II)

தனிப்பட்ட முறையில் பெண்களுக்கான ஓர் ஒப்பற்ற முதலீட்டுத் திட்டம்!

உங்களுடைய தேவை எதுவாயினும் சரி, உங்களுக்கு எப்போது வேண்டுமாயினும் சரி... பிறந்த நாள், திருமண ஆண்டு நிறைவு, பண்டிகைகள் போன்ற எல்லா விசேட செலவுகளுக்கும் உதவும் விதம் கச்சிதமாய் வளங்கிடும்!

- யூனிட்கள் ரூ. 10 வீதம் மட்டுமே கிடைக்கிறது
  முதலீட்டிற்கான குறைந்தபட்சத் தொகை ரூ. 1000/- அதிகபட்சம் எவ்வளவு வேண்டுமாயினும் இருக்கலாம்.
- வரதிகேற்ப டிவிடெண்டைப் பெறலாம் – டிவிடெண்டை மொத்தமாகவோ அல்லது அதிகபட்சம் ஆண்டொன்றுக்கு 4 தவணைகள் வரையிலோ, உங்கள் தேவைகளுக்கேற்ப, நீங்கள் விரும்பும் தேதிகளில் பெறலாம். அல்லது யூனிட்களாக மீண்டும் முதலீடு செய்யலாம் – வளர்வு தற்கு!
- தவணைகளில் எடுக்கப்பட்ட டிவிடெண்டும் அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட் போலவே, அதே விதத்தில் வரியை ஈட்டும்.
- ஆண்கள் 2-வது மற்றும்/அல்லது 3-வது விண்ணப்பதாரர்களாய் இருக்க முடியும்.
- ஆண்களின் பெயரிலும் யூனிட்களை எளிதில் மாற்றியமைக்கலாம்.
- 2 ஆண்டுகளுக்குப் பிறகு யூனிட்களைக் கொடுத்து பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- வரிச் சலுகைகளும் உண்டு!

■ வெவ்வேறு விண்ணப்பங்கள் மூலம் தொடர்ந்து அதிகரிக்கும் மாத வருவாய் பெற ஓர் அரிய வாய்ப்பு.

முதலில் வருமானத்தை சுவாரசியமாக வெகுமதிகள்!	
காலம்	ஒவ்வொரு ரூ. 1000க்கும்
டிசம்பர் 16-31	ரூ 15
ஜனவரி 1-10	ரூ 10
ஜனவரி 11-20	ரூ 5

1991-92-க்கு எதிர்பார்க்கும் டிவிடெண்ட் — ஆண்டொன்றுக்கு 15% வருங்காலத்தில் அதிகரிக்கலாம்.

1990-91-ல் அறிவிக்கப்பட்டுள்ள டிவிடெண்ட்கள்			
தனஷ்ரீ-89	16%	தனலக்ஷ்மி	13%
தனஷ்ரீ-90	14.5%	தன 80 CC B (1)	12%
தனஷ்ரோக	14%	தன 80 CC (1)	11%
தன விருத்தி	13.5%		

கொடுக்கப்பட்ட ஆண்டு நிதியாண்டின் நிலவரப்படி செய்யப்பட்ட கணக்கீடுகளில் மட்டுமே பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு மேலும் விவரங்களுக்கு, தயவு செய்து உங்களுக்கு அருகாமையிலுள்ள எல்ஐசி கிளையையோ அல்லது எல்ஐசி மியூச்சுவல் ஃபண்ட் முகவரையோ அணுகவும்.

தனலக்ஷ்மி (II)

நம்பகத்தன்மைக்கே சொந்தமான ஒரு மியூச்சுவல் ஃபண்ட் திட்டம்.

முந்துங்கள்! ஜனவரி 31, 1992 வரையே திட்டம் நிறைவுற்கும்.

எல்.ஐ.சி. மியூச்சுவல் ஃபண்ட்

உங்கள் நோக்கம் நிறைவேற நாங்கள் உதவுகிறோம்

மியூச்சுவல் ஃபண்டுகளும் செக்யூரிட்டி முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். கடந்தகால சாதனைகள் வருங்கால விளைவுகளை கட்டிக் காட்டுவதாக இருக்கும் எனில்லை.

oca/LIC 11 91 TMR

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

THE GINSENG THAT

உங்களால் முடியும்

பகிர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, ஒன்று கூடி இன்பமாகக் கழிந்த நாட்கள் இவையெல்லாம் நினைவிருக்கிறதா? ஆம், அந்நாட்களில் உள்ளம் நாடியதற்கேற்ப உடல் ஒத்துழைத்தது.

அந்நாட்களைத் திரும்பப் பெற வேண்டுமா? உபயோகியுங்கள் **வினோஃபிட்** ஜின்செங்*.

வினோஃபிட்-ல் கொரியாவின் ஜின்செங் மற்றும் இன்றியமையாத மூலிகைச் சாறுகள் சேர்ந்துள்ளதால் உடலின் இரத்த ஓட்டம், நீரிழ சக்தி மற்றும் இன்றியமையாத உறுப்புகளின் செயலாற்றம் மேம்படுத்தப்படுகிறது. மேலும், சோர்வு குறைந்து உடலில் சக்தி அதிகரிக்கிறது.

இதைத்தவிர, **வினோஃபிட்** சருமத்தை எழிலடையச் செய்து, நோய்களை எதிர்க்கும் திறனை உடலிற்கு அளித்து மூளையின் செயலாற்றலை அதிகரிக்கிறது.

* **வினோஃபிட்** ஜின்செங் கேப்சூல் மற்றும் டானிக் கடை மற்றும் கடைகளில் கிடைக்கும்

வாழ்க்கையை முழுமையாக வாழ தொடர்பு கொள்ளுங்கள் என்ற இலவச **வினோஃபிட்** ஜின்செங் பிரசுரத்தையும் பெற கீழ்கண்ட கூப்பனை தெளிவாக பெரிய அச்செழுத்துக்களில் நிரப்பி அனுப்பி வைக்கவும். எனது 55வது பிறந்த தினம் 55/01/01 என குறிப்பிடத் தவறவேண்டாம்.

(பெரிய அச்செழுத்துக்களில் எழுதவும்)

பெயர் : .....

முகவரி .....

.....

நகரம் : ..... பின் : .....

வினோஃபிட்
ஜின்செங்

வோக்ஹார்ட் வழங்கும் தரமான தயாரிப்பு

வாழ்வில் துடிப்புணர்வுடன் வாழ.

TRITON 91 WL 173 TM